உ

ஸ்ரீசற்குருவேநம:.

நவநீதசாரம்.

இஃது.

வசனரூபமாய்

சகலவேதாந்தசாஸ்திரங்களுமடங்கியிருக்கின்

றமையால் முமுட்சுக்களிற்கற்றவர்களன்றி

மற்றவர்களும் எளிதிலறிந்து

மோட்சானந்தத்தைப்

பெறும்படியானவுபகாரார்த்தத்தைக்

கருதி

சேலஞ்சில்லா சிவில் கோர்ட்டு-வக்கீல்

ம-௱-௱-ஸ்ரீ.

அப்பாசுவாமிபிள்ளை

அவர்கள்

வினாவிடைகளாக்கிப் பிழையறப் பரிசோதித்து,

அச்சிட்டுத்தருகவெனக்கேட்டுக்கொண்டபடி

பாரிப்பாக்கம்.

முனியப்பமுதலியாரால்

தமது

மெய்ஞ்ஞானவிளக்கவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

குரோதன௵ - ஆடிமீ. 1864

௪

சிறப்புப்பாயிரம்.

ஆசிரியப்பா.

மலர்தலையுலகின் மன்னுயிரனைத்தும்
அலர்தருவெம்மலகப்பட்டுழலும்
கிருமியேபோலக்கிடந்தாணவமுதல்
இருமுதலில்லாத்தீயமும்மலத்தளைப்
பட்டுழூர்ச்சிரநபல்வகைத்துயரம்
விட்டுயவமுதசஞ்சீவமேயென்னச்
சிறந்துளவமலநூற்செப்பிலெண்ணிலதா
நிறைந்தவாரியர்கணிகழ்த்தினரவற்றொன்
றாகியநூனவமாம்பொருளமைந்து
பாகியும்புகன்றிடப்பொருந்தாச்சிறப்புறு
தவநிதசாரமாநாணிலத்ததனை
அவமறவிளங்கவைத்தருளுகியென்னக்
கங்காகுலமாங்கலசவாரிதியில்
மங்காமதியெனவந்தவதரித்தோன்
நலமிகுசுப்பராயநரேந்திரன்
குலவுமாதவத்திற்குமரனென்றுதித்தோன்
பல்லாண்டுசெல்வியார்பயிறருஞ்சலஞ்
ஜில்லாசிவில்கோர்ட்டினில்வக்கீலெனும்
அப்பாசுவாமிப்பிரமபிதானத்தோன்
செப்பார்நகர்த்திருச்சேர்தடந்தோளினன்
பு ற்றமவனுகப்புகாநக்கனைந்து
சரில தாரிகைபூதனிநீஇ
முத்திலிலைவித்தனனெளிர்
செழுபாமரையினந்தேடுமோர்பொருளே
அம்பேயாலியாயனைமதால்போல
இம்பர்நாட்டுள்ளவெம்போலியரும்
எளிதினின்முத்திபெய்தவுருப்புனைஇ
வெளிவந்தாண்டருண்மெய்க்குருமூர்த்தி

சிறப்புப்பாயிரம்.

அருந்திறலோர்டன்பரசமகிழ்ந்திறைஞ்சத்- *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
வாசப்பரி[illegible]வணங்குசெங்கமல- *
[illegible]நன்னெடிப்பெற்றோன்- *
கோதமாமரிகரிசூலவி[illegible]நகை- *
[illegible]மாரிபணிவிணையடி- *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
[illegible] *
பைங்கூழ்தழைப்பப்பொருபுயலைத்- *
துங்கமாமன்றம்பொழிதாமுகிலுள்ளம்- *
கனியப்பருகுவோர்க்குருகும் *
மூனியப்பராமமுதலத்தோனே- *

ஸ்ரீ காஞ்சீபுரம் - இராமசாமி நாயகர் இயற்றிய

ஸ்ரீ சற்குருவேநம:

நவநீதசாரம்.

காப்பு - பாயிரம்.

விநாயகர் - வணக்கம்.

ஆரணமுதலாட்சொல்லு மாகமமனைத்துந்போற்றும் ...
வாரணமுகவன்றனை வணங்கின்முக்கரணத்தாலுங் ... *
காரணவறிவின்கண்ணாய்க் கற்பனைக்கடந்தஞான ... ...*
பூரணசுகநவநீத போதமங்கருளுந்தானே... ....(௧)

அருளிறை-வணக்கம்.

சொப்பிரகாசவகண்டிதநிசமாஞ்சோதியாய்நிறைந்த மெய்ஞ்ஞானத்.*
தற்பரமானசிவமெனுமிரதந்தானுமேகற்கண்டாய்ச்செனிதமே... *
புற்பவமானசுகதுக்கத்தமிழாதொருப்படுமாறெனக்களித்த ....*
சிற்பரமானவரங்கதேசிகன்றன்றிருவடிசென்னியிற்சேர்ப்பாம் ... (௨)

நூல் வரலாறு.

வேறு.

கடைந்தவேதாந்தவெண்ணெய்க் கட்டியாய்த்திரட்டிமுன்னோ ...*
திடம்படவைத்தாரத்தைச் சேரவேயுருக்கிரண்டு ... ...*
பிடம்படநவநீதத்தின் சாரமாய்வருந்தேனிதனை .. ..*
படைந்தவர்மடமைநீங்கி யல்லலற்றினிதுவாழ்வார்... ... ... (௩)

அவையடக்கம்.

நானுமொன்றறிந்தானென நானுவானவொருபொருளைத் ... ...*
தானுமுளக்கண்ணைத்தலைத் தன்மையுணர்ந்தோர்க்கிடைபுகலல் ... *
மானுகந்தான்மணிப்படத்தால் வையஞ்சுமப்பமற்றதன்முன் ... ...*
பூநாகந்தான்சுமப்பலெனும்புன் மையறிவைநிகர்க்குமால்... ... (௭)

பாயிர - முற்றிற்று.

௧

முதலாவது.

வயிராக்கியப்பிரகரணம்.

§§*§§

நூல்.

அவதாரிகை.

இந்நூலாசிரியர் தாமடைந்த நிரதிசயானந்த சாட்சாத்காரசுவானுபூதிப் பிரத்தியட்சத்தை முமூட்சுக்கள் எளிதினுணர்ந்துநித்திய திருப்தியாகும்பொருட்டுக்கிருபைகூர்ந்துவயிராக்கியப்பிரகரணம் - முமூட்சுப்பிரகரணம் - உற்பத்திப்பிரகரணம் - திதிப்பிரகரணம் - உபசாந்திப்பிரகரணம்- நிருவாணப்பிரகரணம்-என்னும், அறுவகைப்பிரகரணங்களால் இந்நூலினுமுடிக்கத்தொடங்கி பூர்வஜென்மசுபஸ்காரபலத்தினாலிந்நித்தஆவரணவிலட்சணப்பட்டு ஆத்மானாத்மவிவேகம் பண்ணவந்தசீஷனுக்கு-பிரபஞ்சவயிராக்கியமுண்டாகும்படி முதலிலவயிராக்கியப்பிரகரணங்கூறுகின்றார்.

கவி.

தேகமேயான்மாப்போகஞ்சேர்ந்திடன்முத்தியாமென் ....*
றேகமின்மூகாயநின்றிறந்தவர்பிறவாவென்ற ... . *
மோகங்களைநீக்கிமுத்தியையடைவதற்கே .. .. *
தாகமாயிருக்குமுத்தர்தானுமேதேவராவார் .. .. (௧)

தேவர்மானிடராகுஞ்செனித்திடல்வளர்தன்மாய்தன் ... ...
மூவகையிடத்துந்துன்பமாதலான்மோகமென்னுஞ் ... ...
சீவனுட்பற்றைநீக்கச்சிந்தித்தெத்திறத்தாலுந் ....
தாவுமால்துடைத்தல்வேண்டுஞ்சற்குருசகாயத்தன்றே... ...(௬)

இதன்பொருள்.

வினா. தேகமேயான்மாவல்லாமல் உள்ளேயாகிலும் வெளியேயாகிலுந் ஆன்மாவேறில்லையென்னில்.

விடை. காரணங்களிருக்கிறபடியாலப்படிசொல்லக்கூடாது.

வினா. மனமொன்றேதவிரவேறுகாரணங்களுமில்லை - போகங்களில்ஸ்திரீசையோகமேமுத்தி - அவர்களைச்சதாகாலமும் நினைத்திருப்பதே கல்வி - சதாகாலமும் அவர்கள் விசாரத்தினாற்சரீரமிளைப்பதே தவம் - சார்வதாஅவர்களுடன்சரசவுல்லாசமாய் வசனித்திருப்பதேஜீவன்முத்தி - எப்போதும்அவர்களது ஸ்தனங்களிற்கூடிச்சுகசயோகவின்பத்திலமிழ்ந்தியிருப்பதே விதேகமுத்தி - அவர்களணிந்துள்ள புஷ்பசந்தனாதிகளின் மணங்களை ஆக்கிராணித்திருப்பதேசுவர்க்கபோகம் - அவர்களதரபானமேதேவாமிர்தம் - இப்படிப்பட்டமதத்தைவிட்டுப் பிரிந்தவனேநரகத்தையடைவன் - இறந்தவர்களொருகாலத்தும் பிறப்பதேயில்லை - அப்படிபிறப்பதுண்டானால் முன்னுள்ளவறிவு இப்போதிருக்கவேண்டும் - அப்படிகாணாமையால்தேகமேயான்மா - போகமேமோக்ஷம் - இறந்தவர்கள்திரும்பவும்பிறவார்களென்பதேநிச்சயமென்னில்.

விடை. இப்படியுளறிக்கொண்டு மிருகபட்சிகளைப்போல அறிவில்லாதவர்களாய் அருந்தல் பொருந்தல்மாத்திரமாய் வீண்காலம்போக்குவார்களாகில் அவர்களுக்குநரகமேயன்றிமோட்சமில்லை - மேலும்நாமிறந்தால் நமக்கிருப்பிடமெங்கே - நாமெங்கேயிருந்துவந்தோம் நமக்குக் கதியேதென்றுவிசாரித்தறியவொட்டாமல் அவர்கள்புத்தியை மறைத்திருப்பது அஞ்ஞான காரியமல்லாமல் வேறல்ல.

வினா. அஃதெப்படியென்னில்.

விடை. தேகமே அறிவாகியவான்மாவென்றால், தேகமிருக்குங்காலமெல்லாம்அறிவிருக்கவேண்டுமே அப்படிகாணாதபடியினால்தேகப்

ணமாய்க்கிடக்கும்போது அறிவாகியவுயிர்போய்விடுதலால்தேகத்தினுள் அறிவாகியதேகியொருவனுண்டு - அவன் இத்தேகத்தைவிட்டுமறுதேசத்திற்போனதால்இத்தேகம்பிணமாய்க்கிடக்கின்றது - ஆகையினால்வேறே தேகியொருவனுண்டென்றும்தேகம்ஆன்மாவல்ல ஜடமென்றுந் துணியப் பட்டது.

வினா. ஸ்திரீபோகமேமோட்சமல்லவென்பதெப்படியெனில்.

விடை. மலங்களைப்புசிக்கவேண்டுமென்றிச்சித்துத்திரிகின்றவூர்ப்பன்றியானது அன்னியரால்விடப்பட்ட அசுத்தமானமலங்களைப்புசித்துக்கோடையானவெய்யிலால் தவித்துச்சூடுங்காண்டுவரும்வழியில் அசுத்தமாகியசாக்கடைச்சேற்றைக்கண்டு அதில்போய்விழுந்துபுரண்டு அவ்வசுத்தநீரைக்குடித்துத் தன்னிளைப்பாகிய தாகசோகந்தணிந்து சுகித்திருப்பதுபோலமூடனானவன் ரத்தமாங்கிஷமலமூத்திரதிட்டானதுர்க்கந்தங்கணிறைந்து அனேக ஜென்மங்களிற்செய்துள்ள பஞ்சமாபாதகங்களனைத்தையுமொன்றாகக்கூட்டிப் பிரமன் ஒருபெண்வடிவாகச் சிருஷ்டிக்கவந்த மாயாரூபத்தைக்கண்டு சுகமென்றிச்சித்து அவர்கள் எச்சிலாகிய வாய்நீரையுண்டு தனங்களாகிய மாமிசக்கட்டிகளிலழுந்தி அசுத்தமாகிய கால்களையுடைத்துக்கன்னகளிலொற்றிக்கொண்டு யோனியாகிய வுப்பளற்றில்விழுந்து சதாகாலமுமதுவேயின்பமென்றுசுகித்திருப்பன் - இந்த மூடனும் அந்தச்சாக்கடைச்சேற்றில்விழுந்து புரளுகின்ற ஊர்ப்பன்றியுஞ்சரியாம் - ஆகையால்பரிசுத்தமாகிய மோட்சவிருப்பமுடையவர்கள் சுத்தநித்தராயிருக்கின்ற ஈஸ்வரானுக்கிரகம்பெற்று அடிமைத்திறஞ்செய்கின்றபெரியோர்களைக்கண்டுபூசித்து அவர்களால்நித்தியசுகமாயிருக்கப்பட்டமோட்சத்தைப்பெறுவார்கள் - அங்ஙனமிருக்கப் போகமே மோட்சமென்பதுகூடாது இறந்தவர்கள் பிறப்பார்களென்பதே துணிவு.

வினா. இறந்தவர் பிறப்பாரென்பதெப்படியென்னில்.

விடை. சாக்கிரத்தில்மனோராச்சியம்பண்ணும்போது சீவன் ஆசத்தியாய் நினைந்தபொருள்களைஸ்தூலத்தைக்கைவிட்ட சொப்பனவஸ்தையில்சத்தியமாய்க்கண்டனுபவிப்பதுபோல இந்தப்பிறப்பில் ஆசத்தியாயேதியிருந்த வாசனைகளை மரணமடையும்போது மறுபிறப்புக்கு வித்தாகி அதற்கேற்றசரீரங்களையெடுத்தனுபவிப்பனென்பதே துணிவு.

வினா. இறந்தவர்கள் மீண்டும்பிறப்பது மெய்யானால்முன்னுள்ள நினைவுகள் தோற்றவேண்டுமே யென்னில்.

விடை. இறந்தவர் [illegible] பிராயச்சித்திராதிதாபதகப்பனுஞ் சொப்பனுவஸ்தையிலே மெய்யாகவிருந்திருக்க [illegible] அனுபவிக்கும்போது இது பொய்யென்று [illegible] அறியவில்லை [illegible] விழித்தபோது சொப்பனத்திலிருந்த சீவன் [illegible] இப்போதுஞ் சொப்பனங்காணுகிறான் இவனுக்கேன் முன்னுள்ள நினைவுகள்தோற்றவில்லை. ஆதலாலிறந்தவர்கள் பிறந்தாலுமுன்னிருந்த நினைவுகள் தோற்றாதென்பதே துணிவு.

வினா. அப்படி தோற்றாமைக்கு காரணமென்னவென்னில்,

விடை. இந்த சரீரத்தால் [illegible] அபிமானமான சாக்கிரதையிருந்து பிற [illegible] சூக்ஷுமதேகத்தை யபிமானிக்கிறதனால் முன்னுள்ள நினைவுகள் தோற்றவில்லை இப்படியே எழுவகைப்பிறப்பிலுமுண்டான நினைவுகளும் மறந்து [illegible] தைவிட்டு மறுபிறப்பாகிய வேறே தேகத்திற்புகும்போது இந்தச்சீவன் மறந்துவிடுகிறபடியால் [illegible] இறந்தவர் பிறவாரென்கிற விவாதம் விட்டிட்டு இறந்தவர் பிறப்பாரென்ற சித்தாந்தமே கொள்ளப்பட்டது.

வினா. ஆனால்சிலர்தேவபோகத்தைக்குறித்து யாகாதிகருமங்களைச்செய்கிறார்களே அதனாலின்பமில்லையோ வென்னில்,

விடை. அந்தத்தேவப்பிறப்பிலு மின்பமில்லை - எப்படியென்றால்தேவயோனிகளிற் பிறக்கின்றகாலத்திலுந் துக்கம் திதிகாலத்திலும் பிரமாதிதேவர்களாலும் ரிஷீஸ்வரர்களாலும் ஒருவர்க்கொருவரால் நேரிடும் அன்னியோன்னியசாபத்தினாலும் ஒருவர்பெண்சாதி தனங்களை யொருவரபகரிப்பதினாலும் ராக்ஷதர்கள்தங்கள் போகபூமியைப்பிடுங்கிக்கொண்டு அடித்துத் துரத்திவிடுவார்களென்கிறபயத்தினாலுந் துன்பமேயல்லாமலெள்ளளவுமின்பமில்லை - மரணகாலத்திலும் முன்செய்துள்ள யாகாதிகர்மபலத்தினால் எழுபத்தொரு சதுர்யுகம் அனந்தபோக

மனுப்பவித்துத்தீர்ந்தவுடன் அங்குள்ளதேவதைகளால் பிடித்துத்தள்ளப்
பட்டு நட்சத்திரங்களாகித் தலைகீழாய்ப் பூமியிலிறங்கிவிழும்போதுண்டாகு
வ்வானந்தமறந்தனித்தியமாய்ப் [illegible] மீண்டு நிற்பவிக்குங்காலத்
திலும் முன்பு பசுபந்தனம் பண்ணின பாவகர்மத்தினால் பூமியில் நாக்கு
ப்பூச்சி கிருமிகளாய்ச் செனிப்பதினாலுந் துன்பமெய்பது துணிவு.

வினா. ஆனாலிந்தமானிடப்பிறப்பில்தானின்பமில்லையோவெனில்;

விடை. இந்தமானிடயோனிகளிற்பிறக்கின்றகாலத்திலும் மாதாவின்கரு
ப்பப்பையிற் கட்டுண்டு அவளது மலமூத்திரக்கிருமிகளினாலு
ம் மூலாக்கினியிலும் வெதும்பி அவள் அன்னபானாதிகளை நிறையவுண்
டம்போது உடல் நெருக்குதலினால் மூச்சுவிடுதற்கிடமின்றிய வருத்தத்தி
னாலும் அவளெண்ணெழுகைபோது எழுகின்றவுதராக்கினியினால் சுடப்படுவதி
றபிராயமாவதிலும் பிறவிநாக்குங்கால் பிரசூதவாயுவினால் மோதுண்
ண்டு ஆலையிற்பட்ட கரும்புபோலும் செக்கிலிட்ட எள்ளுப்போலும்
யோனித்துவாரத்தின் வழியே நெருக்குண்டு மலமேலக்குந் [illegible] தலைகீழாய்த் தன்
னுவழுதுபோல் பூமியிற்பிள்ளையாய் விழுகின்றதினாலுந்துன்பம் - இள
காலத்திலும் சைசவப்பருவத்திற்கணைகள் பறவைகளாலுருந்தோ
ஷங்களினாலும், பாலப்பருவத்தில் மாதுருக்களரம்பிப்ப பலவியாதி
ளாற்படும் பிரயாசத்தினாலும், வாசிற்கல்லூசையின் குருக்களால் உபாத்தி
யாயர் முதலானவர்களாலுமடைகும் வருத்தத்தினாலும், குமாரப்பருவ
த்தில் தனதானியங்களைச் சம்பாதிக்கவேண்டுமென்றதாக மோகங்களினா
லும், அதற்கிடையூறுவருவதினாலும், விஷயவிச்சையினாலும், அ
கங்காரமிருப்பதினாலும், பழைய மதத்தைவிடாமலும், படித்துத் திரிகை
கள்பேசவருவதினாலுந் துன்பம் - விருத்தப்பருவத்தில் [illegible]
மிகுவதினாலும், நரைதிரைமூப்புகளினாலும், பலவியாதிகளுண்டாவதி
னாலும் மனைவிமுதலியோர்களுக்கு வியாதி வருவதினாலுந் துன்பமொரு
வனுக்குப்பிராணாதாரமாயிருந்தபிள்ளைசாகவும். அந்நேரம்வீடிடிந்து
விழவும், உழுகிறபயிர்சாகவும், கடன்காரர்வந்து [illegible], அவமான
ளிமறிக்கவும் வாராவிருந்துவரவும் வீட்டிலன்னாக்காசளவிலில்லாமல்
அயல்வீட்டில்கடன்கேட்க, அவர்களைக்கொடுக்கவொட்டாமல் முன் கட
ன்காரர்மறிக்கவும், இப்படிநானாவிததுன்பங்களினால் காற்றலைவான

சலத்திற் பிரதிபிம்பித்த சந்திரன்போற் கலங்கப்படுகிற வருத்த முண்டாகிறதுந் துன்பம் - மரணகாலத்திலும்வாத பித்த சுர க்ஷய குன்ம சூலைமுதலான பலரோகங்கள் மேலிட்டுச்சீவத்துவம் பேதித்திருக்கிறபோது நமனைக் கண்டதுபோல் வரும்பயங்களினாலும், நடுக்கங்களினாலும், ஊர்த்தசுவாசத்தினாலும் வருந்திச் சிலேத்துமத்தில் தட்டுண்டு வேதனையான பிராணப்பிரயாணகாலத்திற் காண்கிற துக்கங்களினாலும், அப்படிபிராண னீங்கினபோது நெருப்பாற்றிலுங் கும்பிபாகமான நரகத்திலும் சுடுகிறபாறையிலும் அசிபத்திரவனத்திலும் வீழ்த்தி, யமபடாள் தண்டிக்கப்பட்ட யாதனைகளினாலுந் துன்பம் - இப்படிதேவர் மானிடரென்னு மிருவகைப் பிறவிகளே துன்பமானால் ஏனையபிறவிகளாகிய மிருகபட்சி தாபராதிகளெல்லாம் துக்கசமுத்திரத்தழுந்தி பாவமான நரகங்களிற் படும்பாடுகளை யெல்லா மிவ்வளவென்றளவிட்டுச்சொல்லமுடியாது ஆகையினாலிந்தப்பிறவிக ளின்துக்கத்தையே விசாரித்தறியவேண்டும்.

வினா. விசாரித்து வைராக்கியமெப்படியென்னில்.

விடை. யானெனதென்னும் பற்றுக்களொழிந்தால் சீவத்துவங்கெடும் இந்த யானெனதென்னும் பற்றுக்களே சீவசொரூபம் இவ்விருவகைப்பற்றுக்களை முந்து வைக்கோல்களும்பற்றைவிட வேண்டும்.

வினா. எந்தவண்ணமென்னில்

விடை. பெண்சாதி பிள்ளைகள் கிரகம் பூமி தனதானியாதிகளை யென்னதென் றபிமானிப்பது ஆன்மாவுக்குச்சுபாவமல்ல - அது அறியாமையான மோகாந்தகார மூடத்தியினால்வந்தது.

வினா. அதற்குவிவரமெப்படியென்னில்,

விடை. பெண்சாதியானவள் ஒரு தாய்தகப்பனுக்கு மகளாயிருப்பதினாலும் நீ ஒரு தாய்தகப்பனுக்குமகனாயிருப்பதினாலும் அவளுந் நீயுந் தனித்தனியாய் இப்படி புறம்பாயிருக்க அவளென்பெண்சாதியென் றபிமானிக்கச் சந்திப்படுத்தி வரலாகுமா - உன்னைவிட்டு அவள்பிரிந்துபோய் விடுகிறாள் அவளைவிட்டு நீபிரிந்துபோய்விடுகிறாயாகையா லுனக்கவள்,

சொந்தமல்ல அவளை என்னதென்பதுகூடாது - பின்னும்பிள்ளையையெ ன்னதென்கிறாயே அந்தப்பிள்ளையைநீயாவுண்டாக்கினையா அல்லதுஉன் பெண்சாதியாலுண்டாக்கப்பட்டதா அல்லதுஅன்னியர்களாலுண்டான தாஇப்படியுங்கொருவராலுமுண்டாக்கப்படாதிருக்க விசாரியுங்கு துபிராந்தியேமேலுஞ்சொப்பனத்திற்பலபிள்ளைபெற்றதுபோலுமி ந்திரசாலவித்தையாலல்லவன்வித்தை காட்டினதுபோலும்பிரமசிருட்டி யினாலிருவருக்குநடுவே ஓர்பிள்ளையெனத்தோற்றியது இதனைப்படிஎ ன்பிள்ளையென்று சொல்லுவது தெருவிற்கண்டபிள்ளையை என்பிள்ளை யென்றொருவன் சொல்லுவான் அதுபோலப்பிரமசிருஷ்டியால் வந்தபிள் ளை பிரமன் பிள்ளையல்லாமலுன்பிள்ளையல்ல ஆதலால்பிள்ளையையென்ன தென்பதுகூடாது - அப்படியேஇந்தவீடுவாசல் பூமிதனதானியாதிசம் பத்துகளெல்லாமுன்தகப்பனாலார்ச்சிக்கப்பட்ட படியினாலும்அதினை நோக்கி விசாரிக்குமிடத்து நீயவனுக்குப் பிள்ளையாகாமற் போகிறபடி யினாலும்நீஇதுகளையும் என்னதென்பதுகூடாது.

வினா. அப்படிக்கல்ல நானே கஷ்டப்பட்டுத்திரவியங்களைச்சம்பாதித் து அதனால் வீடுவாசல் பூமியாதிகளைச் சேகரித்தேனே யெ ன்னில்,

விடை. அப்படியானாலுமந்தத்திரவியங்களுமுன்னதல்ல,

வினா. அதுஎப்படியென்னில்,

விடை. திரவியங்களெல்லாம் ராஜாக்களுக்குச் சொந்தமானதால் இந்தத் திரவியங்களையுமென்னதென்பதுகூடாது.

வினா. ஆனால் பெண்டுபிள்ளை திரவியமென்கிற ஈஷணாத்திரயங்களென் னதல்லவென்று போனாலும் இந்தத்தேகமானநான் இருக்கிறே னேயென்னில்,

விடை. தேகமுமுன்னதல்ல நீ ஒருவரிடத்தி லிரவல்வாங்கினது.

வினா. அதெப்படியென்னில்,

விடை. நெடுங்காலமாய்ப் பிறப்பிறப்புகளாகிய துக்கங்களிற்பட்டுதிரி யக்ஸ்தாவரங்களாய்ப்பிறந்துழுத்து அந்தப்பிரயாசையெல்லாம்

கின்றித்து விவேகத்தினாலறிந்து - நீ ஈஸ்வரனைநோக்கி இந்தச்சென்மசாபல்லியமாக்கவேண்டும்படி எனக்கோர்மானிடசரீரங் கொடுத்தருளுமென் றுபிறவிகள்தோறும் வேண்டினபடியால்ஈஸ்வரன்கிருபைகூர்ந்து நீ இந்தமானிடசரீரத்தைப்பெற்று நம்மைவேண்டி நிஷ்காமியதவஞ்செய்து நமது திருவடியோகத்தைப் பெறுவாயென்றிரவலாகக்கொடுத்தருளினார்.

விறு. அப்படியானால் அந்தக்காரணத்தை ஒருவருமே யறியவில்லை யென்னில்.

விடை. கருப்பாசயத்தில் கட்டுண்டிருந்ததினாலும் பிறவிநோக்குங்கால் பிரசூதவாயுவு முரிந்துதள்ளுவதினாலும் யோனித்துவார நெருக்கமுதலிய பாதனைகளாலும் முன்னுள்ளநினைவுகளெல்லாம் இந்தச்சீவன் மறந்து விட்டுப் பஞ்சபூதபௌதிகமாகிய இரவலான இச்சரீரத்தையுந் தாமென்று சத்தியபுத்திபண்ணிக்கொண்டபடியால் ஒருவருக்குங்காரணந்தோற்றவில்லை.

விறு. ஆனாலிரவலென்பதற்குஉவமானமெப்படியென்னில்,

விடை. ஒருபுருஷன் ஒருதொழில்செய்யக்கருதி அடுத்தவீட்டுக்காரனிடத்தில் ஒருகத்தியை யிரவலாகவாங்கிவந்து உடனே அந்தக்கத்தியின்மேல்வைத்த பிரியமோதப்பிரமோதங்களினா லிரவலென்பதுமறந்து சொந்தம்போல வைத்துக்கொண்டு அதனால்தானினைத்தகருமத்தை நிறைவேற்றிக்கொள்ளாம லிருந்துவிட்டான் அப்படியிருக்கச் சில நாளைக்குப்பிறகு கத்திகொடுத்தவன் சடுதியில்வந்துஎன் கத்தியைக் கொடுவென்றுகேட்க இவன்அவனுடையகத்தியென்பதூஉந் தானிரவல் வாங்கிவந்தது மறந்துவைதுப்பேசுமளவில் அவன்கோபங்கொண்டு இவனையடித்து வருத்திக்கத்தியைப் பிடுங்கிக்கொண்டு போவானேயல்லாமல்கத்தியைவிட்டுப் போகமாட்டான் - அதுபோல நீயும் ஈஸ்வரனிடத்தில் அனந்தஜென்மங்கடோறும் வருந்திக்கேட்டு இரவலாக வாங்கிவந்த இந்தச்சரீரத்தை இப்போதுபட்ட பிறவிமூர்ச்சை யினால்மறந்துயானெனதென்று சத்தியபுத்திபண்ணிக் கொண்டிருக்கிறாயினி நியமப்படி இரவல்கொடுத்தவர்வந்து பறித்துக்கொண்டுபோய்விடு

வார் அப்போது முன்போலத் திரியக்காதிதாவரங்களாய்ப்பிறந்தலுத்து ஐயையோ நாம்முன்சரீர மிருக்கும்போதே நல்லதவத்தைப்பண்ணி மோட்சமடையாமற் போனோமேயென்று புலம்பிநிற்கவேண்டுமல்லா மல் வேறில்லை.

வினா. ஆனால்முன்போலவே யிரவல்வாங்கிவந்து மறவாமல்தவஞ்செய் துமோட்சத்தைப்பெறுவேனென்னில்.

விடை. திரும்பவும் இந்தமானிடசரீரம் பெறுவதரிது.

வினா. அதேதென்னில்,

விடை. முன்சத்தியை யிரவல்வாங்கிவந்துதான் நினைத்தகருமமுமுடிக்கா மல் கத்திகொடுத்தவன்வந்து கேட்டவிடத்தில்தன்சொந்தமெ ன்று வழக்கிட்டதை மறந்துபின்னு மவனிடத்திற்போய் கேட்டால்புர ளிக்காரனென்றடித்துத் தள்ளிவிடுவானேயன்றி ஒருபோதுங்கத்தியிர வல்கொடுக்கமாட்டான் அதுபோலவீசுவர னிரவலாகக்கொடுத்த தேகத் தை நீ யானெனதென்றபிமானித்து அறியாமையினால்பொய்கொலைகள வு கட்காமமாகியபஞ்சமகாபாதகங்களையே முயன்று வழக்கிட்டுநின்றதா லினிஒருக்காலுமிந்தச்சரீரங்கிடைக்கமாட்டாது - ஆதலாலிந்தச்சரீர ம்விவேகமுமிருக்கும்பொழுதே யிரவலுடைமையென்றறிந்து தேக திப்பிரபஞ்சங்களிலுள்ள அபிமானமெல்லாம் விட்டு நிஷ்காமியதவம்ப ண்ணி மோட்சத்தைப்பெறவேண்டுமென்றறிவாயாக.

வினா. ஆனால்யானெனதென்னுமபிமானமில்லாவிட்டால் விவகாரங்க ளெல்லாம் தூங்கினவன்கைப்பொருள் நழுவினாற்போல நழு விவிடுமேயன்றித்திடமாய்நடக்க மாட்டாது - ஆகையாலபிமா னமிருக்கட்டுமே அதனாலானிதேதென்னில்.

விடை. ஓர்கிரகஸ்தனான பிராமணன் தன்கிரகிணியோடு கங்காயாத்தி ரைபோகக்கருதி மறுவளவிற் குடியிருந்த ஒரேழைப்பிராமண னை யழைத்து நாங்கள்காசியாத்திரைபோய் வருமளவும் நீர் குடிக்கூலி யின்றிக் குடும்பத்துடன் எங்கள்வீட்டில் குடியிருந்துக்கொண்டு எங்க ள்வீடுவாசல்மாடுமனை முதலானசகல பண்டபதார்த்தங்களையும்பதனமா கக் காப்பாற்றி நாங்கள்வந்தவுடன் எங்களிடத்தில் ஒப்புவித்தால்மாத மொன்றுக்குஒருவராகன்சம்பளந்தருவேனென்றுசொல்லி அந்தஏழைப்

பிராமணனைக் குடிவைத்துவிட்டு யாத்திரைபோய்க்காசிமுதல்கன்னியா
குமரிவரையிலுள்ள மூர்த்திதலம் தீர்த்தங்களைமுறையே தரிசித்துக்கொ
ண்டு சிலநாட்கழித்தபின் தன்வீட்டுக்குத் தன்கிரகணியோடுவந்துசே
ர்ந்தான் - அந்தப்பிராமணனைப்பார்த்து குடியிருந்த ஏழைப்பிராமண
ன் நீங்களாரென்றுகேட்க, நாங்களுன்னை இந்தவீட்டிற்குடிவைத்துவிட்
டுக்காசியாத்திரை போனவர்களல்லவா இப்போது நாங்கள் சி ந்தராய்
வந்துசேர்ந்தோமாதலால்எங்கள்வீடுவாசல் முதலிய வெல்லாம் ஒப்புவித்
துப்போட்டு உன்சம்பளத்தைவாங்கிக்கொண்டுபோவென்றுசொல்லஅ
ந்தவசனத்தைக்கேட்டுகோபங்கொண்டுவீடாவதேது வாசலாவதேது கு
டிக்கூலிக்குவைத்துப்போவதாவதேது உனக்கேதாவது பயித்தியம்பி
டித்ததாவென்றுகூவி நீ முன்புதானே இந்த வீடுவாசல்களை விற்பனை
செய்துவிட்டுப் போயினையே அதற்குவிக்கிரயசாதன மிருக்கிறதென்
று அப்யானித்து வழக்குப்பேச அதுகேட்டகாசிவாசியும் நியாயஸ்தலத்
திற்போய் கூகூவென்று முறையிடஅம்முறையிடுதலைக்கேட்ட நியாயா
திபதிகளவஞ்சகனைஏழைப்பிராமணனைப்பிடித்துவரச்சொல்லி விசா
ரிக்க அவன் அந்தநியாயாதிபதிகளைப்பார்த்து இவர்கள்யாத்திரைபோகிற
பொழுது விற்றுவிட்டுப்போனார்களன்றிஎன்னைக்குடிவைத்துப் போகவில்
லையென்றும்பொய்ச்சாதன மொன்றெடுத்துக்காட்ட அதுகண்ட நியாயா
திபதிகள் இதைச்சாட்சிமுகாவளியாலறியவேண்டுமென்று அடுத்தவீட்
டிலுள்ளவர்களையழைப்பித்து நீங்களிந்தச்சேதி யறிவீர்களாவென்று
கேட்க அவர்கள்நியாயாதிபதிகளைப்பார்த்துஇவனைக்குடிவைத்துப்போ
னதேயல்லாமல் வீடுவாசல்களை விற்றுப்போகவில்லையென்று சொன்ன
ர்கள் - அதுகேட்ட நியாயாதிபதிகள் அந்தக்கபடப்பிராமணனைப் பிடித்
துக்காவல்பண்ணி நீநிர்த்துகமாய் ஒருவன்சொத்துகளை யபகரிக்கும்ப
டி பொய்ச்சாதனமேற்படுத்தினபடியால் உனக்குமித்தஅபராதம் விதி
க்கப்பட்டது இந்தஅபராதம்விதித்தமுதற்பொருள்சேருமளவும் நீகார
கிரகவாசியாகாவலிலிருந் துழியஞ்செய்யவேண்டும்நீ அவன் சொத்துக
ளெல்லாமபகரித்துக் கொண்டபடியால் உன்சொத்துகளெல்லாம் ஏலம்
போடுவித்து வட்டிக்காகச்சேர்க்கப்படுமென்று நியாயந்தீர்த்தார்கள் அ
துபோலத்தேகாதிப்பிரபஞ்ச விவகாரத்தில் ஒருவனுக்கு யாதொன்றெ

ன்று மபிமான மேலிடுமாகில் முதலாகியமோட்சபலமுங்கெட்டு வட்டி யாகிய நித்திய சுவானுபவமும்போய்ச்சதா துக்கத்திலேயமிழுந்திவிடப் பன்.

வினா. ஆனால் அபிமானநீங்கும் வழியேதென்னில்.

விடை. சரீரமுதலாயுள்ளவகப்பற்றையுப் கவிஷயேந்திரயங்களானபுறப் பற்றையுமன்னியமென்றறிந்து அதுகளிலநாதியாயுள்ள வகங்கார மமகாராபிமானங்களைவிட்டு இதுகளை நமக்குக் கூட்டிவைத்தவிசுவரானை யபடிப் பிரித்துவிடுமென்பதிற்சந்தேகமில்லை இதுவெல்லாம் கனவிற்கண்ட பொருள்போலாகுமென்றுகருதி அவற்றின் ஆகாமிய வெறுமொட்டாமல் பிராரத்தியான தித்தஇறுதினமுப்பழகுவதே அபிமானநீங்கும்வழி.

வினா. அபிமானமற்றனுபவிப்பதெப்படியென்னில்,

விடை. புளியம்பழத்தேநாடுபோலுந்தாமரையிலையிற்றண்ணீர் போலும்சேற்றிற்பிள்ளைப்பூச்சிபோலும்யாதொன்றைப் பற்றாமலிப்பற்றுப்பற்றிருந்துசற்குருசாஸ்திரமுகத்தினிலையிற்சிரவணாதிகளையுவசியம்பண்ணவேண்டியதுசித்தம்.

வயிராக்கியப்பிரகரண - முற்றிற்று.

இரண்டாவது.

முமுட்சுப்பிரகரணம்.

—◆§§*§§◆—

அவதாரிகை.

முற்பிரகரணத்தால் பிரபஞ்ச வயிராகந்தோன்றிதேகாதிப் பிரபஞ்சங்களனித்தியமென்றும், தேகிபொருவனே நித்தியமென்றும், ஒருவாற்று ணர்ந்த சீஷனுக்குமோட்சதாகமுண்டாகும்படிமேல முமுட்சுப்பிர கரணங்கூறுகின்றார்.

கவி.

சற்குருசாத்திரத்தாற்சவணமாதிகளுண்டாக ... .*
நற்றுணைசகாயமான வனுபந்தநான்குமுண்டாய்.. ... ...*
முற்படுசாதனத்தின் மோட்சதாகத்தினாலே... ... . -- *
சிற்பரகுருவைத்தேடித்திசைத்திடுவோன்முன்கண்டான் .... (க)

கண்டனனான்பாதந்தனு நறவணங்கியெந்தாய் ... ...*
பண்டைமாயையினாலுற்றபஞ்சகோசத்தைநீக்கித் .... *
தொண்டனேற்கிணங்கசந்ததான்சொல்லுமேவாவைத்தந் ... ...*
குண்டெனுந்தீக்கைசெய்தக்கொருப்படுத்திருந்துசெய்தான் .... (௨)

இதன்பொருள்.

விஞா. சற்குருசாமியினிடமுஞ்சீஷனிற்பிரவேசனுண்டாவதற்கு முன்புசெய்காரியமேதென்னில்.

விடை. அனுபந்தசதுஷ்டயங்களையறிய வேண்டும்.

விஞா. அனுபந்தசதுஷ்டயமாவதேதென்னில்.

விடை. அதிகாரியும் விஷயமும் சம்பந்தமும் பிரயோசனமுமென்னுமிந்தநான்கும் சாஸ்திராரம்பத்திற்கு முன்னே ஆகவேண்டியதான்கும் வேண்டும்,

விஞா. அதெப்படியென்னில்.

விடை. சாஸ்திராரம்பஞ்செய்கிறபுருஷனுக்குப் பலலக்ஷணமாயிருப்ப பிரயோசனம் அப்படிப்பிரயோசனமில்லாவிட்டால் மூடனுக்குங்கூட அதிற்பிரவிர்த்தியமாட்டாது.

விஞா. இந்தச்சாஸ்திரத்திற்கதிகாரியாரென்னில்.

விடை. சாதனசதுஷ்டய சம்பத்தியுடையவனும் யுக்திசாமர்த்தியனும் வித்துவானும் மேதாவியுமாயிருக்கிறபுருஷனே யதிகாரி.

விஞா. விஷயமேதென்னில்.

விடை. ஜீவப்பிரமாயிக்கமாயிருக்கிற சைதன்யமே விஷயம்-இன்னம் எந்தசொரூபத்திற்சகலவேதவுபநிஷதார்த்தங்களுங் கூடியிருக்குமோ அதுவேவிஷயமென்றுஞ்சொல்லப்படும்.

விஞா. சம்பந்தமாவதேதென்னில்.

விடை. இப்போதுசொன்னஜீவப்பிரமாயிக்கமானவஸ்துவுக்கும் அந்தவஸ்துவைப்பிரமாணமாகச்சொல்லுஞ்சாஸ்திரத்திற்கும் போதபோதிய லக்ஷணமாயிருப்பதே சம்பந்தம்.

வினா. பிரயோசனமாவதேதெனில்.

விடை. பிரத்தியேகான்மாவும்பிரமமும்அயிக்கியானுபவம் பெறுவதே யானந்தம், அவ்வானந்தானுபவத்தினால் சகல சம்சாரபந்தங்களு மொழிந்து நிற்பதேபிரயோசனம், எவனொருவனுக்குச் சாதனசதுஷ்டயம் பொருந்தியிருக்கின்றதோ அவனுக்கே இந்தப்பிரயோசனமுஞ்சித்திக்கும்-நாலுசாதனத்திலொன்றுகுறைந்தாலுஞ்சித்திக்காது இந்நான்குசாதனமுமுடையவனே வேதாந்தவிசாரத்திற்கதிகாரியாவன்.

வினா. இந்தச் சாதனசதுஷ்டயமெப்போது சம்பாதிக்கவேண்டு மென்னில்.

விடை. சிரவணத்திற்குமுன்பேசம்பாதித்துக்கொண்டு பிறகுசிரவணத்திலிறங்கவேண்டும் இல்லாவிட்டால் ஞானமுண்டாகமாட்டாது.

வினா. சாதனசதுஷ்டயமாவதேதெனில்.

விடை. நித்தியாநித்தியவஸ்துவிவேகம்-இகமுத்திரார்த்தபலபோகவிராகம் சமாதிசட்கசம்பத்திமுமூட்சுத்துவம் இந்நான்குமாம்.

வினா. இந்தநான்குசாதனங்களில்நித்தியாநித்தியவஸ்துவிவேகமொன்றிருந்தாற்போதாதாநான்குசாதனமுஞ்சம்பாதிக்கவேண்டுமென்பதேனெனில்,

விடை. ஒன்றுபோதாது இந்தலோகத்திற் பாஸ்திரக்கியாளுக்கு நித்தியாநித்தியவஸ்துவிவேகமுண்டாயிருந்தும் அவர்கள்விஷயாசத்தியுடையவர்களாய்காமியகன்மங்களைத்தானேசெய்துவருகிறார்கள் ஆகையினாலவர்களுக்குமதிகாரத்துவங்காணேம் ஆதலாலிரண்டாவது சாதனமும் வேண்டும்.

வினா. ஆனாலதிகாரிக்கிவ்விரண்டும்போதுமேயென்னில்.

விடை. போதாதுசிலரிஷீஸ்வரர்களுக்கு இவ்விரண்டு சாதனங்களுமுண்டாயிருந்தும் அவர்களுக்குக்கோபதாபமேவிட்டுப்பிறரைச்சபிக்கப்படுகின்றமையால் அவர்கட்குமதிகாரத்துவங் காணேம் ஆதலால்மூன்றுஞ்சாதனமும்வேண்டும்.

வினா. அதிகாரிக்குஇம்மூன்றும்போதுமேயென்னில்,

விடை. போதாதுசிலபேர்சடைமுடிமுடித்துக் கிருஷ்ணசலங்கக்கத்தி விடுக்கிக்கொண்டுயோகீஸ்வரானென்னும் பெயுரையுடையவர்களாய்ச்சமுசாரத்தினின்றும்புறப்பட்டுவிரத்தர்களாய் உபசாந்தர்களாயிருக்கும் பெரியோர்களுக்கு இம்மூன்றுசாதனங்களுமுண்டாயிருந்தும் சிரவணமேல்மேல் எழுந்துபோய் விடுகிறபடியால் அவர்கட்குமதிகாரத்துவங்காணோம் ஆகலால்நான்காஞ்சாதனமும்வேண்டும் இந்நான்குசாதனமு முடையவனேயதிகாரிஅவனுக்கும்சுமுத்தி அதிலொன்று குறைவாயிருந்தாலுமுத்தியுண்டாகாது,

வினா. நித்தியாநித்தியவஸ்துவிவேகலட்சணமாவதேதெனில்,

விடை, பிரமமேநித்தியம்தேகாதிப்பிரபஞ்சமெல்லா மநித்தியமென்றுசுருதியுத்திஅநுபவப்பிரமாணங்களாற்கண்டறிவது,

வினா. அநித்தியமென்பதில்சுருதிப்பிரமாணமேதென்னில்,

விடை. பிரளயகாலத்தில் தேகாதிப்பிரபஞ்சமான சகலமும் பிருதிவியிலொடுங்கிஅந்தப்பிருதிவியும் அதற்குப்பத்துகொண்டஅப்புவிலொடுங்கிஅப்புவும் பத்துகொண்டதேயுவிலொடுங்கித்தேயுவும் பத்துகொண்டவாயுவிலொடுங்கிவாயுவும் பத்துகொண்டஆகாயத்திலொடுங்கி ஆகாசமும்அஞ்ஞானத்திலொடுங்கி அஞ்ஞானமும் பிரமத்திலொடுங்குமென்பதைக்கண்டறிவதேசுருதிப்பிரமாணம்,

வினா. யுத்திப்பிரமாணமேதென்னில்,

விடை. பஞ்சபூதங்களைதடித்துப்பௌதிகமாய்நாள்தோறுநசிக்கிறதென்றுகருத்திற்கண்டறிவதேயுத்திப்பிரமாணம்,

வினா, அநுபவப்பிரமாணமெப்படியென்னில்,

விடை, சாக்கிரத்திருந்தபாகியுமான நாமரூபப்பிரபஞ்சங்கள்சொப்பனமானஅந்தர்மனோசங்கற்பத்திலில்லை - சொப்பனத்திருந்தஅந்தர்மனோசங்கற்பங்கள் சுழுத்தியானஅவித்தையிலில்லை - சுழுத்தியிலிருந்தஅறியாமையும்ஆனந்தமுஞ்சாக்கிரசொப்பனத்திலில்லையென்றுகண்டறிவதேயநுபவப்பிரமாணம்,

வினா. இனிபிரமம்நித்தியமென்பதிற்சுருதிப்பிரமாணமேதெனில்,

விடை, பிரளயத்திற்பஞ்சபூதமுந்அதன்காரணமான அஞ்ஞானமுமி

ரமத்திலொடுங்கிப்பிரமமாத்திரமிச்சமாய்ச் சேடித்திருக்குமெ ன்றறிவதேசுருதிப்பிரமாணம்.

வினா, யுத்திப்பிரமாணமேதென்னில்,

விடை, இந்தப்பூதபௌதிகங்களெல்லாம் நாள்தோறுநசித்துமீண்டும் உற்பத்தியாகிறதற்குக்காரணமான பிரமமொன்றிருக்குமென்ற றிவதே யுத்திப்பிரமாணம்,

வினா, அநுபவப்பிரமாணமேதென்னில்,

விடை, நித்தியத்துவமான பிரமமேபூதபௌதிகங்களாகத்தோற்றுமென் றுகண்டறிவதேயநுபவப்பிரமாணம் இதுவேமுதற்சாதனம்,

வினா, இகாமுத்திரார்த்தபலபோகவிராகலட்சணமாவதேதென்னில்

விடை, இகத்திலுண்டான தார[illegible]களிலும் ராஜபோகத் திலும் பரத்திலுண்டான[illegible]டத்திலும் அமிர்தாதிசொ ர்க்கபோகத்தினிடத்தும் மலமூத்திர[illegible]சனங்களிலேட்டபடி ஒருவரு க்குமாசைபிறவாதோ அப்படியே நிராசைபிறந்திருக்கவேண்டுமென்று சுருதியுத்தியநுபவப்பிரமாணங்களாற்கண்டறிவது,

வினா, இகலோகபோகங்கள் அசுத்தமென்பதற்குச் சுருதிப்பிரமாண மேதென்னில்,

விடை, தாரபுத்திராதிகளுடையசரீரங்களெல்லாம் எச்சில்திட்டுரக்தமா ங்கிஷமலமூத்திரங்கள்கூடி ஒருவடிவமாக நிருமிக்கப்பட்டிருக்கி றதென்றுகண்டறிவதேசுருதிப்பிரமாணம்,

வினா, யுக்திப்பிரமாணமேதென்னில்,

விடை, அத்திக்கனிபார்க்கிற கண்களுக்குச்சுத்தமாகவும் அதைப்பிட்டு ப்பார்த்தால் அசுத்தமானகிருமிகணிறைந்து அசங்கிதமாகவுமி ருப்பதுபோலதாரபுத்திராதிகளும் பார்க்கிறகண்களுக்குச் சுத்தமான ரூபலாவண்ணியமாகவும் உள்ளேமலமூத்திராதிகளாற்கந்தங்கணிலைறந்தி ருக்கிறதென்று விசாரிக்குமளவில் அசுத்தமாகவுமிருப்பதினால் இவர்க ளைத்தொட்டாலுமுடனே சுத்திசெய்துக்கொள்ளவேண்டுமென்றுகண் டறிவதே யுத்திப்பிரமாணம்,

வினா. அனுபவப்பிரமாணமேதென்னில்,

விடை. அவர்களுக்குவியாதிபீடைகணேரிட்டவிடத்தும் எச்சில்திட்டு மலம்சீழ்இரத்தமாங்கிஷங்கள்காணப்பட்டவிடத்தும் அவர்களைத்தொடஅசங்கிதமாயிருப்பதினாலும் அவர்களிறந்துபோன விடத்தும் அரைநாழிகையாவது வீட்டில்வைக்காமல் சூதகமென்றுடனேயெடுத்துக்கொண்டுபோய்மயானத்திற்போட்டு வருதலினாலும் அசுத்தமென்றுகண்டறிவது அனுபவப்பிரமாணம்.

வினா. திரவியமசுத்தமென்பதற்குச்சுருதிப்பிரமாணமேதென்னில்.

விடை. திரவியந்தேடுங்காலத்தில்சுத்தமின்றி அசுத்தமானதொழில்களிலுமுயலும்படிமனமூண்டாகுமென்பதைக்கண்டறிவதேசுருதிப்பிரமாணம்.

வினா. யுத்திப்பிரமாணமாவதேதெனில்,

விடை. திரவியங்கிடைத்தகாலத்தும்மனைவிமக்கள் கிரகபூமிகளைத்தேடுகின்றபாசபந்தத்திற்கட்டுண்டழுந்திநிற்குமென்பதைக்கண்டறிவதேயுத்திப்பிரமாணம்.

வினா. அனுபவப்பிரமாணமாவதேதென்னில்,

விடை. திரவியமதிகரித்தவிடத்துஆசைகுரோதலோபமதங்களால் மூடப்பட்டுமுன்பின்தோற்றாது அஞ்ஞானாந்தகாரகூபத்தில்விழுந்து பலவிகாரங்களையடையுமென்றுகண்டறிவதே யனுபவப்பிரமாணம்.

வினா, பரலோகபோகங்கள் அசுத்தமென்பதற்குச் சுருதிப்பிரமாணமேதென்னில்,

விடை, மானிடசரீரத்திற்பொருந்துந்தாபத்திரயங்களுந் தேவசரீரங்களுக்குமுண்டென்றறிகிறதேசுருதிப்பிரமாணம்,

வினா. யுத்திப்பிரமாணமேதெனில்.

விடை, தேவபோகத்திலும்மனுஷபோகத்தைப்போலவே துக்கமென்பதைக்கண்டறிவதேயுத்திப்பிரமாணம்,

வினா, அனுபவப்பிரமாணமேதென்னில்,

விடை, தேவர்களும்புண்ணியமுடிந்தவிடத்திற் அதோமுகப்பட்டுதலை கீழாய்ப்பூமியில்விழுகிறபடியால் அசுத்தமென்றுகண்டறிவதே யனுபவப்பிரமாணம்இதுவேயிரண்டாஞ்சாதனம்,

வினா, சமாதிஷட்கசம்பத்திலட்சணமாவதேதென்னில்,

விடை, சமந்தமம்உபாதிதிதிட்சைசமாதானம் சிரத்தையென்றறுவகைகளாம்,

வினா, சமமாவதேதென்னில்.

விடை, இறந்தகாலத்திற்கழிந்தபொருளையும்வருகாலத்தில் வரும்பொருளையுங்குறித்துச்சிந்திப்பதுமனம்-அம்மனத்தைநோக்கி அவற்றைச்சிந்திக்கவொட்டாது நிறுத்தினால் நிகழ்காலத்திலுள்ளபொருள்களில் மமதைகொள்ளும்-இப்படிமமகரித்தபொருளுக்கொருவிக்கினமேற்பட்டால்உடனேதுக்கம்வரும்ஆதலால்அதுகளிலொன்றையுநினைக்கவொட்டாமல்மனோநிக்கிரகம்பண்ணுவதே சமம்,

வினா, தமமாவதேதென்னில்,

விடை, ஞானேந்திரியகன்மேந்திரியங்களைவிஷயங்களிற் செல்லவொட்டாமற்றடுப்பதே தமம்,

வினா, உபாதியாவதேதென்னில்,

விடை, செய்யப்பட்டசகலகன்மங்களிலும்பலனைநாடிச்செய்தால்மீண்டும்பிறந்து அக்கன்மபலன்களை யனுபவிக்கவேண்டிவருமாதலால் அதுசுமையென்றுதள்ளிவிட்டுதான்செய்யுஞ் சகலகன்மங்களிலும் பலனைநாடாது ஈசுரார்ப்பணமாகச்செய்வதேயுபாதி,

வினா, திதிட்சையாவதேதென்னில்,

விடை, சுகதுக்கங்கள்வந்தபோது அதுகள் தேகேந்திரியாதியந்தக்கரணங்களுக்குச் சுபாவமென்று சகுணக்கண்டுதன்னையொருவர் வாதித்தவிடத்தில் அவர்களைத்தண்டிக்குமதிகாரவல்லபத்தைக்குண்டாயிருந்தும்பொறுத்திருக்கின்றதேதிதிட்சை,

வினு. சமாதானமாவதேதென்னில்,

விடை. பெரியோர்களிடத்திலிருந்து சிரவணம்பண்ணுங்காலத்தில் இந்திரியாதியந்தக்கரணங்களை அந்தர்பாகியவிஷயங்களிற்போய் விழவொட்டாமற்றடுத்துச் சிரவணத்தினிறுத்துவதேசமாதானம்-இந்தச் சமாதானமில்லாவிட்டாலுபயப்பிரஷ்டனுவன்,

வினு. சிரத்தையாவதேதென்னில்,

விடை. குருவினிடத்தும் வேதாந்தசாஸ்திரத்தினிடத்தும் ஈஸ்வரனிடத்திலும் நியமமாய்பயபக்திவிசுவாசமுற்றுச்சித்த சுத்தியுண்டாகியிருப்பதேசிரத்தை-இதுவேஆறென்றுஞ்சாதனம்.

வினு. முமூட்சுத்துவவிலக்கணமாவதேதென்னில்,

விடை. இந்தஜெனனமரணரூபமானசம்சாரப்பிரவாகத்திலடிபட்டு ஆதியாத்மீகஆதிபௌதிகஆதிதெய்விகமென்னுந் தாபத்திரயங்களால்வருந்தி இந்தச்சம்சார துக்கத்தை லாருநிமிஷமாகிலுமிருக்கப்படாதென்றுமகாபயங்கொண்டு இந்தப்பிரமையை எந்தப்பெரியோர்கள் போக்குவார்களோ சற்குருவாயிருக்கிறமகாத்மாக்களெங்கே யிருப்பார்களோ வென்றுசுட்டசட்டிகைவிட்டதுபோல சகலபோகங்களையுங் கைவிட்டுத் துறந்து புறப்பட்டு மகா தீவிரதரபக்குவத்துடன் பகலெல்லாம் ஆசிரியரெங்களுரோவென்றுதேடியும் இராமுழுதும் நித்திரைவராமல் துக்கமே விட்டுவேர்த்தன் முதலியஎண்குணங்களுடன் தேசாந்தரங்களிலும் வனாந்தரங்களிலும் பர்வதாந்தரங்களிலுந்தேடியலைந்து திரிகின்றதே முமூட்சுத்துவம்-இதுவே நான்காஞ்சாதனம்.

வினு. இப்படியுள்ள முமூட்சுவுக்குக் குருதரிசனமெப்படி கிடைக்குமென்னில்,

விடை. இவன் அனேகஜென்மங்களிற்செய்துள்ள நிஷ்காமியபுண்ணிய பலத்தினால் அனந்தமறைகோசரமாயிருக்கப்பட்ட பிரமந்தானே கிருபைகூர்ந்து ஆலயாலங்கட்டியாய்த்தடித்ததுபோல மானிடச்சட்டைசாத்தி பாற்கடல்பெருகிவந்ததுபோல இவன் ஆனந்தணிக்கும்பொருட்டு குருமூர்த்தமாயெழுந்தருளிவரும்,

வினா. அங்ஙனம்வந்தகுருவைக்கண்டவன்செய்காரியமேதெனில்,

விடை. அங்ஙனமானவுடன்சரீரமுழுதும் நெருப்புபற்றிக்கொண்டுசல
ந்தேடுகிறவனுக்குமுன்கங்காநதியெதிர்ப்பட்டதுபோலும்ஓர்ம
காதரித்திரனுக்குமுன் உலவாக்கிழியெதிர்ப்பட்டது போலுமகாசந்தோ
ஷகரமாய்க்கண்டுசற்பாவசங்கொண்டு அடியற்றமரம்போல அவரதுபா
தகமலங்களில்விழுந்து திரிகரணசுத்தியாய் ஏகாங்கதுவிதாங்க திரியாங்க
பஞ்சாங்க அஷ்டாங்கநமஸ்காரங்கள்செய்து இரண்டுகைகளாலும் பாத
த்தைப்பற்றிக்கொண்டு சுவாமீ அடியேன்நெடுங்காலமாய்ஜெனனமரண
மென்னும்பாலைவனத்திற்புக்கிமாயாமோகமென்னுமிருளினால் மறைப்
புண்டுபஞ்சகோசங்களென்னும்பாசவலையிற்சிக்கிக்கொண்டு-தாபத்திர
யாக்கினியினால் தகிக்கப்பட்டு நிற்கிறேன் ஆகலாற்கிருபாமூர்த்தியாகிய
தேவரீர்அவைகளெல்லாம் சூரியனைக்கண்டபனிபோல்நீங்கும்படிகிருபா
கடாட்சம்வைத்து என்மனவெப்ப நீங்கிக்குளிர்ச்சியாகும் பொருட்டு அ
நுக்கிரகஞ்செய்தருளுமென்றுவிண்ணப்பஞ்செய்வது.

வினா. அங்ஙனஞ்செய்தகாலையிலாசிரியர்செய்காரியமேதெனில்,

விடை. அப்படிசரணாகதியடைந்தசீஷனைச்சமீபத்திலிருக்கவைத்து
து பரிபூரணதிருஷ்டியினாற்பார்த்து அவனைப் பயப்படாதே
யென்றபயாஸ்தங்கொடுத்து அவனைஒருபோதும் அகங்காரமதயானைவ
ந்தடாமலும்மாயாமோகம்பற்றாமலும்சித்தமென்னுநாய்ப்பரிசம் படா
மலும் நிசானந்தாநுபூதியுண்டாகும்படிவேதாந்தவிசாரமென்னுஞ்சிம்
மாசனத்தில்தாமெழுந்தருளியிருந்து முற்சொல்லிய அகங்காராதிமிரு
கங்கள் அந்தத்தொனியினாலடங்கும்படிசெய்து பிறகு நிச்சயாத்மகமா
னசூட்சமபுத்தியுள்ளசீஷன்மஸ்தகத்தில் அஸ்தத்தைவைத்துப் பிரமோ
பதேசமான ஞானதீக்ஷைசெய்தருளுவார்.

வினா. தீக்ஷையென்பதற்கருத்தமேதென்னில்,

விடை. தீயென்றுக்ஷையென்றுமிருவகை - அவற்றுள்தீஎன்பது அகக்
காரணமானமமகாரஞ்சித்தநிற்கப்புத்தியேஅவயவத்தேகாவ
தான நிச்சயம்பண்ணுவது அஃதெப்படியென்றால், பாம்பானதுரூப
தேஜசானகண்களால் மந்திரங்களாகியசத்தத்தைக்கிரகிக்கப்போகாதென்

றறியாமல் அந்தமந்திரசக்தியைக்கிரகித்து அதன்வசத்திற் கட்டுப்பட்டது போல புத்தியானது தானென்று தேஜசென்றறியாமல் அவயவத்தோடவதாரணநிச்சயபத்திலே ... என்றபோதிப்பது, லைகுமென்பது சகலகன்மங்களுநசிப்பித்து ... ம்பாமேல நின்மலமாக்குவது - இந்தப்படி நிர்த்தமேதபிரமோபமேதயமான ஞானநிலைகுமென்றறியவேண்டியது சித்தம்.

வேர்த்தன்முதல்... ண்குணங்களென்றதற்குப்பிரமாணம்

ஒழிவிமலாடுக்கம்.

வேர்க்குங்கண்ணீர்ததும்பும் புளகம்பிக்குமெய்நடுங்கும் ... ...*

வார்த்தைதழுவுமனம்பதறும் - கார்க்கதமாய்க் .... *

காந்துமூமோயாகுசலிடாகுங்காதலித்தார்க்... ... ...*

கேய்ந்தகுணங்காணிலை வெயட்டிம்.. .. .. *

ஏகாங்கதுவிதாங்கநமஸ்காரமென்பதற்குப் பிரமாணம்

சிவபுண்ணியத்தெளிவு.

சிரமேகாங்கம்வலக்காத்தைதச்சிரத்தொடுகுவித்தல் துவிதாங்கஞ் ... *

மேல்வாமகரத்தினையுஞ்சோகடலநரியாங்கமதாகுஞ் . ...*

சிரநீள்கரஞ்சாநுக்கணிலந்தீண்டிற்பஞ்சாங்கமதாகுஞ் .... *

சிரமோவாய்காதுமைகை ஜநுசெகத்திற்படிதலட்டாங்கம் ... ...*

இரண்டாவது - முமூட்சுப்பிரகரண - முற்றிற்று.

மூன்றாவது.

உற்பத்திப்பிரகரணம்.

அவதாரிகை.

மூமூட்சுப்பிரகரணங்களிரண்டினாலுமோட்சதாகம்பிறந்து சற்குருலாபமுண்டாகிச்சிரவணாதிகம்பெற்றசீஷனுக்குமேல்அபரோட்சாத்மானுபவசமாதிஞானமுண்டாகும்பொருட்டுஉற்பத்திப்பிரகரணங்கூறுகின்றார்.

கவி,

சுத்தமாம்பிரமந்தன்னிற்றோற்றமாமாயையின்குணத்தாற் ... ...*
பற்றுறுமீசன்சீவன்பஞ்சபூதங்களுண்டாய் ... ... *
மற்றுமாம்பூதந்தானேமருவிச்சூக்குமங்களாகி ... ...*
நித்தலுந்தூலபஞ்சீகரணமாய்நிகழுங்காணே ... ... (௩)

இதன்பொருள்.

வினா, அகண்டபரிபூரணசொரூபவியாபகத்தில்ஜெகஜீவபரந்தோற்றியதெப்படியென்னில்.

விடை, சுத்தப்பிரமமாகியசர்வசாட்சியினிடத்து அக்கினியிற் சூடுபோலபின்னமாகவொருசிற்சத்தியுண்டு அச்சத்தி அந்தப்பிரமத்திலடங்கிநிற்கும்போது அவ்வகண்டசொரூப வியாபகத்திற்குச் சுத்தப்பிரமமென்றுபெயர் அப்படியபின்னமானசிற்சத்திபின்னமாவிசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தைவியாபிக்கும்போது பராசத்தியென்று பெயராயிற்று அப்பராசத்தியாகியமகாகாரணசரீரத்துடன்கூடி அகண்டாதீதஸ்தானமாகிய துரியாவஸ்தைக்கபிமானியாயிருந்து தற்பிரகாசமாய்விளங்குகையால்மகாவியாபகத்திற்குள்ளானசுத்தப்பிரமத்திற்குப்பரப்பிரமமென்றுங்குருவென்றுஞ்சிவமென்றும்பெயர்வந்தது இதுசாமவேதமகாவாக்கியமானதத்துவமசிவாக்கியத்திற்சொல்லும் இது அசிபதார்த்தமானசிவதுரியம் - இப்படிஅவயவரகிதமாயிருக்கின்றபராசத்தியினிடத்தில் பிரமசந்நிதானவிசேஷத்தால் சத்துவரஜஸ்தமசென்னும் அவிகிர்தத்திரிகுணங்களுண்டாயின.

வினா, அக்குணங்களுக்குநாமமேதென்னில்,

விடை, சத்துவத்திற்குஆனந்தரூபசத்தியென்றும் ரஜசுக்குச்சித்ரூபசத்தியென்றும்தமசுக்குச்சத்ரூபசத்தியென்றும்பெயராயின

வினா, அந்தப்பரப்பிரமம் சத்துவத்திற்பிரதிபலித்தபோது நாமமேதென்னில்,

விடை, ஆனந்தரூபசத்தியாகியகாரணசரீரத்துடன்கூடி உபசாந்தஸ்தானமாகியசர்வானந்தசுழுத்தியவஸ்தைக்கபிமானியாயிருந்து சர்

வருந்தானும் விளங்குகின்றுவென்பது மறந்துஉபசமனமா யதீதப்பட்டு நிற்பதால அப்பரப்பிரமத்திற்குப்பரமானந்தமொன்றும் பெயராயின இதுவேஅசிபதார்த்தமானசிவசுழுத்தி,

வினு, பரமானந்தர்ராஜசிற்பிரதிபலித்தபோது நாமமேதெனில்,

விடை, சித்ரூபசத்தியாகியசூட்சுமசரீரத்துடன் கூடிவிஸ்வக்கிராசஸ்தானமாகியசர்வப்பிரகாசசொப்பனுவஸ்தைக்கபிமானியாயிருந்து சகலபுவனசராசரப்பிரபஞ்சங்களையும் விழுங்கித்தானே ஜெகசொரூபமாகப்பிரகாசித்துநிற்பதால் அப்பரமானந்தருக்குத் தேஜோமயமொன்றும்பிரஜாபதியொன்றும்பெயராயின இதுவேஅசிபதார்த்தமானசிவசொப்பனம்.

வினு, தேஜோமயர்தமசிற்பிரதிபலித்தபோது நாமமேதெனில்.

விடை. சத்ரூபசத்தியாகிய ஸ்தூலசரீரத்துடன் கூடிச்சம்பூரணஸ்தானமாகியசர்வவியாபகஜாக்கிராவஸ்தைக் கபிமானியாயிருந்து சர்வசராசரப் பிரபஞ்சங்களுள்ளுந்தானே தானாய் விளங்கிநிற்பதால் அந்தத் தேஜோமயருக்குப்பரிபூரணமொன்றும் சிற்சொலிதமென்றும்பெயராயின இதுவேஅசிபதார்த்தமானசிவசாக்கிரம்.

அசிபதமூன்றும்-இனிதற்பதம்.

வினு, அந்தப்பரிபூரணப் பிரமசந்நிதானத்திற் சேஷ்டித்ததென்னையெனில்,

விடை, சுத்தியில் ரசிதப்பிராந்தி தோன்றியதுபோலமூலப்பிரகிருதியென்றொருசத்திவிவர்த்தமாகச்சேஷ்டித்தது அந்தச்சத்தியைப்பரிபூரணர்வியாபித்திருந்தபடியால் அந்தமூலப்பிரகிருதியில் பிரமசந்நிதானவிசேஷத்தால் சத்துவரஜசுதமசென்னும் விகிர்ததிரிகுணங்களுண்டாயின.

வினு. அவைகளினுமமேதென்னில்.

விடை, மாயையென்றும்அவித்தையென்றும்பிரகிருதியென்றுஞ்சொல்லப்படும் அவற்றுள்மாயையினிடத்து நிருமலமானகண்ணாடியிற் சூரியன்பிரதிபலித்ததுபோலப் பரிபூரணப்பிரமம் சலட்சணமாகப்

ரதிபலிக்கும் அந்தப்பிரதிவிம்பசைதன்னியத்திற்கீசுவரனென்றுபெ
யர் அந்தமாயையாகியமகாகாரணசரீரத்துடன்கூடிப் பிரமாண்டஸ்தான
மாகிய துரியாவஸ்தைக்கபிமானியாயிருந்து சகல சராசரப்பிரபஞ்சங்க
ளுங்கலந்துநிற்பதால் அப்பரிபூரணப்பிரமத்திற்கீசுவரசாட்சியாகி
யபிரமமென்றுஞ்சர்வஞ்ஞனென்றும்பெயராயின இதற்குஞானசத்தி, ச
குணஐசுவரிய சம்பன்னத்துவபோகம் ஓங்காரஅட்சரம். இவ்வட்சரத்திற்
சகலமுமடங்கியிருக்கையால்இதையதிஷ்டித்திருந்தபிரமசைதன்னியத்
திற்குமகாத்மாவென்றுமொருபெயராயின இதுவே தற்பதார்த்தமான ப
ரதுரியம்.

வினா. ஆனால்மும்மூர்த்திகளானதெப்படியென்னில்,

விடை. சத்துவகுணமாயையில் சத்துவம் ரஜசுதமமென்னும் முக்குணங்க
ளுண்டாயின அவற்றுள் தாமதகுணப்பிரதானமாய் அவ்வியாகி
ருதமாகியகாரணசரீரத்துடன்கூடி அக்கினிஸ்தானமான சுழுத்தியவஸ்
தைக்கபிமானியாயிருந்துசகலபிரபஞ்சங்களையுஞ்சங்காரம்பண்ணிநிற்ப
தால் அந்தஅபிமானிக்குஅவ்வியாகிருதமென்றும்உருத்திரனென்றும்பெ
யராயின- இதற்குத்திரோதாயிசத்தி, சர்வசங்காரபோகம்மகாரஅட்சரம்
இவ்வட்சரத்திலித்தனையுமடங்கியிருக்கிறபடியால்இதையதிஷ்டித்திருந்த
ஈசுவரனுக்குச்சுத்தாத்மாவென்றுமொருபெயர்வந்தது இதுவேதற்பதா
ர்த்தமானபரசுழுத்தி-சத்துவகுணப்பிரதானமாகஇரணிய கருப்பமாகிய
சூட்சுமசரீரத்துடன்கூடிச்சந்திரஸ்தானமானசொப்பனவஸ்தைக்கபிமா
னியாயிருந்துசகலபிரபஞ்சங்களையுமிரட்சித்துநிற்கையால்அவ்வபிமானி
க்குஇரணியகருப்பனென்றும் விஷ்ணுவென்றும்பெயர்இதற்குஇச்சாசத்
தி, சர்வபாவகர்த்துருத்வபோகம்உகாரஅட்சரம்இவ்வட்சரத்திலித்தனையு
மடங்கியிருக்கிறபடியால்இதையதிஷ்டித்திருந்தஈசுவரனுக்குச்சுத்தா
த்மாவென்றமொருபெயர்வந்தது-இதுவேதற்பதார்த்தமானபரசொப்
பனம்இராசதகுணப்பிரதானமாகவிராட்டாகியஸ்தூலசரீரத்துடன்கூடி
ச்சூரியஸ்தானமானஜாக்கிராவஸ்தைக்கபிமானியாயிருந்துசகலசராசரப்
பிரபஞ்சங்களையும்சிருஷ்டிபண்ணிநிற்பதால்அவ்வபிமானிக்குவிராட்டெ
ன்றும் பிரமாவென்றும் பெயர் இதற்குகிரியாசத்தி, சர்வகர்த்துருத்வ
போகம்அகாரவட்சரம்இவ்வட்சரத்திலித்தனையுமடங்கியிருக்கிறபடியால்

[illegible] சர்வபூதாத்மாவென்று மொரு [illegible] பாசாக்கிரம்.

[illegible] ப்ரகரணம்.

௩௱௯. [illegible] யென்னில்.

[illegible] பிரதிபலனை [illegible] ஸ்வரூபமாக [illegible] சிரேஷ்ட [illegible] ப்ரகாசமானவர் [illegible]

௩௱௰. [illegible] யென்னில்.

[illegible] ஆனந்த [illegible] ஆனந்த [illegible] ஸ்வரூபமாக [illegible] சொல்லுகிறது.

[illegible] ளாகிய [illegible] யாயிருந்து சொப்பன [illegible] கூடியுங்கூடாதிருத்தலால் அவ்வியாணிக்குத்தைசதனென்றும் [illegible] மென்றும் சொப்பனகற்பித

க்கு அபஞ்சீகிருதபஞ்சபூதங்களென்றுஞ்சூட்சுமபூதங்களென்றுஞ்சொல்லப்படும் இந்தச் சூட்சுமபூதங்களினின்று சூட்சுமசரீரங்களும் ஸ்தூலசரீரங்களுமுண்டாயின.

வினா, எப்படியென்னில்.

விடை. இந்தஆகாசமுதலான சூட்சுமபூதங்களில் முக்குணமுந்தொடர்ந்திருக்கும் அதிற்சத்துவாமிசத்தில் பூதத்திற்கொவ்வொருமாத்திரையெடுத்துச்சமஷ்டியாயொன்றாகக்கூட்டினது அந்தக்கரணங்களாம்.

வினா, அந்தக்கரணத்திலாகாசங்கூடின தற்கடையாளமேதென்னில்

விடை. அந்தக்கரணமாகாசத்தைப்போல் சகலசத்தத்திற்கு மிடங்கொடுத்துத்தரிப்பதேயடையாளம் அப்படித்தரிக்கின்றவிருத்திக்கு ஞானஅறிவென்றுபெயர்.

வினா. வாயுவினமிசங்கூடின தற்கடையாளமேதென்னில்,

விடை, வாயுவைப்போலலைகின்றதேயடையாளம் இப்படியலைகின்றவிருத்திக்குமனமென்றுபெயர்

வினா, தேயுவினமிசங்கூடின தற்கடையாளமேதென்னில்.

விடை. தேயுவைப்போலவிடயங்களை இன்னதின்னதென்றுவிளக்கிவைக்கின்றதேயடையாளம் இப்படிவிளக்கிவைக்கின்றவிருத்திக்குப்புத்தியென்றுபெயர்.

வினா. அப்புவினமிசங்கூடின தற்கடையாளமேதென்னில்,

விடை, அப்புவைப்போல்சகலவிடயங்களிலும்பற்றிநிற்கிறதேயடையாளம் இப்படி பற்றிநிற்கும்விருத்திக்குச்சித்தமென்றுபெயர்

வினா, பிருதிவியினமிசங்கூடின தற்கடையாளமேதென்னில்,

விடை. பிருதிவியைப்போலச்சகலவிடயங்களிலுங்கடினமாயபிமானித்திருப்பதேயடையாளம் இப்படியபிமானித்திருக்கும்விருத்திக்கு அகங்காரமென்றுபெயர் இப்படியே அந்தச்சூட்சுமபூதங்களின்சத்துவாமிசத்திற்பூதத்திற்கொவ்வொருமாத்திரையெடுத்து வியஷ்டியாய்த்தனித்தனியேவைத்தது ஞானேந்திரியங்களாம்.

வினா. ஞானேந்திரியங்களின் குணமேதென்னில்.

விடை. ச்ரோத்திர மாகாசத்தினது விசேஷமாகையால் ஆகாசகுணமான சத்தமாத்திரமறியும் த்வக்கு வாயுவின் விசேஷமாகையால் வாயுவின் குணமான பரிசமாத்திரமறியும் சக்ஷு தேயுவின் விசேஷமாகையால் தேயுவின் குணமான ரூபமாத்திரமறியும் சிங்குவை அப்புவின் விசேஷமாகையால் அப்புவின் குணமான ரசமாத்திரமறியும் க்ராணம் பிருதிவியின் விசேஷமாகையால் பிருதிவியின் குணமான கந்தமாத்திரமறியும் இவ்வைந்திந்திரியங்களும் ஒன்றோடொன்று கூடாதபடியினால் இந்த பூதங்களைக் கிரகித்தறியமாட்டாது அந்தக்கரணத்தில் ஐந்துமொன்றாய்க் கூடினதுகொண்டு ஐந்திந்திரியத்தினாலும் ஐந்து விஷயங்களையுமறிகின்றது இந்தச் சத்துவாமிச சமஷ்டியினாலுண்டான அந்தக்கரணம் ஐந்து வியஷ்டியினாலுண்டான ஞானேந்திரியமைந்தும் ஆகையால் ஞானசாதனமாகிய அறிகருவிகளாம் இப்படியே அந்தச் சூக்ஷ்மபூதங்களின் ராஜசாமிசத்தினின்று பூதத்திற்கொவ்வொரு மாத்திரமாய் வியஷ்டியும் சமஷ்டியுமாக ஒன்றாகக்கூடினது பிராணாதி பஞ்சவாயுக்களாம்.

வினா. பிராணாதி பஞ்சவாயுக்களின் குணமேதென்னில்,

விடை. வியானவாயு ஆகாசத்தின் விசேஷமாகையால் ஆகாசம்போற் சர்வசரீரமும் வியாபித்திருக்கும் பிராணவாயு வாயுவின் விசேஷமாகையால் வாயுவைப்போல் இருதயஸ்தானத்திலிருந்து நாசியாபரியந்தம் உலாத்துகிறது அபானவாயு அக்கினியின் விசேஷமாகையால் அக்கினியைப்போல ஜடராக்கினியாக ஜ்வலித்து குதஸ்தானத்தினின்று அன்னபானாதிகளைச் சீரணிப்பிக்கும் சமானவாயு அப்புவின் விசேஷமாகையால் அப்புவைப்போல் சரீரமெல்லாம் நாபிஸ்தானத்தினின்று அன்னபானாதிகளைச் சகல நாடிகளிலும் நிரப்பி நிற்கும் உதானவாயு பிருதிவியின் விசேஷமாகையால் பிருதிவியைப்போல் கடினமாகக் கண்டத்தினிற்கும்.

வினா, இந்தப் பஞ்சவாயுக்களல்லாமல் வேறுவாயுக்களுண்டோவென்னில்.

விடை. வாந்திபண்ணுகிறது நாகனென்றும் இமைத்துவிழிக்கிறது கூர்மனென்றும் தும்முகிறது கிரிகரனென்றும் கொட்டாவிகொள்ளு

கிறது தேவதத்தனென்றும் விக்கிருதனஞ்செயனென்றுமைந்தாகாய் வுகளுண்டென்று சிலர் சொல்லுவார்கள் இவ்வைந்தும் பிராணவாயுவின் றொழிலேயன்றிவேறல்ல அந்தச் சூட்சுமபூதங்களின் இராசதாமிசத்தில் பூதத்திற் கொவ்வொருமாத்திரையெடுத்து வியஷ்டியாய்த் தனித்தனியே வைத்தது கன்மேந்திரியங்களாம்.

வினா, கன்மேந்திரியங்களின்குணமேதென்னில்.

விடை. வாக்குஆகாசத்தினமிசமாகையால் ஆகாசத்தினிடமாய் நின்றுவசனிக்கும் பாணிவாயுவினமிசமாகையால் வாயுவினிடமாய் நின்று ஏற்றலிடுதல்செய்யும்பாதம் அக்கினியினமிசமாகையால், அக்கினியினிடமாய்நின்று நடக்கும்உபஸ்தம்அப்புவினமிசமாகையால் அப்புவினிடமாய்நின்று ஆனந்திக்கும்பாயுருபிருதிவியினமிசமாகையாற்பிருதிவியினிடமாய்நின்று மலவிசர்க்கம்பண்ணும் இவ்வைந்துமொன்றோடொன்று கூடாதபடியினால்வேறுதொழில்செய்யமாட்டாது வாயுவில்ஐந்துபாதிகளாயுமொன்றாய்க்கூடினது கொண்டுகன்மேந்திரியமைந்தினாலுமைந்து தொழில்செய்கின்றது இந்தஇராசதசமஷ்டியிலுண்டான வாய்வுகளைந்தும்இராசதவியஷ்டியிலுண்டானகன்மேந்திரியமைந்தும் ஆகபத்துங்கிரியாசாதனமாகையால் தொழிற்கருவிகளாம் இவ்விருபது தத்துவங்களே சூட்சுமசரீரம் இதைமாயாப்பிரதிபிம்பரான ஈஸ்வரன் அவித்தையாப்பிரதிபிம்பரானசீவர்களுக்குச்சிருஷ்டிக்கொவ்வொருசூட்சுமசரீரங்கொடுத்தருளுவர் இப்படிசூட்சுமசரீரப்பெற்றுக்கொள்ளாத சீவர்களுக்குமறுசிருஷ்டியிற்கொடுத்தருளுவார் இந்தச்சூட்சுமசரீரவபிமானசீவனுக்குத் தைசதனென்றுபேர்இப்படியே பஞ்சபூதங்களின் சத்துவாமிசமும் இராசதாமிசமுங்கழிந்து தாமதாமிசமாத்திரமிருக்கின்றது இதுவேசூட்சுமசரீரவுற்பத்தி,

வினா, ஸ்தூலசரீரவுற்பத்தியாவதேதென்னில்,

விடை, மிகுந்திருக்கின்றதாமதாமிசத்திலுள்ள ஐந்துபூதத்தையு மொவ்வொன்றிரண்டாய்ப்பகுத்துமுற்பாதியைவைத்துமொன்று நாலாக்கிஇரண்டாம்பாதியைத்தானதன்னமிசத்துடன் கூட்டாமல்மற்றநான்குபூதத்துடனும் பூதத்திற் கொக்காலரைக்கால் மாத்திரையாகக் கொடுப்பதேபஞ்சீகரணம்,

வினா. இப்படி பஞ்சீகரணப் படுத்தியதற்குப் பிரயோசனமேதெனின்.

விடை. பஞ்சீகரித்தஸ்தூலபூதங்களில் ஆகாசத்திற் பரிசரூபரசகந்தங்களாகிய நாற்குணமும் வியாப்பியமாகையால் அதிரிசயமாய்ப் போகநிசகுணமானசத்தந்திரிசயமாகும்வாயுவில் ரூபரசகந்தங்களாகிய மூன்றுகுணமும்வியாப்பியமாகையால் அதிரிசயமாய்ப்போக காரணகுணமானசத்தமும்நிசகுணமானபரிசமும் திரிசயமாகும்தேயுவில் ரசகந்தங்களாகியஇருகுணமும் வியாப்பியமாகையால் அதிரிசயமாய்ப்போககாரணகுணமானசத்தபரிசங்களும் நிசகுணமானரூபமும் திரிசயமாகும்அப்புவில்கந்தகுணம்வியாப்பியமாகையால் அதிரிசயமாய்ப்போக காரணகுணமானசத்தபரிசரூபங்களும் நிசகுணமானரசமும் திரிசயமாகும்பிருதிவியில் சத்தபரிசரூபரசகந்தங்களும் நிசகுணமாகையால் திரிசயமாகும் இதுவே ஸ்தூலபஞ்சபூதங்களாம்.

வினா. இந்தஸ்தூலபூதங்களினாலுண்டாகியதென்னவெனில்,

விடை, ஆறுதத்துவமாய்நால்வகையோனியாய் எழுவகைப்பிறவிகளாயுள்ளஸ்தூலசரீரங்களுண்டாயின.

வினா, ஆறுதத்துவமேதென்னில்.

விடை. சர்மம்உதிரம்மாமிசம்ஸநாயுஅஸ்திமச்சைஇவைகளாம்,

வினா. நால்வகையோனியாவதேதென்னில்,

விடை, அண்டசம்உற்பிச்சம்சுவேதசம்சராயுசம்இவைகளாம்,

வினா. எழுவகைப்பிறவிகளாவதேதென்னில்,

விடை, தேவர்மக்கள்புள்விலங்குதிலத்திலூர்வனஜலத்திலூர்வனஸ்தாவரம் இவைஎண்பத்துநான்குலட்சபேதங்களாயிருக்கும் ஈஸ்வரன் ஜீவர்களுக்கிந்தஸ்தூலசரீரத்தையுண்டுபண்ணினர் இந்தவியஷ்டிஸ்தூலசரீரத்தையபிமானித்தஜீவனுக்கு விசுவனென்றும்சமஷ்டிஸ்தூலவிராட்டையபிமானித்தஈஸ்வரனுக்கு பிரமனென்றும்பெயர் வியஷ்டிசூட்சுமசரீரத்தையபிமானித்தஜீவனுக்குத் தைசதனென்றும்சமஷ்டிசூட்சுமவிராணியகர்ப்பசரீரத்தையபிமானித்தஈஸ்வரனுக்குவிஷ்ணுவென்றும்பெயர்.

வியஷ்டிகாரணசரீரத்தையபிமானித்தசீவனுக்குப் பிராஞ்ஞனென்றும் சமஷ்டிகாரணஅவ்வியாகிருதசரீரத்தையபிமானித்த ஈஸ்வரனுக்கு ருத்திரனென்றும்பெயர் இதுகேவலசீவேசுரசரீரத்திரயங்களுடையவிவரமென்று சொல்லப்படும்-இனிவிசாரஞானத்தாலும் சரீரத்திரயங்களையும் லட்சியப்படுத்திச்சாட்சியாகியதன்னையுள்ளபடியறியவேண்டியது,

விறு. சற்குருசாஸ்திரமுன்னிலையில் சீவாதிசரீரத்திரயங்களை விசாரிக்கிறபுருஷனெவனென்னில்,

விடை, இந்தவிசுவதைசதபிராஞ்ஞனென்கிறவர்களால் விசாரிப்படுகின்றதேனால் அந்தந்த அவஸ்தைகளோடுகூடியிருக்கிற [illegible] களுடனிருந்துபோவதாலவர்களால்விசாரிக்கப்படுகிறானென்றுபடுகிறதியம்வரும் ஆதலால் சீவசாட்சியாயிருக்கின்றகூடஸ்தனே விசாரிக்கிறபுருஷன்.

விறு, அவ்விசாரணையின்வகையெப்படியென்னில்.

விடை, சீவனுக்கு வாச்சியலட்சியார்த்தமான அசுத்தசுத்தங்களையும் ஈஸ்வரனுக்குவாச்சியலட்சியார்த்தமான அசுத்தசுத்தங்களையும் பகுத்தறிகிறதேயாம்.

விறு, சீவனுக்குவாச்சியார்த்தமானவசுத்தமேதென்னில்,

விடை. ஸ்தூலசரீரத்தில்ஞானேந்திரியபஞ்சகம் ஒன்று கன்மேந்திரியபஞ்சகம்ஒன்று இவற்றைப்பகுத்தறிகிற அந்தக்கரணங்களி நான்கு இவைகளெல்லாஞ்சேர்க்கைகொடுப்பதானபிராணாதிபஞ்சகம் ஒன்று இவ்வேழுமேகாரியவுபாதி இவ்வேழுபாதிகளையுந்தானென்று சீவனபிமானித்ததேதொம்பதவசுத்தம்.

விறு. சீவனுக்குலட்சியார்த்தமானசுத்தமேதென்னில்.

விடை, இவ்வேழுபாதியுந்தானல்லவென்றுசமஷ்டி அவைகளுக்குச்சாட்சியாயிருப்பதேதொம்பதசுத்தம்.

விறு, ஈஸ்வரனுக்கு வாச்சியார்த்தமானவசுத்தமேதென்னில்.

விடை. சர்வஞ்ஞன்சர்வகாரணன்சர்வேத்திரியாமிசர்வேசுரன் சர்வசிரு

இவ்வுருவாதிகளையுந் தானென்றுஞ் ஸ்வாபாவிகமாயுடைத்தே தற்பர தத்துவம்.

வினா. சர்வஞ்ஞத்துவமென்பதேதென்னில்.

விடை. சகலபிரபஞ்சங்களிலும் வியாபகமான செயல்களெல்லாம் அறிந்து நிற்பது.

வினா. சர்வாதாரமென்பதேதென்னில்.

விடை. சர்வசராசரங்களு மழிந்தவிடத்துந் தானழிவற்று நித்தியனாயிருப்பது.

வினா. சர்வாந்தரியாமியென்பதேதென்னில்,

விடை. சர்வஜீவசாலமாகிய தேகேந்திரியாதிகளுக்கு முள்ளீடாய் நிறைந்து நிற்பது.

வினா. சர்வேசுரனென்பதேதென்னில்.

விடை. சகலபிரபஞ்சங்களுக்குந் தன் கர்த்தாவாய் விளங்கி நிற்பது,

வினா. சர்வசாக்ஷியென்பதேதென்னில்.

விடை. சர்வசராசரப் பிரபஞ்சங்களையும் பொருந்திருந்து நிற்பது.

வினா. சர்வசித்தியென்பதேதென்னில்,

விடை. சர்வ ஜகங்களையும் பரிபாலனம் பண்ணி நிற்பது.

வினா. சர்வசங்காரமென்பதேதென்னில்,

விடை, சர்வ ஜகவிலாசங்களையுந் தனக்குள்ளொடுக்கி நிற்பது,

வினா. அவனுக்கு லட்சியார்த்தமாவதேதென்னில்,

விடை. இவ்வெட்டாதியுந் தானல்லவென்று கழித்து அவைகளுக்குச்சாட்சியாயிருப்பதே தற்பதசுத்தம்.

வினா. தீர்த்த நிலையாவதேதென்னில்,

விடை, தொம்பதசுத்தமான சிவசூரியமுந் தற்பதசுத்தமான பரசூரியமும் ஐக்கியமான சிவசூரியனை யறிந்து நிற்பதே தீர்த்தநிலை - மேலுந் தற்பத தொம்பத சுத்தத்தை யேகீபவிக்கியப்பொருளென்றுந் தற்

பதசொரூபதசுத்தத்தை இலக்கியப்பொருளென்றுஞ்சிலநூல்களிற்சொல்லப்படும்.

வினா, இதற்குலட்சணவாக்கியமெப்படியெனின்,

விடை. விட்டலட்சணைக்குச்சங்சர்க்கவாக்கியமென்றும் விடாதலட்சணைக்குவிசிஷ்டவாக்கியமென்றும் விட்டுவிடாதலட்சணைக்குஅகண்டவாக்கியமென்றும்வாக்கியத்திரயங்களுண்டு இவ்வாக்கியார்த்தப்படிசிந்தித்து அதனாலுண்டாகுமநுபவத்தைச்சொல்லுவாயாக வென்றனுக்கிரகஞ்செய்து ஆசிரியர்மவுனத்தராயிருந்தவளவில் சிஷ்யன்அகமுகப்பட்டுசொரூபசமாதிகூடிஅபரோக்ஷ ஆத்மானந்தவனுபூதியைப்பெற்று அடங்காமகிழ்ச்சியுடன் எழுந்துநின்று அவ்வாசிரியருக்குப்பிரதக்ஷிணநமஸ்காரங்கள்செய்து அஞ்சலிபஸ்தனாய் நிற்கஅவ்வாசிரியரும் தமது பரிபூரணதிருஷ்டியினால்சற்சீடனைப்பார்த்து ஆதரவாய்ப்பண்ணி அவனையருகிலழைத்துசுவானுபவம்வினவுகின்றனர் அஃதெவ்வாறெனில்.

வினா, அப்பாவுனது சுவானுபவமென்னவெனில்.

விடை. சுவாமீ சீவோபாதியானகாரியவுபாதியேழுடன்கூடிநின்றஸ்தூலதேகத்தையபிமானித்தவன் விசுவனென்றும் இதுவேசீவசாக்கிரமென்றுங்கண்டேன் இந்தவேழுபாதியி லிருவகையிந்திரியமானவீரைந்துபாதிநீங்கிகரணம்நாலும்பிராணனொன்றுமாகவைந்துபாதியோடுகூடினசூட்சமதேகத்தையபிமானித்தவன்தைசதனென்றும் இதுவேசீவசொப்பனமென்றுங்கண்டேன் — இவ்வைந்துபாதியில்கரணம் நாலுநீங்கிபிராணனாகியவொருபாதியுடனின்றகாரணசரீரத்தையபிமானித்தவன்பிராஞ்ஞனென்றும்இதுவேசீவசுழுத்தியென்றுங்கண்டேன் - இவ்வேழுபாதிகளுமிறந்து சீவசாட்சிமாத்திரமாய்ச்சேடித்துநின்ற சீவதுரியமுங்கண்டேன் - துரியமாகியபோதமுமிறந்து விஸ்வரூபமானசர்வசாட்சியாயிருக்கும் பரசாக்கிரமுங்கண்டேன் - சங்கிலித்தொடர்பாகிசகலபிரபஞ்சங்களையும் வேறாகக்கண்ட வறிவுமாத்திரமேதானாயிருக்கும்பரசொப்பனமுங்கண்டேன் காண்பானுங்காட்சியும்விட்டுசர்வமுந்தோன்றாவிருக்கும்பரசுழுத்தியுங்கண்டேன்-அந்தச்சுழுத்திநிலையையறிந்து

லறிவாகிய பரதுரியமுங்கண்டேன் கூடஸ்தரும்பிரமமுமொன்றென்றுணர்ந்தசிவசாக்கிரமுங்கண்டேன் அறுதியாய் சகலசெகத்துந்தானாயிருந்ததும் இருந்தோமென்னும் வாசனையும்விட்டிருந்த சாட்சியேதானென்றுணர்ந்தசிவசொப்பனமுங்கண்டேன் காணப்பட்ட ஜெகமெல்லாமறிவுருபமென்றறிந்து அவ்வறிவும்விட்டு மனோலயமாகுமிடமாகியசிவசுழுத்தியுங்கண்டேன் இந்தச்சுழுத்தியை யறிந்தவறிவாகியசர்வசாட்சியே தானாகக்கண்டனுபவிக்குஞ்சிவதுரியமுங்கண்டேன் - இந்தத்துரியமேசச்சிதானந்தமும் விட்டபனையாகிய மகாகாரணசரீரமென்றும்இந்தத்துரியமுமிறந்தவிடம் அதீதமாகியசுத்தப் பிரமமென்றுங்கண்டேன்என்றுவிண்ணப்பஞ்செய்தசீஷனை அவ்வாசிரியர்ஆதரணைபண்ணி அப்பாசகலவேதவுபநிடதார்த்தங்களிற்கூறப்படும்பொருளுந்நம்முடையவனுபவமுமிதுவேயாதலால் இதிற்சந்தேகவிபரீதம்வராமல்தேகபதனபரியந்தமும் அனுசந்தானம்பண்ணி முடிவில்விதேக கைவல்யத்தைப்பெறுவாயாகவென்றருளினார்.

மூன்றாவது-உற்பத்திப்பிரகரணமுற்றிற்று,

நான்காவது.

திதிப்பிரகரணம்.

அவதாரிகை.

முற்பிரகரணங்கள்மூன்றினுஞ்சமாதியில் அபரோட்சவாத்மானந்தவனுபவம்பெற்றுத்தோற்றப்பிரபஞ்சங்களனைத்துஞ் சொப்பனத்திற்கண்டபொருள்போலாகிச்சாட்சிமாத்திரமாய் விளங்குஞ்சீஷனுக்குமேல்சகலவிவகாரங்களுஞ் சுழுத்திபோலாகிச்சத்தாமாத்திரமானபிரமானந்தானுபவசாட்சாத்காரமுதயமாகும்பொருட்டுத் திதிப்பிரகரணங்கூறுகின்றார்.

கவி.

நிகழுஞ்சாத்திகமாய்நின்றேயிராசததமத்தைநீக்கித் ... ... *
திகழுஞ்சாத்திகத்தாற்செய்யுமிகத்தொழில்செய்திட்டாலும் ... *
புகழுமாசுணந்தான்சட்டைபோக்கல்போலாசாபாசத் ... ... *
துகளறநழுவிமேலாங்குணங்களைத்தொடர்ந்திருப்பார் ... (௯)
தொடர்வருச்சமாதிதன்னைத்தொடர்பவரிருவராகும் .. ... *
படர்வுறுநாமரூபப்பிரபஞ்சத்துறவைவிட்டுத் ... .*
திடமுறச்சதாசமாதிசெய்பவனொருவனற்ற ... ... *
மடமையோடிருந்துமுள்ளிமதித்திடாச்சமாதிசெய்வான். (௰)

இதன்பொருள்.

வினா, சொரூபசமாதியினின்று சச்சிதானந்தசுவானுபூதிமாத்திரமாய் வெளிப்பட்டசீவன்முத்தர்கள்திருப்பவும்விவகாரம் பண்ணுவார்களோவென்னில்,

விடை, பண்ணுவார்கள்அதனாலானியில்லை,

வினா, எப்படியென்னில்,

விடை, சீவன்முத்தர்கள் புனர்ஜென்மத்துக்கேதுவாயிருக்கின்றராஜோதமகுணங்களைவிடுத்துமுத்திக்கேதுவாகிய சத்துவகுணபாத்திரமாயிருந்துவர்த்தமானகாலத்தில் நேரிடுமனேகந்தொழில்களைச்செய்தாலும் அதனாலவருக்குவிகாரங்களொன்றுமவர்களைத்தாக்கமாட்டாது,

வினா, அதெப்படியென்னில்.

விடை, சூரியஸ்தமனமாகிஅந்தகாரமானராத்திரிவந்தபோதினும்பொற்றாமலரானது சற்றாகிலும்வாய்குவியாது மற்றறத்தாமரைகளெல்லாம்வாய்குவிந்துவிடும்அதுபோலஅறிஞர்களும்மாயாகாரியமானநாமரூபப்பிரபஞ்சவிவகாரங்களிற் கூடியுங்கூடாது சுகதுக்கவிவட்சணராகி எந்தவிடத்திலும் அகண்ட வியாபகசின்மாத்திரமாய் நிறைந்து இதமகிதங்களில் சமதிருஷ்டியுடையவர்களாயிருப்பார்கள் அவர்களையேநல்வழியினடப்பவர்களென்றுபெரியோர்கள்சொல்லுவார்கள்,

வினா. ஆறுபேர்களொருவரோடிங்கூடாரோவென்னில்,

விடை, சாந்தி, விசாரம், சந்தோஷம், சாதுசங்கமென்னுஞ் சற்புருஷர்களுடனே கூடி அவற்றினையே யாபரணமாகக்கொண்டிருப்பார்கள்.

வினா, ஏகாந்தத்துக்கிடையாத போகங்களிலிச்சைகொள்ளாரோ வென்னில்,

விடை, சமுத்திரமானது ஆறுகளைத் தனக்குள்ளாகவேயடக்கிக்கொண்டு மேலொன்றை நாடாதிருப்பதுபோலச் சீவன்முத்தர்களுந் தனக்குள்ள போகங்களை யனுபவிப்பதன்றி வேறுபோகங்களையிச்சித்து நாடமாட்டார்கள்,

வினா, ஆகிலிதுபோல இச்சாப்பிரயத்தினமின்றி நிகழ்காலத்துவரும் தொழில்களைப்பற்றியும் பற்றானைத்தோடுருந்து நடத்திவருங்காலத்து அந்தச்சீவன்முத்தர்களிருக்குந்தன்மையேதென்னில்.

விடை, விட்டபடாமை விட்டபட்ட விசாரம் தெளிவு வருந்தல் இருந்தல் இருப்பக்கூடுதல் யோசித்தல் தீர்த்தல் பார்த்தல் நிச்சயித்தலாகிய ஏழுமைகளுடனேயிருப்பார்கள்,

வினா, விட்டபடாமையேதென்னில்.

விடை, துயரமற்றசுகநிலையிலிருக்கிற பெரியோர்களுடைய சற்சங்கம்.

வினா. விட்டபட்டலேதென்னில்.

விடை, ரஜோதமோகுணங்களைப் பொருந்திய துஷ்டர்களுடைய துச்சங்கம்,

வினா, விசாரமேதென்னில்,

விடை, யாதொருவகையாலொன்றுபகுத்தறிவது

வினா. தெளிவாவதேதென்னில்,

விடை: குருசாஸ்திரங்களினாலும் அறிவினாலுந் தீர்ந்தநிலை,

வினா, வருந்தலாவதேதென்னில்,

விடை, அன்னையறியமைதுயிலிருந்துவது.

வினா, திருந்தலாவதேதென்னில்,

விடை, சகலகாரிய விரோதியானவைகளை நன்றாகத்தாற்செய்வது,

வினா, திருத்தல் கடமையென்னில்,

விடை, நல்லோர்களாயிய பெட்டிருவைராக்கியமாகிறது

வினா, பொருந்தலேதென்னில்.

விடை, சர்வாருந்தானென்கருதுவது.

வினா, தீர்த்தமேதென்னில்,

விடை, சரீரத்திலிருக்குஞ்சோபதாபங்கள்,

வினா, பார்த்தலேதென்னில்,

விடை, சர்வசராசரப்பிரபஞ்சங்களிலுமுள்ளீடாட்டுநிறைந்து வியாபக
ப்பட்டிருக்குந்தனது சொரூபத்தைத்தியக்கம்பு நீற்பது,

வினா, நிச்சயித்ததேதென்னில்.

விடை, பிரமாநிஸ்தம்பபரியந்தமுநிறைந்துள்ளது சிதம்பரந்தானது அது
எல்லாந்தன் வியாபகமென்றுநிச்சயித்தது இப்படிப்
பட்டதன்மைகளையறிவர்முத்தர்களாயிருப்பார்கள்,

வினா, முத்தரையிறவிளிருக்குமென்னில்,

விடை, முற்பிறவிகளிற்செய்தநற்போசல முயற்சியிருந்தாற்போருந்
தால்யக்தியேபெருகருத்திலும்வைமாட்டாது ஆகையால்
சத்துவகுணமேமோட்சத்திற்குப்பிரதானமாகும் இதுமு
மாயாகாரியமான ஜனனமரணசம்சாரதுக்கத்தைக்கெடுக்கும்,

வினா, இந்தச்சத்துவகுணத்தைஎவர்களடைந்திருப்பார்களென்னில்,

விடை, இனிப்பிறவாதமுடிந்த பிறவியுடையவர்களடைந்திருப்பார்
கள்,

வினா, ரஜோதமகுணங்களையெவர்கள் கொண்டிருப்பார்களென்னில்,

விடை, மண்டபத்தைத் தூண்கள்தாங்குவதுபோல சகலசீவர்களும் அவ்

நிர்க்குணமயப்பட்டுத்தாங்கிநிற்பார்கள் ஆகையால்சத்துவத்தை
க்கைப்பற்றிராசதாமதங்களைக்கைவிட்டவர்கள்சனனமரணப்
பிரவாகத்திலிருந்துகரையேறினவர்கள்

வினா, எப்படிகைவிடுவார்களென்னில்,

விடை, சத்துவத்தைப் பூண்டுகொண்டுராசததாமதங்களையுமதனாலே ரூ
பேரானந்தங்களையும் பாம்பானது தோலுரித்ததுபோல நழுவ
விடுவார்கள்,

வினா, அதெப்படியென்னில்,

விடை. சர்வபூரணாய்விளக்குகிறபடியால் நான்வேறு உலகம்வேறெ
ன்னுந் துவிதபக்ஷமொழிந்து பிரமமாகியசித்திலிடத்துண்டா
ன நாமரூபப்பிரபஞ்சமெல்லாம் சமுத்திரசலமே அலையாதிகளாகக்கா
ணப்படுதல்போலச்சித்ததேயல்லாமற் சத்தியமல்லவென்றுயோகங்களும்
பிறப்பிறப்புகளும் பிறப்பிறப்பிற் றவிக்கிறவர்களுமில்லை சந்தைப்போ
லாகாசம் நிறைந்தமாமிசமொன்றுமில்லை ஏகமாகியமேகமாகியும் என்
றைக்குமழியாப்பொருளே எந்தவிடத்திலும் சர்வவியாபகமாய் வியாபித்
துச் சத்தமாத்திரமாய்விளங்குமதென்று சஞ்சலரகிதமான யூகபுத்தியா
லறிந்துசகலதுக்கங்களும் விட்டுச்சத்துவமாத்திரமாய் மிஞ்சியிருப்பா
ர்கள்,

வினா. இன்னமெப்படியிருப்பார்களென்னில்,

விடை, சொரூப வியாபகத்தினின்று பூரணச்சந்திரப்பிரகாசம்போற்
சாந்தியடைந்து பரிபூரணமாய் மணிப்பிரபைபோற்றெளிந்
த திருவுளம் உண்டாயிருந்தாலும் விவகாரங்களைச்சமதிருஷ்டியாய்க்க
ண்டு நிசம்பற்றசபைவிட்டுச்செய்து இதுநடக்குமென்னும் விருப்பு
ம் ஆசாபாசங்களும் வெறுப்பற்ற உதாசீனமாத்திரமாயிருப்பார்கள்,

வினா, சத்துவகுணத்தின் மாத்திரம் ஞானமெளிதிலுண்டாமென்பதெ
ப்படியென்னில்.

விடை. உத்தமமானமூங்கிலில் விழுந்தபனிக்கூடாரானது முத்துகளாக

றுபோலச் சத்துவகுணத்திற் ஜெனமித்தவர்களேமேலோர் நல்லோர்மித்திரர்தெளிந்தோர் அநித்தியங்களைத்துறந்தநிச்சிய புத்திசாலிகளென்னும் விசிஷ்ட நாமங்களைப்பெறுவார்கள் அவர்களுக்கிதுமேமூமெளிதில்வரும்,

விறு, அவர்கள்பற்றியும்பற்றறுதொழில்செய்வதெப்படியெனில்.

விடை, சூரியன் இச்சையின்றிக்கிரணங்களாற் பிரகாசித்திருக்கவுந்தச்சந்நிதானபலத்தினால்கணம்நாழிகைசாமம் நாள்நட்சத்திரம்வாரம்பக்ஷம்மாசம்ருது அயனம் வருஷமுதலானதுகளும் தோன்றுவதுபோல்ஜீவன்முத்தர்களும் செல்காலம்வருகாலங்களிலுள்ள பொருள்களைச்சிந்தியாமல் நிகழ்காலத்து வருங்கருமமாத்திரந்தமது சுவானுபூதியாகக்கண்டுவிவகரிப்பார்கள்,

விறு, இப்படிவிசாரஞானபலத்தினால்துவிதபுத்திநீங்கி அத்துவிதானந்தசொரூபமாத்திரமான ஞானிகளைக்காயாதிகள் தொடர்ந்துவருத்தாதோவென்னில்,

விடை. இருப்புச்சட்டைதரித்தபுருஷனை ஆயுதங்கள் வருத்தாததுபோல்லிங்மாத்திரமாய்விளங்குஞ்ஞானியையுங்காயாதிகள்தொடர்ந்துவருத்தாதென்பதேதுணிவு,

விறு, மோகமாகியவற்சநாபிக்கொடிகளைப்பதற்கு மூலமாகியுஞ்சோகமாகியசர்ப்பமிருந்தாசாருமிடமாகியுமுள்ளசங்கத்தைத்தானென்னுஞ்சத்தியபுத்திபண்ணுவிக்குமஞ்ஞானமூலமான தேகமாகியும் நித்தியமாகியுமிருக்கிறசொரூபசுபாவந்தோன்றியாத்திரத்தில்வேம்ராமேடநாசமாமென்றுகூறியசுருதியுத்திப் பிரமாணங்களிருக்கச்ஜீவன்முத்தர்கள் நான்போனேன்வந்தேன் தூங்கினேன் விழித்தேனென்று சொல்லலாமோவென்னில்,

விடை, அவர்களப்படிசொன்னாலும்கமலபத்திரோதகம்போற்பற்றற்றேயிருப்பார்கள்அவர்கள்சித்தஞ்சென்றவிடமெல்லாஞ்சிதானந்தமாய்ரமித்திருக்கும் அதனால்வாதையில்லைஅப்படியின்றிநாமரூபங்களிற்

சித்தமானது பிறந்துபோய் விழுமாகில் மனமுங்கெடாது பந்தமும் போகாது ஆகலாற் கனாப்பொருளேயில்லையென்று சர்வமுஞ்சித்தாய்க் கண்டால் மனமொடுங்கும் பந்தம்போம் அதுவே மோட்சமாகும்,

விறு, ஆனால் பிரபஞ்சவியவகாரத்தை ஞானிகளெப்படிக் கண்டிருப்பார்களென்னில்,

விடை, நாமரூபமில்லையென்றும் விடயமுமில்லையென்றும் உருவமில்லாத வெளிபோல் தான் பரிபூரண சொரூபமென்றும் தனது சொரூபவியாபகத்தில் காணப்பட்ட நாமரூபங்கள் விளங்குகிறதென்றும் தனது சச்சிதானந்தசொரூபத்தையன்றி நாமரூபத்திற் காதாரமில்லையென்றும் சச்சிதானந்தமூன்றும் சொரூபசம்பந்தம் நாமரூபமிரண்டு மாயாசம்பந்தமென்றுங்கண்டு மாயாசம்பந்தத்தைவிட்டுச் சர்வமும் சத்தாமாத்திரமான சொரூபமேயென்றுறுதியாய்ப் பார்த்திருப்பார்கள் அங்ஙனமான பெரியோர்கள் ஆசையாகிய கட்டெல்லாம் அசங்கத்தியமாகியவாளாலறுத்து நானென்னுந் தேகபாவனையை நானென்றுறை ஈட்டியினாற் குத்தி எல்லாமிறந்த சொரூபசுவாபமே தானென்று பாவித்தபாவனையினால் ஜெனனமரணமில்லாத முத்திசொரூபமாவார்கள்.

விறு. இந்தச்சீவன்முத்தர்களுக்கு ஏகதேசமாய் இன்பமான சுகம்வந்தாலும் துக்கம்வந்தாலும் அந்தச்சுகத்தில் ரமித்தும் துக்கத்தில் வருந்தியுமிருப்பார்களோவென்னில்,

விடை. அப்படிப்பேர்கள் சுகம்பயம்கோபம் துக்கம் பொறுமைமுதலிய விளைவுகள் வந்தவிடத்துமிதுகளை ஒருபொருளாய்க் காணாது சத்தாமாத்திரமாய்க் கண்டு சுழுத்திபோல் விச்ராந்தியடைந்து சொரூபபாவனை நீங்காதிருப்பார்கள் இதுவே சிவசாக்கிரம் இந்தச்சாக்கிரத்தினின்று ஒருநிமிஷமாகிலும் பிரியாதவர்களே சீவன்முத்தர்கள்,

விறு, சகலவாதனைகளுஞ்சுழுத்திபோலாகிவிச்ராந்தியாய்த் தெளிந்த பூரணதிருஷ்டியமைக்காமல் சீவன்முத்தியடைந்தபெரியோர்கள் திரும்பவும் இந்தவுலகத்தில் வசிப்பார்களோவென்னில்,

விடை. மாயாமயமான ஆசாபாசங்களற்றுச் சகலவாசனைகளுநீங்கி அகத்தி

ந்சின்மாத்திரமாகியும் புறத்தில் சகல ஆசாரக்கிரியைகள்செய்து யிருப்பார்கள் அன்றியும் புறத்தொழில்கள் ஆரம்பித்துச் செய்கிறவர்கள் போற்காட்டி அகத்திலொரு தொழிலுஞ்செய்யாதவர்களாய் அகங்காரர ராய்த் திடசித்தராயிருப்பார்கள் அல்லாமலும் ஆகாசம்போலருவமாய் ஆவரணநீக்கிச்சகல நாமரூப அடையாளங்களும் விட்டுவிட்டு வேண்டியவ ண்ணை மூலகத்தின்கண் விளையாடுவோர்கள்,

வினா, இப்படிச்சத்துவகுணந்தாடிருந்துஞ்சென்மமில்லையென்பதெ ப்படியென்னில்.

விடை, வறுத்தவினையானது இனிக்குதவியாகுமல்லாமல் முளைப்பதற் குக்காரணமாகாதது போற்சத்துவகுணமும் சுத்தவாசனைக்குக் காரணமானவுதவியாய் சிவன்முத்தர்களிடத்திலிருக்கிறபடியால் சென்மமில்லை.

வினா. சுத்தவாசனையாவதேதென்னில்.

விடை. சத்துவத்தைவிடாமல் ஒன்றான ஆத்மத்தியானமாத்திரமாய் நிரு விகற்பமாயிருப்பதே சுத்தவாசனை இதுகேவலமாத்திரமாயிருப்ப தால்இதில்சதாகாலமுஞ் சமாதிபோல்லயப்பட்டிருப்பவர்களை சதாசமாதியடைந்திருப்பவர்களாம்.

வினா, சொரூபசமாதியடைந்தவர்களெத்தனை விதமாயிருப்பார்களெ ன்னில்.

விடை, இரண்டுவிதமாயிருப்பார்கள்.

வினா. எப்படியென்னில்,

விடை, நாமரூபவிவகாரத்தொழில்களோடுங்கூடிச்சமாதிசெய்பவர்களு ம்அவைகளிற்பயனில்லையென்றுதுறந்து ஏகாந்தமாய் தனியிட த்திருந்து சமாதிசெய்வர்களுமாயிருப்பார்கள் அங்ஙன மாறு லும் இருவர்களுக்குமோட்சபலமொன்றேயாகும்,

வினா அதெப்படியென்னில்,

விடை. இரண்டுபேரிதயங்களுஞ் சீதளமாத்திரமாயிருக்கும் அச்சீதள மே அவர்களனந்தஜென்மங்களிற்செய்துள்ள தபோபலமென் றுசொல்லுவார்கள் அவ்வனுபூதியிற்சதாகாலமுஞ் சுகித்திருப்பவனுடை

மனமானது ஏகதேசகாரியங்களிற் பிரவேசித்துச் சலனமடைந்தாலும் அதனாலொருங் கலைகளால் அவனுக்கொரு ஆனிவிருத்தியுமில்லை - அவன் சமதிஷ்டியாயிருந்து உன்மத்தன்போலும் சடத்தாடிபாசாங் கடிப்பது போலும் ஒருவருத்தருமின்றிச் சுகசமாதியிலிருப்பன் - ஆதலாலறிஞர்கள் வியவகாரங்களைச் செய்தாலும் அதனின்று நீங்கிச்சதாநிஷ்டராய்ச் சொரூபசமாதியிலிருந்தாலும் இருவருக்கும் மோட்சபலஞ்சமனாயிருக்குமன்றி உயர்வு தாழ்வு இல்லையென்று சுருதிஸ்மிருதிகளிற் சொல்லப்படுகின்றது.

வினா, வியவகாரநீங்கிச்சதாநிஷ்டராயிருப்பவர்கள் எவ்விடத்தில் வசிப்பார்களென்னில்.

விடை, அங்ஙனஞ் சமாதியோகிகள் தூங்கினாலும் விழித்தாலும் வியவகாரங்கள் செய்தாலும் செய்யாதிருந்தாலும் சதா அந்தர்முகதிருஷ்டியாயிருப்பதனால் ஸ்ரீநாரதாதிகளெல்லாஞ் சமாதியைக் கண்டிருப்பதினைந்தனையாயிருக்கும் - அதனாலஞ்ஞத்தாற்றாவும் அதிசீதளமான சொரூபானந்தம் விளங்கும்-இப்படிப்பட்ட அந்தர்முகநிஷ்டையில்லாதவர்கள் வனங்களிற் குகைகளிலாசனங்கட்டிக் கொண்டிருந்தபோதிலும் மனம் பகிர்முகப்பட்டிருப்பதினால் அந்தவனங்கள் குகைகளெல்லாம் வீதி நாடுகளாகவே தோற்றிக்கொண்டிருக்கும்-ஆகையினால் ஒருதொழில்களை செய்தாலுஞ் செய்யாதொழில்களை நீக்குச் சுகசமாதியிலிருந்தாலும் அந்தர்முகநிஷ்டையுடைய அறிஞர்கள் மனம் விஸ்தாரத்தியமடைந்து அதிசீதளமான சொரூபசமாதியிற் றானிகித்திருக்கும் அவர்களுக்குச் சுருதியுக்தமும் நிலையென்று சுருதிஸ்மிருதிகளிற் சொல்லப்படுகின்றது சித்தம்.

நான்காவது - உற்பத்திப்பிரகரண முற்றிற்று.

ஐந்தாவது.

உபசாந்திப்பிரகரணம்.

அவதாரிகை.

முற்பிரகரணங்கள் நான்கினுஞ் சொரூபசமாதியடைந்து நிஷ்டாபரனானசிஷ்யனுக்குமேல்சென்றவிடமெல்லாஞ்சிதானந்தமாகாயிக்கு

மோக்ஷானந்தானுபவமுத்தமமாகும் பொருட்டு உபசாந்திப்பிரகரணங்கூறுகின்றார்.

கவி.

வானதாமனுடயோனிவந்திடலரிதுவந்தா ... . *
மானவேதங்கள்கற்பதரிதுவுவந்தாற்றாலு ... ... *
ஞானசாதகங்களெய்தலரிதனுநண்ணினாலு .. .. *
மீனவஞ்ஞானமின்றியிருத்தலிங்கரிதுகாணே ... . (௧)

விபரீதசம்சயங்கள்வினவிவேயதிர்ந்திட்டாலு .... *
மபரோட்சந்தனிலஞ்ஞானமகன்றிடாதிருக்குமென்னிற் *
றவமெனுங்குருவந்தாலுஞ்சாஸ்திரங்களினுநீங்காத் .. ...*
துவந்துவமுடையோனுமதுமோகியெனறறையும்வேதம் *

இதன்பொருள்.

வினா. சகலசந்தேகவிபரீதங்களும் விட்டுப் பிரபஞ்ச விவகாரங்களை நீத்துஞ் சுழுத்திபோலாகிச் சாக்ஷிட்டநிஷ்டர்களாய் விஸ்ராந்தியடைந்திருக்கும் அறிஞர்களாமனத்தில் ஒருமேகமாக [illegible] லச்சமதிருஷ்டிநீங்கிஅஞ்ஞானமான அசம்பாவந்தோற்றுமாறு அவர்களுக்குக்கதியில்லையோவென்னில்.

விடை. அங்ஙனமானபெரியோர்களுள்ளத்தில் அசம்பாவனையிருக்கவில்லை-அவர்களுக்குக்கன்மமுமில்லை-அப்படியின்றிருந்தாலு ஏகதேசத்திலுண்டாகுமானாலவர்களுக்குக்கதியுமில்லை.

வினா. அதெப்படியென்னில்,

விடை, இந்தப்பூமியின்கண் உற்பவிக்குங்காலத்தில் மானிடயோனியிற்பிறப்பதரிதுபிறந்தாலும் வேதாத்தியயனத்திற்குரிய பிராமணகுலத்திற்பிறப்பதரிதுபிறந்தாலும் ஊமை செவிடு குருடு நீங்கப் பிறப்பதரிதுபிறந்தாலும்பேய்நீக்கிப்பிறப்பதரிது பிறந்தாலும் வித்தியாப்பியாசம்பண்ணுவதரிதுபண்ணினாலும் வேதாத்தியயனம் பண்ணுவதரிதுபண்ணினாலும் அவற்றில்நிருமிதமானகன்மங்களைச்செய்வதரிது.

வினா, அந்தக்கருமங்களாவதேதென்னில்,

விடை, நித்தியம் நைமித்திகம்காமியம் நிஷேதம்பிராயச்சித்தமென ஐந்துவகையாயிருக்கும்,

வினா, நித்தியகன்மமாவதேதென்னில்,

விடை, ஸ்நானபானசந்தியாவந்தனைஜெபஹோமதேவதர்ப்பணைவைவசுவ தேவபசுவந்தனைமுதலானதுகளாம்,

வினா, நைமித்திககன்மமாவதேதென்னில்,

விடை, சங்கிராந்திபக்ஷம் அர்த்தோதயம் மஹோதயம்முதலியபுண்ணிய தினங்களில்நீராடல்முதலானதுகளாம்,

வினா, காமியகன்மமாவதேதென்னில்,

விடை, அசுவமேதாதி [illegible] பௌண்டரிகமுதலானயாகங்கள்செய்தல்சோ மபானவிரதமுதலிய [illegible] களைச்செய்தலாம்,

வினா, நிஷேதகன்மமாவதேதென்னில்,

விடை, பிறனில்விழையாமை கள்ளாமை கொல்லாமை கள்ளுண்ணாமை பொய்யாமை முதலிய நியமங்களைக்கொண்டிருத்தலாம்,

வினா, பிராயச்சித்தகன்மமாவதேதென்னில்,

விடை, சாந்திராயணம்கிரிச்சரம்சலபக்ஷணம்வாய்வுபக்ஷணம்தீர்த்தயாத்தி ரைமுதலான கருமங்களைச்செய்தலாம்,

வினா, இந்தக்கன்மங்களின்பயனென்னவென்னில்,

விடை, தேகமிருக்குமட்டும்நித்தியநைமித்திய கன்மங்களைச்செய்துவ ந்தால் பிராரத்தம்போகும்காமிய கன்மத்தைச்செய்துவந்தால் சொர்க்கபோகமுண்டாகும் நிஷேதபிராயச்சித்த கன்மங்களைப் பண்ணிவந்தால்சஞ்சிதம்விடுபடும் அதனால்முத்திவருமென்று சிலர்சொல்லுவார்கள் அதுமுத்தியல்ல,

வினா, அதெப்படியென்னில்,

விடை, காமியகன்மத்தினால் ஞானம்வரமாட்டாது சொர்க்கபலமாத்தி[illegible]

ரிவன்பேர்த—மோரியுந்தன்னைத்தானென் றறியுமவ்வளவுந்தானே * தன்
னையுந்தனக்காதாரத் தலைவனையுங்கண்டானேற் — றன்னையறிந் தலைவன்று
ருப்பிரமமாய்ப் பிறப்புதிர்வ—னுன்னை நீயறியாயாகி லுலகங்காருங்க
டேயில்லை—யென்னை நீகட்டையபோலேயிருப்பதேசித்தேமே

சிவபோகசாரம்,

தன்னையறியார்தலைவன்றனையறியார்—முன்னைவினைபின் முடிவறியா
ர்.இன்னைக் - குருக்களென்றுபேரிட்டுக் கொள்வார்களோபோ குருக்களி
லேநின்றசிலர்—என்றுங்கூறப்பட்டிருக்கின்றது,

வினு, தன்னையறியும்விதமெப்படியென்னில்,

விடை, பிரபஞ்சத்திற் சத்தாதிவிடயங்களாகத்தோற்றும் இந்திரியவறி
வெல்லாம் சீவன்றானேயனுபவிப்பதாக அறியாமையினாற்கொ
ள்ளுமிடத்து இந்தப்பொறிவழி பார்க்காலுந்நாமரூபங்களெல்லாம் இந்
திரியங்கட்குத் தோற்றமேயன்றிச்சிதாபாசனுன சீவனுக்கில்லையென்ப
து அனுபவமாகுமெப்படியென்றால்நற்சத்தந்துற்சத்தங்களென்றறிவது
சுரோத்திரேந்திரியவறிவல்லாமல்சீவவறிவல்ல,

வினு, அதெப்படியென்னில்,

விடை, செவிடர்களுக்குஞ் சீவனிருக்கிறபடியினால் அந்தச்சீவன்சத்தத்
தையறியவேண்டும் அப்படிகாணுமையால் சத்தத்தையறிகிறவ
றிவு சுரோத்திரேந்திரியமே அதைச்சீவனறியாமையால் தன்மேலாரோ
பித்துக்கொண்டு நானேசத்தமறிகிறவனென்றதல்லாமல் சீவனுக்கு இந்த
ப்பிரவையறிவுகாலத்திரயத்திலுமில்லை,தொக்கிந்திரியவறிவானபரிசமுஞ்
சீவனையறிவதானால்நமிர்ந்நாய்கொண்டவர்களிடத்துஞ் சீவனிருக்கிறப
டியினால்அந்தச்சீவன் சீதோஷ்ணபரிசத்தையறியவேண்டும் அப்படிகா
ணுமையால்பரிசத்தையறிகிறதறிவுதொக்கிந்திரியமே அதைச்சீவனறியா
மையால் தன்மேலாரோபித்துக்கொண்டு நானேபரிசமறிகிறவனென்ற
தல்லாமல் சீவனுக்குப்பின்னவறிவு காலத்திரயத்திலுமில்லை, நேத்திரேந்
திரியவறிவான ரூபமும் சீவனேயறிவதானால்குருடர்களுக்குஞ் சீவனிரு
க்கிறபடியால் அந்தச் சீவன்பஞ்சவன்னங்களையறியவேண்டும் அப்படி

காணுமையால் ரூபத்தையறிகிறவறிவு நேத்திரேந்திரியமே அதைச்சீவனறியாமையால் தன்பேரிலாரோபித்துக்கொண்டு நானேரூபமறிகிறவனென்றெண்ணாமல் சீவனுக்குப்பின்னவறிவு காலத்திரயத்திலுமில்லை, சிங்குவேந்திரியவறிவானரசமும் சீவனையறியாதானால் தோஷப்பிறந்தவர்களிடத்துஞ்சீவனிருக்கிறபடியினும் அந்தச்சீவன் ஷட்வகைருசிகளைப்பற்றியவேண்டும் அப்படிகாணுமையால் ரசத்தையறிகிறவறிவு சிங்குவேந்திரியமே அதைச்சீவனறியாமையால் தன்பேரிலாரோபித்துக்கொண்டு நானேருசியறிகிறவனென்றெண்ணாமல் சீவனுக்குப்பின்னவறிவு காலத்திரயத்திலுமில்லை, கிராணேந்திரியவறிவானகந்தமும் சீவனையறியாதானால் மூக்கிந்திரியமில்லாதவர்களுக்குஞ்சீவனிருக்கிறபடியால் அந்தச்சீவன் நற்கந்தந்துர்க்கந்தங்களைப்பற்றியறியவேண்டும் அப்படிகாணுமையால் கந்தத்தையறிகிறவறிவுகிராணேந்திரியமே அதைச்சீவனறியாமையினால் தன்பேரிலாரோபித்துக்கொண்டு நானேவாசனையறிகிறவனென்றெண்ணாமல் சீவனுக்குப்பின்னவறிவு காலத்திரயத்திலுமில்லை இப்படியிருக்க இவ்விந்திரியவறிவுகளைப்பலவாய்த்தன்னிடத்திலாரோபித்துக்கொண்ட ஆயுளைமுழுதுஞ்ஞானதிருஷ்டியினால்விட்டு இந்தப்பொறிவழிகளாலார்ச்சிக்கப்பட்டபுண்ணியபாவங்கள் தனக்கில்லையென்றுகண்டு நிரிந்திரியனாய் நிர்த்தேசனுயிருக்குங்கூடஸ்தசைதன்யரூபமே நானென்பது விசாரித்தறியவேண்டும் இந்தப்படியேசஞ்சீவனுக்கு விஷயங்களாகத்தோற்றும் கர்மேந்திரியவறிவெல்லாஞ்சீவன்தன்னிடத்திலாரோபித்துக்கொண்டதல்லாமல் சீவனுக்கில்லை.

வினா. அந்தப்படியென்னில்,

விடை. ஊமையருக்குஞ்சீவனிருக்கிறபடியால் அந்தச்சீவன்வசனிக்கவேண்டும் அப்படிகாணுமையால்வசனிப்பது வாக்கிந்திரியமே— கையில்லாதமுடவனுக்குஞ்சீவனிருக்கிறபடியால் அந்தச்சீவன் ஏற்றலிடுதல்செய்யவேண்டும் அப்படிகாணுமையால் ஏற்றலிடுதல் செய்வதுபாணீந்திரியமே— காலில்லாதமுடவருக்குஞ்சீவனிருக்கிறபடியால் அந்தச்சீவன்நடக்கவேண்டும் அப்படிகாணுமையால் நடப்பதுபாதேந்திரிய

மே, லிங்கலேபனமில்லாதவர்களுக்குஞ்சீவனிருக்கிறபடியால் அந்தச்சீவ
ன்போகிக்கவேண்டும், அப்படியானமையால் போகிப்பது உபஸ்தேந்தி
ரியமே — பலங்குறைந்த குரஞ்சுருங்கலானவர்களுக்குஞ் சீவனிருக்கிற
படியினால் அந்தச்சீவன்மலவிசர்க்கஞ் செய்யவேண்டும் அப்படியான
மையால் மலவிசர்க்கஞ்செய்வதுபாயுரிந்திரியமே — இப்படியிருக்க இந்
தக்கன்மேந்திரியவறிவுகளையெல்லாந்தன்னதாகக்கொண்ட ஆவரணம்வி
டுபட்டு இவைகளாலார்ச்சிக்கப்பட்டபுண்ணியபாவங்களெல்லாந் தனக்கில்
லையென்றுஞானதிருஷ்டியாற்கண்டு அசங்கனாகிய கூடஸ்தசொரூபமே
தானென்பது விசாரித்தறியவேண்டும் — இந்தப்படியே பஞ்சகோசங்க
ளையுஞ் சீவன்தானென்று ஆரோபிதமாய்க் கொண்டதல்லாமல் சீவனுக்
கில்லை.

வினா. அதெப்படியென்னில்,

விடை. பருத்தேனிளைத்தேனென்பது ஆறுதத்துவமான அன்னமயகோ
சதாதாத்மியமன்றிச் சீவனுக்கில்லை - உசுவாசித்தேன் நிசுவாசித்
தேனென்பதுபிராணமயகோசதாதாத்மியமன்றிச்சீவனுக்கில்லை - சங்க
ற்பித்தேன் விகற்பித்தேனென்பது மனோமயகோச தாதாத்மியமன்றிச்சீ
வனுக்கில்லை - நான்கர்த்தாபோக்தாவென்பது விஞ்ஞானமயகோசதாதா
த்மியமன்றிச்சீவனுக்கில்லை - நான் அஞ்ஞானியென்பது ஆனந்தமய
கோசதாதாத்மியமன்றிச்சீவனுக்கில்லை,

வினா. அதெப்படியென்னில்,

விடை. என்சரீரமென்னும்போது தான்வேறுசரீரம்வேறென்றும் என்
இந்திரியமென்னும்போதுதான்வேறு இந்திரியம்வேறென்றும்,
என்பிராணனென்னும்போது தான்வேறு பிராணன்வேறென்றும் என்மன
னமென்னும்போது தான்வேறுமனம்வேறென்றும், என்புத்தியென்னு
ம்போது தான்வேறுபுத்திவேறென்றும், என்சித்தமென்னும்போதுதா
ன்வேறு சித்தம்வேறென்றும், என்அகங்காரமென்னும்போது தான்வே
று அகங்காரம்வேறென்றும், என்அஞ்ஞானமென்னும்போதுதான்வே

று. அஞ்ஞானமேயென்றும், வருகிற அநுபவத்தினால் தனக்கன்னியமாக்கண்டதோன்றியவைகளெல்லாந் தன்னிடத்திலே ஆரோபிதமாய் விவகாரதசையில்மாத்திரமிருக்கிறதென்று விசாரித்தறியவேண்டும்.

வினா, இப்படியறிந்தவர்களுக்கு ஆரோபிதமில்லையோவெனில்,

விடை. இப்படிசாட்சிமாத்திரமாயிருப்பவர்களுக்குச் சத்தமறிவதாகிய சுரோத்திரமும், பரிசமறிவதாகிய தொக்கும், ரூபமறிவதாகிய சட்சுவும், ரசமறிவதாகிய சிங்குவையும், கந்தமறிவதாகிய கிராணமும், வசனிப்பதாகிய வாக்கும், ஏற்றலிடுதலாகிய பாணியும், கமனம்பண்ணுவதாகிய பாதமும், ஆனந்திப்பதாகிய உபஸ்தமும், மலவிசர்க்கம் பண்ணுவதாகிய பாயுருவும், உசுவாசநிசுவாசம்பண்ணுவதாகிய பிராணாதிவாயுக்களும், சங்கற்பவிகற்பஞ்செய்வதாகிய மனமும், நிச்சயிப்பதாகிய புத்தியும், அஞ்ஞானமாகிய அவித்தையும் பின்னமின்றி யபின்னமான அறிவுசொரூபமாக்கண்டிருப்பதால் விசாரித்தறிந்தவர்களுக்காரோபிதமேயில்லை இப்படிக்குவிகாரமின்றி நிர்விகாரமாயிருக்க அவாந்தரகற்பனையான மனமயக்கமுற்றே ஜெனனமரணங்களுண்டானதுபோற்றோற்றியது.

வினா, அப்படியானால் ஜெனனமரணநரகசொர்க்கங்களனுபவித்ததாரென்னில்,

விடை, கன்மகாண்டத்தில் விதியாகச்சொன்ன புண்ணிய கன்மங்களைத் தேகேந்திரியங்களாற்செய்து அதற்குத்தக்கதேவபோகங்களையுந் தேகேந்திரியங்களேயநுபவித்தது - நிஷேதமாகச்சொன்னபாவகன்மங்களைத் தேகேந்திரியங்களாற்செய்து அதற்குத் தக்கதிரியக்காதிஸ்தாவரசரீரங்களெடுத்து துக்கரூபமான நரகங்களையுந் தேகேந்திரியாதிகளேயநுபவித்தது - இந்தத்தேகேந்திரியாதிகளேதானென்றும் இதுகளாலார்ச்சிக்கப்படும் புண்ணியபாபகன்மங்களைத் தன்னதென்றும் அத்தியாசமாகக்கொண்டவஞ்ஞானதோஷத்தினால் அளவிறந்தஜனனமரணங்களுண்டாயிற்று - தீர்க்கமாய்விசாரித்தறியுமிடத்தில் சகலமும் இந்தத்தேகேந்திரியாதிகளுக்கேயல்லாமல் ஏகமாய்நித்தியமா யிருக்கப்பட்டதாரு

சமுத்திரக்குங்கரைக் கண்டனே—என்றும் * கந்தரனுபூதி-கைவாய்கதிர்
வேன்முருகன்கழல்பெற் - றுய்வாய்மனனேயொழிவா யொழிவாய்மெய்
வாய்விழிநாசியொடுஞ்செவியா-மைவாய்வழி செல்லுமவாவினையே-என்
றும்-நாலடியார்-மெய் வாய்கண் மூக்குச் செவியெனப்பேர்பெற்ற-ஐவ
ாயவேட்கையவாவினைக்-கைவாய் - கலங்காமற்காத்துய்க்குமாற்றலுடை
யார்-விலங்காதுவீடுபெறும்-என்றும் சிவஞானசித்தியார்-ஒருபுலனுகரு
ம்போதங்கொன்றிலேயொன்றின்பாலும் - வருபயன்மாறிமாறிவருந்திடு
மெல்லாமாய-மொருபொழுதுணரினுண்டாயில்ல தூவல்லல்வாழ்க்கை-
மருள்கனவதுவும்போலமாயும் பின்மாயமென்றே—என்றும்-தேவாரம்-
வென்றிலேன்புலன்களைந்தும்வென்றவர்வளாகந்தன்னுட்-சென்றிலேன்று
தலாலேசெந்நெறியதற்குஞ்சேயனே - னின்றநின்றொண்டர்புகின்றேனீச
னெனீசனேயோ-வின்றுளனாயிலேனைனைவந்தேன் றென்றிலே
னே—என்றும்-மெழுதி-வைத்தன்னபடியெய்ப்பயாதுசூற்றுங்கடு
நிம்மாயவாழ்க்கைகாலைமொடாயுப்பேசுக்கின்றேன் - முகிழ்முளிதனுளைவர்
மூர்க்கமாயவர்களோடு - படியமேனவாழ்வாட்டே முறுநேர்முலட்டமுனோ-
னென்றும்-புள்ளுவனானவர்வன்படுமாத்திடைமனமறந்துந் திரம்-துறவயர் கு
றைகொண்டுனரோநெறியினையவாட்டார் - முன்பிறவடையன— மு
க்கணுன்பாதநீழ-லுள்ளிடைமறந்து நின்றபுனைவேனுமலைப்பதாமோ-
என்றும்-பொய்யனைத்தையும்விட்டவர்புந்தியுள்-மெய்யெயல்ச் சுடர்வெ
ண்டமுவேந்திய-மையனைக்கச்சியேகம்பமேவிய - ஐயனேக்கிலாமோர்
த்தில்லைபல்லமே—என்றும் - மூக்குவாய்செவிகண்ணுடலாகிவந்-தாக்கு
மைவர்தம்மாற்பையவிழ்த்த-நோக்குவானமை நோய்வினைவாராமேகாக்
குநாயகன்கச்சியேகம்பனே—என்றும்-திருவாசகம்-மாறுபட்டஞ்சென்
னைவஞ்சிப்பயானுன்மணிமலர்த்தாள்-வேறுபட்டேனை விடுதிகண்டாய்வி
னையேன்மனத்தே-யூறுபட்டேயனுமுந்தேசோசமங்கைக்கரசே-நீறு
பட்டேயொளிகாட்டும் பொன்மேனிநெடுந்தகைப்பே—என்றும்-இந்திரி
யவயமயக்கிறப்பதற்கேகாரணமா-யந்தரமேதிரிந்துபோயருநரகில்

வீழ்வேற்குச் - சிந்தனையைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வந்தமிலா வானந்தமணிகொடில்லைக்கண்டேனே—என்றும்-பரிபூரணப்பி
ரகாசம்-பந்தப்புரங்களொருமூன்றும் பாமனிடையேயிருப்ப தெளிந்
தெருந்தப்புருஷர்க்கொருக்காது நசி-ராருதனூற்றுஞ்சா - வந்தப்பரமனை
யவன்றன்றியானமயிலலெப்பரனைப் - பந்தப்படுமோர் சிவனெனப்பார்
ப்பான் பவத்தேபதைக்கின்றான்—என்றும்-சொரூபசாரம்-கண்ணலாற்
கண்டதுண்டோகாதலாற்கேட்டதுண்டோ - விண்ணலாலேதும்விளைந்த
துண்டோ-வெண்ணுங்காற்-கானலாறோடிவரக்கண்டது போற்றோற்
றிருந் - நானலாதுண்டோசகம்—என்றும் - போதம்புவனம்பொ[illegible]
மிடமென்றாற்-தேகக்காரணந்திரிபுடையாகிலது - தன்னை நீயென்றுதாங்
காட்டு நெஞ்சமே-நின்னை நீ கண்டறிந்துநில்—என்றும் - திருமந்திரம்-
சீவனையவரும் சிவனென்றும்வேறில-சீவனார்சிவனாராயறிகிலார்-சீவனார்
சிவனாராயறிந்தபின்-சீவனார்சிவனாகியிருப்பரோ-என்றும்-கடையவெழி
ந்திட்டிருந்த பனைமரமடைய விழுங்கியதுவானவாறுபோ - லுடலிலொ
ன்றுறுபட்டிருந்தசிவமுயிரடைய விழுங்கியது வானவாறே- என்றும்-தன்
னையறியத்தனக்கொருகேடில்லை - தன்னையறியாமற்றானேகெடுகின்றார்-
தன்னையறியுமறிவையறிந்தபின் - தன்னைவிட்டென்னை யினிதுணர்ந்
தேய்மை - என்றும் - எல்லாமறிவதறிவுதனைவிட்டே - யெல்லாமறிந்துமி
லாபமிங்கொன்றில்லை- யெல்லாமறிந்தவறிவினையானென்னி - லெல்லாம
றிந்தவிறையெனலாமே-என்றும்-பொன்வண்ணத்தந்தாதி - ஒழிந்தே
ன்பிறப்பினை யூர்த்தேனறுவகைசயோங்கிற்றுள்ள - மிழித்தேனுடம்பினை
யேலென்பிறரிடையிம்பனையும்-பழித்தேன்பழியேவிளைக்கும்பஞ்சேந்தி
யக்குஞ்சரமுந் - தெழித்தேன் சிவனடிசேர்ந்தேனினிமிகத் தெள்ளி
யனே-என்றும்-இருவம்பாவை-மெய்யானதொன்றுமே மெய்ம்மைமனை
ம்பானை-மெய்யன்றிமற்றெல்லாமித்தைகாணம்பானை-என்றும் - கூறப்ப
ட்டிருக்கின்றது.

வினா, இன்னுமெப்படியென்னில்,

விடை. சச்சிதானந்தசொரூபமாகியும்அகண்டத்துவமாகியும் அபரிச்சி ன்னத்துவமாகியும்சர்வவியாபகமாகியும்காலபரிச்சேததேசபரி ச்சேதவஸ்துபரிச்சேதாதிதமாகியும் நிராமயமாகியுமிருப்பதே ஆத்மசொ ரூபமென்றுசுருதிஸ்மிருதிகளும் உபநிஷத்துமகாவாக்கியங்களும் குரு வாக்கியமுங்கூறப்படுகின்றது.

வினா. சத்தென்பதெப்படியென்னில்.

விடை, முற்பிறவிகளிற்செய்த நல்வினைதீவினைவழிப்படி இந்தசரீரம் வந்ததென்று சொல்லுகையாலும் இப்போது செய்கின்றவினை களுக்கினிமேற்பிறவிவருமென்பது சர்வானுபவமாய்க்கண்டிருப்பதினா லும் இப்படித்திரிகாலங்களிலுமுண்டான சரீரமாத்திரமழிந்து தானித்தி யமாயழிவற்றிருப்பதினாலும் சத்தென்பதாயிற்று,

வினா, சித்தென்பதெப்படியென்னில்,

விடை, பாலியாவஸ்தைமுதல்நடந்துவரும்விவகாரங்களிற்சிறிதுமறந்தி ருந்தாலும் மற்றவிருத்தாந்தமெல்லாம் அமாவாசையிருளும், மேகாந்தகாரமும் மழைநிசியுங்கூடியகாலத்திலும் தாழ்விட்டுப்பூட்டி டிட்டுக்கண்களைமூடிக்கவிழ்ந்துபடுத்திருக்கிற புருஷனுக்கும் சூரியச ந்திராக்கினிமின்மினி நட்சத்திரநேத்திரசாதனங்களொன்றுமில்லாதிரு ந்தும் இன்னதின்னதென்று குத்தறியப்படுகிறதினால் சித்தென்பதா யிற்று.

வினா. ஆனந்தமென்பதெப்படியென்னில்,

விடை, தனதானியதாரபுத்திரர்களால்வருஞ்சுகங்களைநெடுநாளாய் ஒரு க்கால்போலப்பலகாலுமனுபவித்து அதுகளால் வருஞ்சுகமெல் லாந் துக்கமாய்க்கைவிட்டுச்சுழுத்திசுகத்தையேசதாநாடுகிறபடியால் ஆ னந்தமென்பதாயிற்று,

இதற்குதாரணம்கைவல்யநவநீதம்- சென்மாந்தரஞ்செய்தவினை களுடனுருமெனிற்செல்காலமிலதுண்டலோ- சன்மானுபவநரகசொர்க்க

மெனில் வருகின்றகாலத்துமிவனுண்டலோ - வன்மாதயர்தனுவுடல்கட வுளுடன்மனுடவுடன் மாறிமாறிப்பிறியுந்—தன்மாயவுடல் கெடினுமிவ னிருப்பதுகொண்டுசத்தென்பதொக்குமகனே - என்றும்-இருளாகமூடு ஞ்சுழுத்தியிலிராத்திரியிலிரவிசுடரற்றபொழுது - மருளாமலிருளையும் பொருளையுந்தெரிகின்றவகைகொண்டுசித்தாகுமே— பெருவாழ்வுமிக்க தானே தன்னிடத்தினிற்பெயராதபிரியமதனு-லருகாதபிரியஞ்சுகத்தில்வ ருமாதலா லானந்தமானைந்தனே —என்றும் - சத்தேசித்தாகுமயலெனி லசத்தாமசத்தாலுற் சாட்சியெங்கே - சித்தேசத்தாகு மயலெனிற் சட மாஞ்சடங்களுக்குத் - திதியுமில்லை — பொற்றேதோன்றிய சத்துஞ்சி த்துநல்லசுகமாகு மூகத்துக்கோர் — வித்தேயன்னியமாகிற்சடம சத்தா ஞ்சுகானுபவம்விளைந்திடாதே —என்றும் - வீயாதசந்தமுமனம்விளங்கு வதுதன்னுலோவேறென்றாலோ— வாயாலெவ்வெறனிலதுவுமசத்தோசத் தோவசத்தேல்மலடிமைந்தன்-பேயாகாரியஞ்செயுமோ வசத்தெனவிப் படியதையும்பிரித்துச்சொன்னு—லோயாதவைந்தையாங் குதர்க்கவிகற் பங்களைவிட்டொழிந்திடாயே - என்றுங்கூறப்பட்டிருக்கின்றது-ஓர்கு கம் ஓர்சரீரங்களைக் குறித்து அதற்குள்ளிருப்பவன்போற் கண்டமாகியு ம்பரிச்சின்னமாகியும் ஓர்தேகவியாபகமாத்திரமாகியுமிருப்பதால் இனி அகண்டமாகியும் அபரிச்சின்னமாகியுஞ்சாவததினுள்ளும் புறமும்வியா பித்திருக்கும் சர்வவியாபகமாகியுமிருக்கின்றதல்லவாறுவப்பிரமசொரூப த்தையுமித்தப்படியே விசாரித்தறியவேண்டியது,

விரு, அதெப்படியென்னில்,

விடை, அகண்டபரிபூரண வியாபகமாகியும் அபரிச்சின்னமாகியும்கால ந்தேசவஸ்துபரிச்சேத [illegible] பிரமசொரூப [illegible] ன்றுசருதிகளெல்லாம் [illegible] சொல்லுகின்றது.

வினா, ஆகாசத்திற்கும்இந்தக்குணங்களிருக்கிறபடியால் அதுவேபிரமமென்றுசொல்லலாமேயென்னில்,

விடை, ஆகாசமானது நான்குபூதங்களினும்நிறைந்து சர்வவியாபகமாய் நிரவயமாயிருந்தாலும்சிருட்டிகாலத்துண்டாகிப் பிரளயகாலத்திலழிந்துபோவதினால் காலபரிச்சேதம்வரும்,

வினா, காலமேபிரமமென்றுசொல்லலாமேயென்னில்,

விடை, காலமானது ஏகவியாபகமாய் நிரவயவமாய்எந்ததேசத்திலும்வியாபித்திருந்தாலும்தேசாசாரங்களால்காலக்கிரியைகளும் அதனாலுண்டாகும் பொருள்களுமாறியழிவுவருகிறபடியால் காலத்திற்குந்தேசபரிச்சேதம்வரும்,

வினா, தேசமேபிரமமென்றுசொல்லலாமேயென்னில்,

விடை, தேசமானது எங்கும்வியாபித்திருந்தாலும் ஒருதேசத்திலுள்ள வஸ்து ஒருதேசத்தி லில்லாமையினால்தேசத்திற்கு வஸ்துபரிச்சேதம்வரும்,

வினா வஸ்துவேபிரமமென்றுசொல்லலாமேயென்னில்,

விடை, வஸ்துவானது வியாபகமின்றிக்கண்டமாய்பரிச்சின்னமாய் அனித்தியமாயிருப்பதினால் வஸ்துபரிச்சேதமும்வரும் ஆகையால்காலத்தினால் ஆகாசத்திற்கும் தேசத்தினாற்காலத்திற்கும் வஸ்துவினால்தேசத்திற்கும் அழிவுவருகிறபடியால்இதுகள் பிரமசொரூபமாகமாட்டாது,

வினா, ஆனால்பிரமசொரூபமெவ்வகைப்பட்டதென்னில்,

விடை. தேகேந்திரியாதிகரணங்களும்அவற்றின் றொழில்களுமின்றிக்காலதேசவஸ்துபரிச்சேதரகிதமாய் அகண்டபரிபூரணமாய் அபரிச்சின்னமாய்சின்மாத்திரமாயிருக்கின்றஅறிவுவியாபகமேபிரமசொரூபம்,

வினா, பிரமத்திற்குத்திரிவிதபரிச்சேதமுமில்லையென்பதேதெனில்.

விடை, எந்தக்காலத்திலும் எந்தத்தேசத்திலும் எந்தவஸ்துவிலும் உள்ளும்புறனும் எள்ளிடமுமிடமின்றிச் சர்வவியாபகமாய் அறிவறியாமையற்று ஜெகசித்திரபடம்போலும் பர்வதம்போலுமசைவற்றநிர்மலமாயிருக்கிறபடியால் நிர்விகாரிசேதமில்லை என்பதேதுணிவு-இதற்குதாரணம்-மெய்ம்மொழி.பொன்னைத்தான்கண்டபேர்கள் பணிவெனப்புகலார்போல - மன்னித்தானுடன்மயக்கு மாயதத்துவங்களாய்த் தேகமுன்னைத்தானறிபவின் பலவுருவு சைதன்யமாகுந்-தன்னைத்தான்கண்டவர்க்குத்தானெனவேறுமுண்டோ - என்றும்-மூலசித்தி-என்றுமெக்காலமெங்குமியாருளுமிறைவனீயே-யிப்பிமற்றொன்றுமின்றி யிருந்தவாறிருக்கவிங்ஙன் - பின்னைமற்றுளவாய்ப்பேணியிதமிகப்பேய்த்தேரொழிச்-சென்றிடச்செய்ததேதுயவ் விச்சையென்செட்டிடாயே - என்றும் - மகாவாக்கியம் - இக்குணங்களுடையபரப்பிரமமேநானானேனெவ்வாறெனின்-வினைக்கசகளுகியெனச்சனிப்புமரிப்பின்மையினானித்யனானேன்றோக்குடம்புபோலமலத்தின்றுவக்கதின்மையினாற்சுத்தமானேன்-சூட்சுமம்போனதிக்குமறிவுபெறுமையிற்புத்தமுடைந்துநானே - என்றும்-அகங்காரவிருத்திபெனப்படுங்கயிலாமையின்முத்தமானேனிந்தச் — சகம்போலவிளைக்குமிந்திரசாலமிலாதிருக்கையினாற்சத்யமானேன் - சுகங்காணிற்றன்னைபலாற்சுகமிலையென்றேபரமானந்தனானேன்- மிகுங்காலதேசவஸ்துவெனப்பிரியாவானந்தவேடநானே - என்றும்-தத்துவப்பிரகாசம்- மூன்னைநற்கருதியோதிமுடிவுறற்கரியதாக - வின்னமத்தேகர்மூவமொய்துதந்திடமேமலத்-தன்னையிப்படியேநானுத்தானவித்தெனக்கோர்வார்த்தைசொன்னநற்சொருபானந்த சோதியைத்தொழுதல்செய்வாம் - என்றுங்கூறப்பட்டிருப்பதால் இதுவெபிரமாணசித்தம்,

வினா, ஆத்மாவிகாரமின்றி நிர்விகாரியாயிருக்கத் தேவேந்திராதிகள் மெதாழிற்படுவதானால் அதுகளுமோர்வஸ்துவென்றுறவிதவாதிகள் சங்கிப்பார்களேயென்னில்,

விடை, காந்தக்கல்லானது அசைவற்றிருக்க அச்சந்நிதானபலத்தினால்சடமானஊசிசேஷ்டித்து அக்காந்தத்தைப்பாய்ந்து பிடிப்பது

போலும் சூரியனிச்சையின்றியிருக்க அச்சந்நிதான பலத்தினால் சடமா னசூரியகாந்தக்கல்லிலக்கினி ஜெனித்து அதனால்பாகாதிகிரியைகள் நடப் பதுபோலும் ஆத்மப்பிரகாசத்தினாற்பிரதிபலித்தசாயையானதுவிருத் திரூபமாய்சாக்கிர சொப்பனங்களிலுள்ளவிடயங்களை இந்திரியாதிகளி னாலறிந்துவிவகரிக்கின்றது சுழுத்தி மூர்ச்சைசமாதிகளில் விருத்தியின் மையால்ஒருஅறிதலும்விவகாரங்களுமில்லை ஆத்மசந்நிதான பலத்தாற் றொழிற்பட்டதன்றியிந்திரியாதிகள்சடமேயாம்,

இதற்குதாரணம்-சிவஞ்னபோதம்-கடக்குஞ்சரம்பண்ணியுண்ணின் றொருத்தன்கையாதகண்ணெங் கண்டெய்ப்போலியகருங் - கிடக்கும்நடத்தா விடத்திவ்வுடம்புங்கிடக்கும்பொருத்தன்னடந்தாவிடத்தே* என்றும்-நறு ம்பாலைகண்ணாடியிற்பாலைகைகா - விமிர்க்கும்முடக்குமவன்செய்யு மெல்லாந் - தொழிற்பாலதாமிந்தவுடலுஞ்செய்தொழிலுஞ் - சடர்ஞான வடிவானவன்செய்தொழிலே* என்றும்-கைவல்யநவநீதம் - செய்கையுஞ் செய்விக்கையுமற்றிருக்குங்காந்தச்சிலைபோலுமன் னிருப்புகள்சேட்டிக் குமாபோற் - செய்கையுஞ்செய்விக்கையு மற்றிருகுமவன்முன்னேசட மானவுலகமெல்லாஞ் சேட்டைசெய்யு - மெய்கலந்தவிந்திரியவிகாரரூப விகாரவிருத்திக்கும் விருத்திதானாய் - மெய்கலந்தசமாதிக்குஞ் சாட்சி யேநான்வெயில்போலென்றுரைத்தவனேவியாபாகர்த்தன்* என்றுங்கூ றியிருப்பதினால்இதுவேபிரமாணசித்தம்,

வினா, இந்திரியாதிகள் தொழிற்படாது சடமாயிருந்தாலுந் துவிதமே யன்றி அத்துவிதமல்லவென்றுசொல்லுவோர்களெவ்வனி ?,

விடை, தொன்னூற்றாறுதத்துவமென்பதுசகலமதத்துக்கும்பொதுவெ ன்றும்சைவர்களுக்கு (௯௬) வேதாந்திக்கு (௨௮) மாயாவாதி க்கு (௨௫) வயினவனுக்கு (௨௪) தத்துவங்களென்றும்பின்னும்பதி னெழுதத்துவமென்றும்பத்தொன்பதுதத்துவமென்றுஞ்சொல்வதெல் லாம்சொன்மாத்திரமேயன்றிப்பஞ்சதன்மாத்திரையைத்தவிரக்காலத்திர யத்திலுமில்லை - எப்படியென்றால் சத்தமென்றறிகிறபோது சத்தமும்

சத்தமென்றறிந்தவறிவுமாத்திரமன்றிச் சமானவாய்வு சுரோத்திரேந்திரியமவாக்கிந்திரியம் வசனாதிவிடயங்களுமில்லை-பரிசமென்றறிகிறபோது பரிசமும்பரிசமென்றறிந்த வறிவுமாத்திரமன்றி மனம்வியானவாய்வு தொக்கிந்திரியம்பாணிந்திரியம்தானாதிவிடயங்களுமில்லை-ரூபமென்றறிகிறபோது ரூபமும்ரூபமென்றறிந்தவறிவுமாத்திரமன்றி புத்தி உதானவாய்வுநேத்திரேந்திரியம் பாதேந்திரியம்கமனாதிவிடயங்களுமில்லை - ரசமென்றறிகிறபோது ரசமும்ரசமென்றறிந்தவறிவுமாத்திரமன்றிச் சித்தம்அபானவாய்வுசிங்குவேந்திரியம் உபஸ்தேந்திரியம் ஆனந்தவிட யங்களுமில்லை-கந்தமென்றறிகிறபோது கந்தமும் கந்தமென்றறிந்த வறிவுமாத்திரமன்றிஅகங்காரப்பிராணவாய்வு கிராணேந்திரியம் குய்யேந்திரியம்மலவிசர்க்காதிவிடயங்களுமில்லை இந்தப்படி தன்மாத்திரைகளைத்தவிர வேறேதத்துவங்களில்லாமையாலும் தன்மாத்திரைகளைப்பிரத்தியேகம்பிரத்தியேகமாய்ப்பிரித்துப்பார்க்க அதுகளுந்தனியே ஒன்றைவிட்டொன்றில்லாமையினாலும் ஐந்துமொன்றாகவேயிருப்பதினாலும் இதுகளுக்குக்காரணமானவிட்சேபசத்தியும்விசேஷித்தவிடத்தில்லாதிருப்பதினாலும் அந்தவாவரணரூபமென்றுந்தெரியவில்லை யென்றறிந்த வறிவுமாத்திரமாகி அறிவென்றஅறிவையுமிரசித்துவிட்டது பின்னுந்தனக்குள்ளேசகலதத்துவங்களுந்தோன்றி வளர்ந்து ஒடுங்குமிதமாய் கண்டவறிவேமகாகாரணமான மூலப்பிரகிருதி அதுவுஞ்சொன்மாத்திரமேயன்றி ஒருபொருளல்ல,

வினா. அதெப்படியென்னில்,

விடை, தன்னிடத்தொன்று உண்டானாலல்லவோ இருக்கவேண்டும் இருந்தாலல்லவோலயிக்கவேண்டும் அப்படி உண்டாகவுமில்லை வளரவுமில்லை லயிக்கவுமில்லையென்றறிந்த வறிவுமாத்திரமாயிருப்பதேமூலப்பிரகிருதிரகிதமான பிரமசொரூபம்,

இதற்குதாரணம் - தத்துவராத்திரிகாரம் - தத்துவம்பலவெனச்சாற்றுவார்சிலர் — பித்தர்களுளுமிடம்பேசவேண்டுமோ - வத்துவின்வடி

வலந்தன் றிநிற்றயின் - னைத்தனைத்துவயின்னையின்மை * என்றும்-இ
ந்தியமிருடனோ டிரண்டெனத் - தந்நாமேயாகுமவர்சார்ந்தபலவர் ;
இந்திரியப்பலவென விளைசத்தம்பொலாய் - வந்தனவெயையா யனுவிகா
ரமே * என்றும் - வேறு-கோடிதத்துவ வென்னினுங்கோறிலா - நீநிற்
பரநிற்றதுமற்றவை -யோடசித்துசித்தாகிநிற்குமையைமயிற் - றெழுப்பல
பேசல்பிதற்றலே * என்றும் - போதாமிர்தம் - பன்னுவர்பலபலதத்து
வங்களை - மன்னிய பரமனாதமாந்தர்க - டன்னிலே தலையுணர்கின்ற
போதினி - லன்னியமிதுவெனவறையலாவதே * என்றும் — கோனுமா
த்தினைறானைருயிழிகொள்ளைநீர் - மேலையிற்பிறிதென விளம்பலாவதோ-
சானுதத்துவப்பலசாற்றுமாயினும் - ஆலநற்பியன்னேதருமுவியினுள்ளதே *
என்றும்-சிவப்பிரகாசதரிசனம் - ஒன்றமென்றன்றியலாரானுமெனான்றற-நின்
றகத்துவநின்மலபோதமே - யின்னறமெயான்றுளாதத்துவமெபருப்பலபு
வென்றாவேவுமியம்பிய தல்லவோ * என்றும்-ருதுமேயழி-தத்துவத்தை
புணருந்தலைவனா - யொத்தபடியொருவனென்றுள்குயாா-நீத்தநிர்க்கு
ணநிர்மலனென்றனா-ரத்தருகுமவர்நாவெப்துவரா * என்றும்-சருரு
டாமன்னி-யடம்படக்கோத்தமணிறும்பூறாய் போன்மனுயிராக்கைக
ளெல்லா-மிடம்படக்கோத்து நிறைதங்கொண்டெடுவிடமேகமுதா
ப்பாரி - கடம்பலபேதப் பட்டாதர்சேமைதீதுவாகாசம்போறு-
முடம்பினிலொளியைப்பார்த்தம்பாதெல்லாமடரு மேவு யன்றிவேறுமா
மோ * என்றும்-சொரூபசாரம்-பூதாதியைந்தும் பொறிபுலன்களெல்லா
ஞ்சித்-தேதாதியந்தயமைவெல்லாஞ்சித்-தேரிய-சகடமையுஞ்சித்தமே
த்துய்க்காண்பானுங்காட்சியுஞ்சித் - தப்புறம்பேதிலையாம் * என்
றும்-பார்த்ததிசையெல்லாம் பரிபூரணசொரூபந் - தீர்த்தமெல்லாமான
ந்தசிற்சொருபங்கீர்த்திக்குந்தோத்திரங்களெல்லாஞ் சுகசொரூபமனமை
யால்-வேற்றுருவமேதாகுமே * சிற்சொருபந்தானேசைதசொருபமா
னவெலாந் - தற்சொருபசாரமாய்ச் சாற்றவே-பொற்சொருபமகுருவ
ம்போலவனுவாய்த்தோற்றமொரு-சொச்சொருபந்தானேசூனை *
என்றும்-வாசிட்டம்-உவரிநீர்போலுலகெல்லா மொன்றுணவுணர்வுடாத்

திரமதுதானுற்றபுந்தி - கவர்வுறுதலாலசையுநிறையுநீர்தான்கல்லோலத்
தாலசையுங்கணக்கைப்போலச் - சிவஞணர்வுமாத்திரமேபிரமமாகி இகழ்
வெயராய்ப்புகல்பொருளைச் சேகமென்றெண்ணித் - தவமறுபேதையர்
காண்பாறிவுதானே சற்றலைந்தமாத்திரத்திற்சருக்கமூண்டாம் * என்று
ம்-பெருப்பரியவடிவான பிரபஞ்சமயாதலாற்பிறிதொன்றில்லை - வரும்
பொருள்களெல்லாம் பிறிவின்கண்ணதபாயிருத்தலினிவ்வையமெல்லாங் - கரு
ம்புயம்வயறியேயாங் கற்டனேம்வறில்லையாற் காணப்பட்ட - வரும்பொ
ருள்கடலிலறிவுண்டாதலின்றறிபொருளாமனைத்துமில்லை * என்றும்-அ
த்துவிதசிலத - சுலோகம் * சர்மம் சூன்யம் மனஸ்சூன்யம் சத்தா சத்யவி
ரீடதே - சோபாவாபாவிதம் புமோக்தம் சாஸ்த்ரசம்மதி பூர்வகம்-என்
றங்கூறப்படுகையாலிதுவே பிரமாணசித்தம்.

வினா. இப்படி அத்துவித வஸ்துவின்றித்தானே தானாயிருக்கிறதன்னிடத்தி
ல் துவிதபாவனைகளான விபரீதங்களெப்படியுள்ளதாகத்தோற்றி
யதென்னில்.

விடை. இல்லாதவஸ்த்துஞானத்தோற்றமானபுலன்களுறிகளால்காலத்திரயத்தி
லும்பில்லாதசுத்தமித்தையான விபரீதபாவனைகள் இல்லாததானைச்
சலப்போலுள்ளதாகத்தோற்றியது.

வினா. உள்ளவஸ்துவிலுள்ளது தோற்றமேயன்றி இல்லாது தோற்
றதெப்படியென்னில்,

விடை. உள்ளஇருப்பில் இது ஆயுதமெனத்தோற்றியது இல்லதாவாயுத
ந்தோற்றமாக உள்ள இருப்புதானே தோற்றினது உள்ளபொன்
னில் இது ஆபரணமெனத்தோற்றியது இல்லாதவாபரணத்தோற்றமா உ
ள்ளபொன்தானேதோற்றினது - உள்ள மண்ணில் இது கடமெனத்தோற்
றியது இல்லாதகடந்தோற்றமா உள்ள மண்தானேதோற்றினது - உள்ள
மரத்தில் இது கரிபரிகளெனத்தோற்றியது இல்லாதகரிபரிகள்தோற்றமா
உள்ளமரந்தானேதோற்றினது - உள்ளசமுத்திரத்தில் இது அலைநுரைகு
மிழியெனத்தோற்றியது இல்லாதஅலைநுரைகுமிழிதோற்றமா உள்ளசமு

திரத்தானேதோற்றினது - உள்ளஆகாசத்தில் இது நீலபீதமெனத்தோற்றியது இல்லாதநீலபீதவர்ணங்கள்தோற்றுமா உள்ளஆகாசமேதோற்றினது - உள்ளகட்டையில் இதுகள்ளனெனத்தோற்றியது இல்லாதகள்ளன்தோற்றுவாறு உள்ளகட்டையேதோற்றினது - உள்ளபழுதையில் இது பாம்பெனத்தோற்றியது இல்லாதபாம்புதோற்றுமா உள்ளபழுதையேதோற்றினது இந்தத்திஷ்டாந்தங்களைப்போலச்சிதானந்தசொரூபமான தன்னிடத்தில் இது நாமரூபமெனத்தோற்றியது உள்ளசச்சிதானந்தமேதோற்றினதன்றிக்காலத்திரயத்திலு நாமரூபந்தோற்றவேயில்லை,

விரு, அதெப்படியென்னில்,

விடை, இருக்கின்றது சத்து அந்தச்சத்துதானே நாமரூபமான சித்தாய்த்தோற்றியது அந்தச்சித்தைவிட நாமரூபமென்பது காலத்திரயத்திலு மில்லாமையாலும் சத்தைவிடச்சித்தென்பது வேறேயில்லாமையாலும் இரண்டாம் வஸ்துவில்லை அந்தச்சத்துக்குஞ் சித்துக்குமிடையேயுள்ள ஆனந்தமானசுகந்தோற்றமாட்டாது.

இதற்குதாரணம்-வாசிட்டம்-ஆகலினாலிதொன்றுஞ்செய்ததல்லவடுத்துளவிச்சகமில்லை யறிவுமட்டு - மேதகுசங்கற்பமேயுதாவாகுமெய்யாகவறிவன்றிவேறொன்றில்லைச்-சேதனமாத்திரத்துதித்த சிருட்டியத்தச்சேதனமேவடிவென்று செப்பலாகு மோதியசெய்வோன் பொசிப்போனிரண்டுமல்ல வுருபவந்தீர் பிரயமேயுள்ள வெல்லாம் * என்றும்-பொருகடலிற்றிரைமுதலாய்ப்பிறந்தவெல்லாம்புனலாகி விளங்காமற்பூதியாம்மா—வொருபொருளாம் பிரமமாத்திரமே யல்லா லுபயமெனுங்கற்பனைப்பேரொன்றுமில்லை—யெரியிடத்திற் சூடுமாத்திரமேயல்லாவிரண்டுண்டோவவ்வகைபோலென்றுமொன்றுஞ்—சரியைகிரியா யோகஞானத்தின்முத்திசாதனங்கணிறைந்தவர்க்கே சாற்றல்வேண்டும் * என்றும்.

அத்துவிதவுண்மை-தங்கமொன்றேபணிகளிற் சாற்றும்விதங்கள் வெவ்வேறு—தங்கவிலக்கணமு மன்றுதங்கந் தவிரவேறன்று—தங்கமழியாப்பணியழிவிற் சாற்றுமித்தத்தகைமைபோ—லெங்குநிறை சச்சிதானந்தங்குமித்துவக்கமே * என்றும்— தங்கமொன்றேபணிகளிற்சாற்றுப்

விதமாய்விளங்குகவி—னங்கமுதலாஞ்சகங்களாயறிவே விளங்குமயலித்லை—இங்கங்கென்றே பங்கொன்றுமில்லை யகண்டவறிவொன்றே—தங்கவறிவுதோன்றளவுந்தோன்றநாளுவிதரூபம் * என்றும்- கைவல்யநவநீதம் - கானனீர்கிளிஞ்சல்வெள்ளி கந்தர்ப்பநகர்களூர்—வானமை யிருத்திற்பாம்பு மலடிசேய்முயலின்கோடு—மீனமாந்தறிபுமானிற் பிரபஞ்சமெல்லாம்பொய்யே—ஞானமெய்ப்படகம்வயுன்னை நம்மானை மறந்திடாயே * என்றும் - பிரமாணங்களிருப்பதினால் காலத்திரயத்திலும்மாயை தோற்றமாட்டாதென்பதே துணிவு.

வினா, மித்தையானநாமரூபங்கள் காலத்திரயத்திலுமில்லாத அகண்டசச்சிதானந்தசொரூபமாத்திரமாயிருக்க இந்தச் சனனமரணமுதலானதாபத்திரயங்களும் சீவேசுரபேதங்களும்பந்தமோட்சங்களுமுள்ளதாகத்தோற்றியதெப்படியென்னில்,

விடை, ஆத்மாவே தேகேந்திரியாதிகளென்றும் தேகேந்திரியாதிகளே ஆத்மாவென்றும் விவர்த்தமாகக்கண்டதேயஞ்ஞானம் அவ்வஞ்ஞானத்தினால் ஆத்மாவாகியதன்னை அசத்தாகியநாமரூபங்களாய்க்கண்டபோதே அத்துவிதமறைந்து துவிதபாவந்தோன்றியது.

வினா. அதெப்படியென்னில்.

விடை. மேகமசைவாயோடச் சந்திரனோடுவதுபோலும் சலமசையநிச்சலமானசந்திரனசைவதுபோலும் ஓடமேறிப்போகிறவனுக்குக்கரையினிடந் தயசைவற்றிருக்குமரம் ஓடிவருதல் போலும்மித்தமேறிய கட்சுழலினால் சுழலாதவீடுவாசல் சுழல்வதுபோலும் கொள்ளிக் கட்டை சுழற்றினால் சூரியவட்டமாய்த் தோற்றுவதுபோலும் காற்றூடி யிருப்பிருந்தும் சக்கரமாய்த்தோற்றுவதுபோலும் கானலாறோடச் சலமோடுவதுபோலும்-கண்ணாடியினது ரசாரோபத்தினால் சலமிருக்குமிடஞ்சலமின்மையாகவும்சலமின்றியவிடஞ் சலமுள்ளதாகவுந்தோற்றுகிறதுபோலும் ரசக்கண்ணாடிக் கெதிரிருந்த வீடுவாசல்கள் பிற்புறந்தோற்றுவதுபோலும் அஞ்ஞானத்தினால்நாமரூபமான துவிதபாவந்தோற்றியது.

இதற்குதாரணம் - அபரோட்சாத்மானுபவதீபிகை.

ஆன்மாவைத்தான்றேகமென்று மதித்தார் பொன்னைப் பணியென்றா-
மானநிசமுண்டாய்த்தானே மண்ணைக்குடமாய்நிச்சயித்தா—ரானதன்னை
ப்படமென்றேபற நிச்சயித்தாரதுபோலுமானமூடமதனாலே யான்மாத்
தேகமெனவறிந்தார் * என்றும்—அறியுமணியை நெருப்பென்றுமதிந்
தார்போல மூங்கிலோடச்—செறிசந்திரன்றானோடுதல்போற் செலமேய
வசையச்சந்திரன்றா—னறியவசையுமெனல் றற்போ லஞ்ஞானத்தாலான்மா
வைப்—பிறியாதேகமாயறிந்தார் பின்னமான வவித்தையினால் * என்று
ம்—அவித்தையினாலே யான்மா விடத்திலிற் றேகமென்று—நவிற்றிய
வத்தியாச நாமமுண்டாயிற்றென்றே—யவித்தைப்போய் பிம்பகந்தன்னு
லறியவே சீவான்மாவுந்—தவிர்ந்திடாப்பரமான்மாவு மயிக்கியந்தானாங்க
ள் * என்றும் - கூறப்பட்டிருப்பதினாலும் இப்போதும் ஞானதிருஷ்டி
யாய்ப்பார்த்தவிடத்தில் பார்க்கிறவன் பார்க்கிறது பார்க்கும் பொருளா
கியமூன்றும் பஞ்சப்புலன்களோடுந்திந்து ஆறுதப்பிரகாசத்தினாகிய
ப்பிரகாசமடங்கினதுபோலும் சூரியப்பிரகாசத்தினாலே புதவிருளடங்கி
னதுபோலும் அறிவாகிய பெருங்கனைமறைந்த ஆகாயப்படலம்ப்ப
கும் அப்போது நாமரூபாத்மகமான சகலதேகாதிப்பிரபஞ்சங்களுந்த
னக்குள்ளொடுங்கித் தானேதானாயெதிர்ந்து விளங்கும் இதற்குதாரண
ம் - அபரோட்சாத்மானுபவதீபிகை - பார்க்கிறவன்பார்க்கிறது பார்க்கப்
படுகிறது—மேற்குமிவைமூன்று மெவ்விடத்திலில்லையோ —மார்க்கும
விடத்ததிட்டிதான் பண்ணுவதீதார்க்குஞ்சமதிட்டியாம், என்றிருப்பதி
னாலிதுவே பிரமாணம்.

வினா. சகலபிராரத்தபோகங்க ளிருக்குமென்றும் ஞானம் வந்தாலும் புசித்துத்தான் றொலைக்கவேண்டுமென்றும்சகலசுருதிஸ்மிருதிகளுஞ்சொல்லுவதன்றி நமக்குமனுபவமாயிருக்க வஸ்துத்துவமிலையென்றுசொல்லுவதெப்படியெனின்,

விடை. பிராரத்தபோகம் அஞ்ஞானதிருஷ்டியினால் அப்பியாசகாலத்தினுண்டு, தன்னை ஞானவுதயத்தில் இல்லையென்றும் அப்பியாசி

சேப்பிராரத்தமன்றி ஆரூடனுக்கில்லையென்றுஞ் சுருதிஸ்மிருதி
கள் சொல்லுகின்றது மேயது அனுபவமுமப்படியேயாம்,

வினா. அதெப்படியென்னில்,

விடை. விழித்தவனுக்குச்சொப்பனமசத்தானதுபோல யதார்த்தஞானத்
தில் தேகாதிகளசத்தாய்ப்போகிறபடியால் ஆரூடனுக்குப் பிரா
ரத்தமில்லை அவனுக்கு அத்விதமாகிய பிரமப்பிரமகாசமொன்றுமே யேக
மாய்விளங்கும் ஆதலாலந்தச்சொரூபமே நீயாகுமென்பதிற் சந்தேகவி
பரீதங்களின்றி அத்துவிதசின்மாத்திரமாயிருப்பாயாக இதற்குதாரணம்,

அபரோக்ஷாத்மானுபவதீபிகை - ஞானம்வந்தானுந்தானே றவில்
பிராரத்துவத்தைத - தானதுபொசித்துத்தீரவேண்டுமென்கின்றசாஸ்திரத்
தானுமப்பியாசிக்கன்றித் தத்துவஞானிக்கில்லை - யானதத்துவக்கியானவுத
யத்தேபிராரத்தங்கள் * என்றும்— உதயத்தேபிராரத்தமென்றொன்றி
லையென்றத்தானு :- மதேயசத்தாகையாலுமதெப்படியென்னிற்றன்கே-
ளுதயத்தே விழித்தவர்க்குச்சொப்பனமசத்தானதுபோ-லுதயத்தேபிரார
த்தம்மொன்றுமான்மாவுக்கில்லை - என்றும்— இல்லையேற்சென்மகன்ம
மில்லையேயாமென்றாலான்மா - வல்லத்பல்லஜன்மகிருதாகையாற்சென்
மாந்தத்தின் - வல்லமைபிராரத்தத்தால்வருகின்றஜென்மமும்பொய்-யெ
ல்லையிற்றேகஞ்சென்மமாச்சுதேயென்றுற்றேகம், என்றும்தேகமுமுயற்
கொம்பைப்போற் றேர்ந்திடிலில்லைகண்டா - யேகமாமாத்துமாவினிட
த்திற்சொப்பனதேகங்க - ளாகவெப்படியாரோப்மாச்சுதோவதுபோற்
போமால்— தேகமுமாத்துமாவிற்றேறிலாரோபமாகும் * என்றும்—வா
சிட்டம்— அந்தமற்றொன்றாய் விகற்பமற்றறிவாயழிவிலாப்பழம்பொரு
ளிருக்கப் — பந்தமுற்றவரார் முத்திபெற்றவரார்பாவனை விகற்பமேபனே
த்துஞ்— சிந்தனைவிரிவுபந்தமாயதனைத்தீர்த்திடன்முத்தியாமனத்தின் —
றொந்தலில்லையிறைற்றூராமாமணித்துந் தாரமுமண்ணிதாய்த்தோற்றம் *
என்றும் - இவையெனுமனைந்துஞ்சித்தனமாகியிறப்பிலாப்பிரமமேயெ
ன்று—நவையறுமனமாங்கற்பனையில்லை நாசமும்பிறவியுமென்று —
லையெலாப்புவனமூன்றினுமில்லையறவகைவிகாரமுமில்லை— [illegible]

ஆறாவது.

நிருவாணப்பிரகரணம்.

அவதாரிகை.

முற்பிரகரணங்கள் ஐந்தினாலுஞ் சர்வமூர்த்தானாய் விளங்குமுபசமனம் பெற்றுச் சீவன்முத்திசாக்ஷாத்கார துரியானுபவ நிலைத்துள்ள சிஷியனுக்குமேல் அதிபுதலட்சியார்த்தமான அகண்டானந்த துரியாதீதசுவானுபூதிமாத்திரமாய் ரமித்திருக்கும் விதேகமுத்தி யனுபவஞ்சித்திக்கும்பொருட்டு நிருவாணப்பிரகரணங்கூறுகின்றார்.

கவி.

உள்ளுறுசைவம்பாசுபதங்காளாமுகத்தினோடு ... ... *
விள்ளுமாவிரதம்வாமம் வயிரவமிவையாறுந் ... ...*
தள்ளும்புறத்துலோகாயுதஞ்சமண்புத்தனோடு ... *
மள்ளுமீமாம்சன்றன்வயிணவன்மாயாவாதி .... *
வாதமீராறிலுள்ள மதங்களின்வகுத்தநூலா ... ... *
லோதுமிற்பிராந்தியல்லாலுளப்பிராந்தியைத்தான்றீர்க்கா*
தேதினும்பிராந்திதானுந் தெளிவிக்கு நூலேதென்னி... *
லாதியாம்வேதாந்தத்தின்விசாரத்தாலறிவர்தானே... ...*

இதன்பொருள்.

வினா: சமய வுண்மையில் நிலைத்துள்ள சமயிகளுக்கு முத்தியின்றோ வென்னில்,

விடை: சைவம் பாசுபதம்காளாமுகம்மகாவிரதம்வாமம் வயிரவம் இவ்வாறும் அகச்சமயமென்றும்லோகாயுதம்மீமாம்சம் பௌத்தம் சமணம்பாஞ்சராத்திரம் மாயாவாதம் இவ்வாறும் புறச்சமயமென்றுஞ் சொல்லப்படும் அவற்றுள் உட்சமயத்தில் சைவமானது போதிக்கும் சிவ னதிலிக்கச்சிவனதிகாரனென்றும் ஆண்டவனுமடிமையுமா யிருக்கவேண்

டுமென்றுஞ்சொல்லும்-பாசுபதமானது - பரமாணுவுபாதானமாய் நி
ன்று அதனபுணர்ச்சியேகாரணமாயுலகு பண்ணப்பட்டதென்றும்இறை
நிமித்தகாரணமாய் நிற்குமென்றும் உயிர்களெல்லா மலங்கடாத பிணிப்
புண்டிருக்குமென்றுஞ் சொல்லுவதன்றி ஆகமத்தின்முறையே ஆவாக
னம் பண்ணியருச்சித்துபிணிப்பாகியபாசமறுத்து அணுவாகிய சீவன்சி
வனாகியபதியைக் கூடுமென்றுஞ்சொல்லும்காளாமுகம் மகாவிரதமாகிய
விரண்டும் அத்தியந்தஞ்சடை முதலானவடையாளங் கொண்டுபத்தியோ
டுஞ்சிவனைவழிபட்டருச்சித்து நியமங்குலையாதிருந்தால் வினையுடல்விடு
ம்போதுசிவலோகத்தையடைபலாம் அதுவேமோட்சமென்றுஞ் சொல்
லும்-வாமமானது மதுமாமிசங்கொண்டு சத்தியான ஸ்திரீகளைப்பூசித்து
அவர்களிடமுண்டாகும் அந்தப்போதையானந்தத்திருப்பதே மோ
ட்சமென்றுசொல்லும்-வயிரவமானது - மயானத்திருந்துஎன்புதரித்து
சாம்பற்பூசி புலவாசமாயிருந்து மாவயிரவனென்று மோமமுண்டாக்கி
நரபலிகொடுத்து அந்தநரமாமிசமூடமதுவுங்கபாலத்தில்வைத்து ஓமத்தி
லாகுதிபண்ணி அம்மதுவுமாமிசமூமுண்டுநாள்கொள்வதேபாரணமென்று
ம்இப்படிச்செய்துமுடிந்ததே நிருவாணமென்றுஞ்சொல்லும்-மீமாமி
சமானது பசுபலித்தியாகம்பண்ணி அந்தயாகபலத்தினால்தேவர்களாய்சுவ
ர்க்கத்திருப்பதேமோட்சமென்றும் வேதாத்தியாயனம் பண்ணுஞ்சத்த
மேபிரமமென்றுஞ் சொல்லும்-பௌத்தமானது இந்திரியங்களினறிவே
ஞானமென்றும்பூதாகாசம்மயாத்மாவென்றுஞ் சொல்லும் - சமணமான
து இந்திரியநிக்கிரகியாய்க் காமத்திற்புகுதாமலிரவுணவுகளை மறுத்துஉ
டலையொறுத்துச் சிகைபறித்திருப்பதேபொன்னெயில்வட்டத் தருகரு
டன்சேர்வதென்றும் சொல்லும்- பாஞ்சராத்திரமானது-ஆதிமூலமான
விஷ்ணுவேதமதுமாயையினால் உலகுயிரெல்லா மூண்டுபண்ணினனென்
றும்அந்தமாயையே யவருக்குவடிவமென்றும்வசுதேவர் முதலானதே
வர்களின்சமாராதனத்தாற் சீவர்கள்பெத்தம்விட்டுப்பரமபதம்பெறுவா
ர்களென்றும்சொல்லும் - மாயாவாதமானது நானென்னு[illegible]
ரடம்அவருக்கு ஒருவிகாரமுமில்லை அவர்சந்நிதான விசேடத்தால்[illegible]

சேடித்துநின்றவுலகுமிருக்குஞ்செய்ததென்றும்பந்தமோட்சமில்லையெ
ன்றுஞ்சொல்லும் - இந்தப்பன்னிரண்டினுள் பாஷாண்டம் விரோசனஞ்
சாருவாகம் உபாசகம் க்ஷணிகவாதம் அந்தராளம் ஆகமம்திகம்பரம்பிரபா
கரம் தார்க்கிகம்பாட்டம்சாங்கியம் யோகம்பதஞ்சலியம் விஸ்வரூபம்பிர
சாபத்தியம்காருபத்தியம் கௌமாரகம்பௌராணிகம் கன்மசாஸ்திரம்
என்றுசொல்லப்பட்ட அனேகமதங்களுண்டு அவர்களெல்லாம் தங்கள்த
ங்கள் மதாபிமானமேமேற் கொண்டுமந்திரவாதம்ரசவாதமுதலியசாஸ்
திரங்களைத்தொடுத்து நின்று பிராந்தர்களாயலைந்து போனார்களென்று
பஞ்சதசப் பிரகரணத்திற் பிரமாணமிருக்கின்ற படியினால் சடயிகளுக்
குமுத்தியில்லை.

விநா. சிவவாதிகளுடனே ஈஸ்வரவாதிகளையும் பிராந்தர்களென்றுசொ
ல்லலாமோவென்னில்.

விடை. சொப்பனத்திற் பிச்சையெடுக்கிறவனும் அரசனாயிருக்கிறவ
னிகமாறும் விழித்தபிறகுஇரண்டுசொப்பனமும்பொய்யா
னதுபோலஇருவகைவாதிகளுங்கற்பிதத்தில்தாரதம்மியமாயி
ருந்தாலும் ஞானம்வந்தவனைக்குறித்து இருவகைவாதிகளும்பிராந்
தர்களென்றேசொல்லவேண்டும்

விநா. இப்படிவேதாந்தவிசாரத்தினால் வஸ்து நிர்ணயம்பண்ணுகிறதா
னால் அந்தவாதிகளுக்கெல்லாம் விரோதமல்லவோவென்னில்,

விடை, ஒன்றேபொருளென்றவேதாந்தத்திற்கும் அதைத்தானே குருடர்
யானைகண்டதுபோற் கண்டிருக்கின்றமதவாதிகளுக்கும் சற்றும்
விரோதமில்லை.

விநா. ஒன்றேபொருளென்னும் வேதாந்தத்திற்கும் மற்றுள்ள மதங்க
ளெல்லாமாயாமயமென்பதற்குப்பிரமாணமுண்டோவென்னில்

விடை, முப்பத்திரண்டுஉபநிஷத்துமேபிரமாணமென்று பஞ்சதசப்பி
ரகரணத்தில் நிருபித்திருக்கின்றதேபிரமாணசித்தம்.

விநா: விசாரஞானத்தினால் வஸ்துநிர்ணயம்பண்ணுவ தெப்படி யெ
ன்னில்.

விடை. ஷட்லிங்கதாற்பரியங்கொண்டு வேதாந்தவிசாரம்பண்ணின சிர
வணபலத்தினால்வஸ்துநிர்ணயம்பண்ணவேண்டும்.

வினா. அதெப்படியென்னில்.

விடை. உபக்கிரமம்உபசங்காரமென்றென்று அப்பியாசம் அபூர்வதை
பலம்அர்த்தவாதம்உற்பத்தியென்றறுவகைகளாம்.

வினா. உபக்கிரமமாவதேதென்னில்.

விடை. அகண்ட பரிபூரணசச்சிதானந்தபிரமத்தினிடத்தில் ரச்சுவிற்சர்
பந்தோன்றினதுபோலசகலபிரமாண்டபிண்டங்களாகிய சகத்து
ண்டாயிற்று, இந்தச்சிருஷ்டிக்குமுன் பிரமஞ்சத்தாமாத்திரமா
யிருந்ததென்றுபிரதிவாதிக்கப்படுவதேஉபக்கிரமம்.

வினா. உபசங்காரமாவதேதென்னில்.

விடை. உற்பத்தியானசகலசகத்தும் அபவாதக்கிரமமாகவொடுங்குகை
யால்பிரமாண்டபிண்டங்களென்னுமுபாதியிற் கூடஸ்தருக்கும்
பிரமத்துக்குமுள்ள வுபாதிகளையொழித்து ஏகத்துவ ஐயிக்கத்
தைக்கூறப்படுவதேயுபசங்காரம்இவ்விரண்டுமொரோலிங்கமாம்.

வினா. அப்பியாசமாவதேதென்னில்.

விடை. பிரத்தியேகாத்மாவாகிய நீயே பிரமமென்றென்பது பிரகார
மாகவுபதேசிப்பது அவ்வுபதேசம்சேதனனைக்கூட்டிச்சொல்லு
கிறதும் சேதனனுக்கே அந்தோதாய்தஆத்தும தத்துவம் போதி
ப்பதினாலும்அதுவேஅப்பியாசம்.

வினா. அபூர்வதையாவதேதென்னில்,

விடை, அஷ்டப்பிரமாணங்களினுள்உபநிஷத்பிரமாணத்தினாற் பிரத்தி
யேகாத்மலக்ஷணத்தையறியப்படுவதன்றி மற்றைப் பிரமாணங்
களினாலறியப்படாதென்பது.

வினா. அஷ்டப்பிரமாணமாவதேதெனில்.

விடை, பிரத்தியட்சம் அனுமானம் உவமானம் ஆகமம் அருத்தாபத்தி ஐ கம் சம்பவம் என்றெட்டுவிதமுண்டு.

விஞ. அவற்றுள் பிரத்தியட்சப்பிரமாணமேதென்னில்,

விடை. பிரத்தியட்சத்தில் சந்தேகப்பிரத்தியட்சம் விபரீதப்பிரத்தியட் ம் யதார்த்தப்பிரத்தியட்சமென்று மூன்றுவிதமாயிருக்கும் அ தில் கட்டையைக்கண்டு கட்டையோகள்ளனோவென்று சங்கற்பித்தது ச தேகப்பிரத்தியட்சம்-கள்ளனென்றே விகற்பித்தது விபரீதப்பிரத்தியட் ம் கட்டையென்றறிந்தது யதார்த்தப்பிரத்தியட்சமென்று சொல்லப்படு

விஞ, இவற்றிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை, யதார்த்தப்பிரத்தியட்சத்திற் கொருபிரமாணமும் வேண்டுவது ன்று சந்தேகவிபரீதபுத்திநிவிர்த்திக்கே பிரமாணங்கள் வேண்டு தாகையால் ஆசிரியர் பிரஞ்ஞானப்பிரமமென்று இருக்குவேத மகாவ கியத்தைஉபதேசிக்கச் சீடனும் அறிவே பிரத்தியட்சத்திற் பிரகாசிக்கு ஆல் தேகாதிசெகத்தெல்லாம் பிரத்தியட்சத்திற் காணப்படுகின்றதாகை யால் நான் தேகமோ அறிவோ என்றதே சந்தேகப்பிரத்தியட்சம் நான் தே கமென்றுறுதிகொண்டதே விபரீதப்பிரத்தியட்சம் நான் பிரமமென்று றிலைத்ததே யதார்த்தப்பிரத்தியட்சம் இவ்யதார்த்தப் பிரத்தியட்சத்திற்கு வேறுபிரமாணங்கள் வேண்டுவதின்று சந்தேக விபரீதபுத்தி நிவிர்த்திக் கே அனுமானப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

விஞ, அனுமானப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, அனுமானத்தில் பிரதிக்கினை ஏது திருஷ்டாந்தமென மூன்றுவித முண்டு அவற்றில் பர்வதங்களிலக்கினியுண்டென்பது வே பிரதிக் கினை, தூமமுள்ளதுகாரணமென்பதே ஏது, மகானசத்திலக்கினி யுண்டென்பதுவே திருஷ்டாந்தமாம்,

விஞ, இவற்றுள் பிரதிக்கினையிற்சொரூபவபிப்பிராயமேதெனில்,

விடை, பூதங்களான தைப்பத்துப்புதிக சராசரமானவோர் தேகத்தைக்

றிந்து இவ்வுடம்பின்கண்ணறிவாகிய பிரமமிருக்குமென்றுநிச்சயிப்பதேபிரதிக்கினை,

வினா, ஏதுவிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, தேகேந்திரியாதிகளிலறிவுநின்று பதார்த்தமறிகின்றது தேகேந்திரியாதிகள் சடமாகையால் அறியச்சத்தியில்லை தேகேந்திரியாதிகளை யறிவதானாற்சுழுத்திமூர்ச்சைசமாதியிலிடத்துமறியவேண்டுமே அங்ஙனமறியாமையினால் இந்திரியங்களிற் பதார்த்தமறிவிருப்பதுகொண்டு இவ்வறிவுக்காதாரமானபிரமமொன்றிருக்குமென்பதே ஏது.

வினா, திருஷ்டாந்தத்திற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை, பிரத்தியட்சத்திலேமூட்டின புகையைக்கண்டு அப்பிரத்தியட்சமான அக்கினியிருக்குமென்றறிந்ததுபோல தேகேந்திரியாதிகளினின்றறியுமறிவைப்பிரத்தியட்சத்திற்கண்டு யாவராலுமறியப்படாதது அவாங்மனதீதமானபிரமமொன்றிருக்கிறதென்றறிவதே முக்கியப்பிரயோசனமென்றுசொல்லப்படும்-பூதபௌதிகசராசரங்களிலும்அறியா இடப்பிரமமிருக்கிறதென்றனுமானத்தாற்காணப்பட்டதன்றிப்பிரத்தியட்சத்திற் காணப்படவில்லை - அஃதென்ன லட்சணமுடையதாயிருக்குமோவென்றபுத்தியிருத்திபரிகரிக்கவேண்டி உவமானப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்.

வினா, உவமானப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, மகாமிருகமென்றொன்றுண்டென்றுகேள்விப்பட்டவன் அதை அறியவேண்டியஆவலினாலறிந்தபேர்களைவினவ அவர்களுமேகதேசதிருஷ்டாந்தமாய் இந்தப்பசுப்போலிருக்குமென்பது உவமானப்பிரமாணம்,

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, பிரமத்தையறியவிருப்பினவன்பிரம சொரூபமெப்படியிருக்குமென்று பெரியோர்களைவணங்கிக்கேட்கஅவர்கள்அதற்கோருவ

மையினாலும் ஏகதேசதிருஷ்டாந்தத்தினாலுமறிவிக்கவேண்டியதினால் அ ந்தப்பிரமஞ்சச்சிதானந்தசொரூபலட்சணமாய் இந்தப்பூதாகாசம்போல வியாபகப் பட்டிருக்குமென்றுசொல்ல ஆகாசலட்சணமென்னவென்று வினவஆகாசம்நான்குபூதங்களுக்குமாதாரமாய்தானொன்றேநிற்பற்று நி ருக்கையாலும் நான்குபூதங்கட்கும் ஆகாசத்தைத் தவிர விருப்பிடமின் மையாலும் நான்குபூதமுமாகாசமேயாதாரமாயிருந்தது கொண்டு அந்த ஒருஆகாசத்தையேகடாகாசம்மடாகாசம் சலாகாசம் மகாகாசமென்றுஉ பாதிவசத்தாற்கண்டு கூறப்பட்ட போதும் அவ்வாகாசத்திற்கு இந்நான் குபூதங்களைக்குறித்துவந்தவுபாதிகள் சற்றுமின்றி இந்நான்கு பூதங்களை யுங்கவளீகரித்துக்கிரமித்து அவயவமின்றி நிரவயவமாயிருக்குமென்ன க்கேட்டு அந்தப்பிரமமும் இவ்விலக்கணமுடையதாயிருக்குமென்றுப ரோட்சமாயறிந்ததே அபிப்பிராயம் இவ்விலக்கணமுடைய பிரமமான து இருக்குமிடந்தெரியவரவில்லையேயென்றபுத்திவிருத்தி பரிகரிக்கவே ண்டி ஆகமப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்,

வினா, ஆகமப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, சொர்க்கலோகத்தில் அமிர்தமிருக்கிறதென்றுங்காசியி லரிச்சந் திரன்மயானங்காத்த பரண்காலின்னமிருக்கிறதென்று மாகமஞ் சொல்லக்கேட்டுஅதில் நிச்சயபுத்திவந்ததே ஆகமப்பிரமாணம்.

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, ஏகமேவாத்துவிதம்பிரமமென்ற சுருதிவாக்கியமுமேனியிற்பு றத்தினுள்ளின்மேலொடுகீழிற்றிக்கில் வானில் வையகத்திலெங் கும் யானிலாவிடமுமில்லையென்றஸ்மிருதிவாக்கியமும்சோதிதானாயிரு ந்தாற்பிரமமதாமென்ற வுபநிஷத்வாக்கியமும் பிரமாணமாகச்சொல்ல, சுரோத்திரவிடயமாய்க்கேள்வியுற்று தன்னிடத்தில் அந்தச்சச்சிதானந்த சொரூபலட்சணமிருக்கிறதா வென்று விசாரிக்குமளவில் ஜென்மாந்தர ஜன்மத்தாலித்தச்சரீரம்இப்போதுவந்ததென்றும் இப்போது செய்கிற ஜன்மத்தில் வினைவருகாலத்திலும் தேவமனுஷதிரியக்காதி ஜென்மங்கள்

வருமென்றும் அனுபவமிருப்பதால்சத்தாச்சுது மேலும்-திரிகாலத்திலு
முண்டானசரீராதிகளழிவதும்அவற்றால்வரும் சுகதுக்கமானமவமானமுற
னி விருத்திலாபாலாபங்களையும்அறிவாயிருந்தறிகின்றதால் சித்தாச்சுது-
மேலும்-சத்துவேறுசித்துவேறென்றுபிரித்துப்பார்க்கவிரண்டில்லாமை
யினாலானந்தமாச்சுதுபின்னும்அறிவானதுபற்றற்றிருக்க,தேகேந்திரியா
திகரணங்கட்கு மவ்வறிவைத் தவிர விருப்பிட மின்மையாலும் அறிவே
யவைகட்காதாரபூதமாயிருப்பதனாலும் இந்தத்தேகேந்திரியாதிகரணங்
கட்கு அவ்வறிவேயாதாரமாயிருந்தது கொண்டு அவ்வறிவுதானேகூடஸ்த
னென்றுஞ்சீவனென்றுமீசுரனென்றுமுபாதிவசத்தினாற் பின்னமாகக்கண்
டபோதும் பரிச்சின்னம்போலுங் காணப்பித்தவிடத்திலும் அவ்வறிவாகி
யபிராயத்திற்குத்தேகேந்திரியாதிகளைக்குறித்துவருமுபாதிகளின்றித் தே
கேந்திரியாதிகரணங்களையுங்கவளீகரித்ததிக்கிரமித்தும் அவயவமற்றநி
ரவயவமாயிருப்பதினாலும் முன்பரோட்சமாயறியப்பட்ட சச்சிதானந்த
சொரூபத்தைத்தானென்று அபரோட்சமாயறிந்ததே ஆகமப்பிரமாண
நிர்ணயம்முற்கூறியமூன்றுபிரமாணங்களினாலும்வஸ்து நிச்சயங்கூடா
து-இந்தப்படிஎப்போதுஞ் சச்சிதானந்த சுபாவமாயிருக்கமுன்பெத்த
த்திசையிலிந்தலட்சணமறியாமற்போனதென்னவென்றுவருகிறபுத்திவி
ருத்திபரிகரிக்கும்பொருட்டு அருத்தாபத்திப்பிரமாணமும்விசாரிக்கவே
ண்டும்.

வினா- அருத்தாபத்திப்பிரமாணமேதென்னில்.

விடை, திருஷ்டவருத்தாபத்தியென்றுங் கேள்வியருத்தாபத்தியென்
றுமிரண்டுவிதம்இதில்நித்தியவுபவாசியென்று பேரிட்டிருக்கிற
ஒருவனது தேகபீனத்தைக்கண்டு இவனிராத்திரிப் போசிப்
பனென்றறிகிறதே திருஷ்டவருத்தாபத்தி,

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. முன்பெத்தத்திசையிலுஞ்சச்சிதானந்தமென்றறிந்[illegible]
தெரியவொட்டாமன்மறைத்ததேயருத்தாபத்தி- அ[illegible]

பிராணிக்குமனுபவமாக நான் பூர்வஜென்மத்திற்செய்யாநின்றபுண்ணிய
பலத்தினால் இந்தச்சென்மத்திலும் நல்லஜாதிகுலகோத்திரவருணதேசரூ
பஜன்வரிபயனையாதி சம்பத்துமுண்டாயிற்றென்றும் இப்போதுசெய்யு
ம்புண்ணியகன்மத்தினால் இனிமேலுந் தேவனுடாய்ப் பிறப்பேனென்
றும்முன்சென்மத்திற் சொற்றுவைக்காத பாவியாகையால்இப்போது
நீசரிசத்திரனாயிருக்கிறான் இந்தச்சென்மத்திலும் ஒருவருக்குங்கொடாத
தரித்திரனாயிருப்பதினால் வருஞ்சென்மத்திலுந் தரித்திரனாய்ப்பிறப்பே
னென்றும் இன்னாருடம்இன்னயாதம் இன்னநாட்சத்திரயோககரண
வாரத்திற்பிறந்தேனென்றும்இந்தமட்டுஞ்சவுக்கியத்தையனுபவித்தேன்
இனிமேல்லாதகஷ்டம்வருகிறதென்றும் அந்தக்கஷ்டத்துக்குமே
லிந்தச்சரீரநில்லாதென்றும்இப்படி திரிகாலங்களிலுமுண்டான அனிவி
ருத்திக்கஷாக்ஷயபாலபாபானுபவமானங்களையு மறிந்திருக்கிறதினால்தான்
சச்சிதானந்தலட்சணமாயிருந்துந் தெரியவில்லை யென்றதேயஞ்ஞானம், அ
துவென்னுஞ்ஞானமானால்தெரியவில்லையென்றவறிவுவரக்கணக்கில்லை ஈதறி
வுதானென்றும் அறியவொண்ணுமஞ்ஞானம்வரக்கணக்கில்லை ஆகையால்
இந்தஅருத்தாபத்திவேசுத்தமானதன்னைத்தெரியவொட்டாதுமறைத்தத
லைமையேபற்றவஞ்ஞானம்நிர்த்தியவுபவாசியென்பவனுடையசரீரமினையா
த்துகண்டு பிரகசியத்திற்பொசிப்பனென்றறிவதுபோல நான்சச்சிதானந்
தலட்சணமென்பதுதோற்றுகிறதாலுந்தன்னனுபவத்தினாலுந்திவிசா
ரித்தறிந்தால்நானேசச்சிதானந்தசொரூபமானவன் இதுவேதிருஷ்டவருத்
தாபத்தி-இப்படி சச்சிதானந்தசொரூபமென்பது அனுபவமாயறிந்தி
ருந்தும்முன்போலவே நாமரூபாதிகள்தோற்றுவதன்றி அந்தலட்சணமி
ருந்தால்தோற்றாதாவென்றவருகிறபுத்திவிருத்திபரிகரிக்கும் பொருட்டு
கேள்வியருத்தாபத்திப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்,

வினா. கேள்வியருத்தாபத்தியாவதென்னவென்னில்,

விடை, ஓர்புருஷன் அடுத்தகிராமத்திலிருக்கும் ஒருவனைக்காணவேண்டு
வந்து அவன் பேனவாயினின்று இந்தக்கிராமவாசியிருக்கிறானோவெ
ன்றாரும்பேனாயிலுள்ளவர்களை வினவஅவனில்லையென்றசொல்

னஅபாவசத்தங்காதிற்கேட்டும் அவனிறந்துபோகவில்லைஅன்னி யதானங்களிற்போயிருப்பானென்றறிந்துகொண்டதேகேள்வி யருத்தாபத்தி,

வி௵, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை, நாமரூபாத்மகங்களிலுமாத்மாவில்லை யென்றறிந்தவறிவுமாத்தி ரமிச்சமாயிருக்கக்கண்டதேஇல்லையென்றகேள்வி யருத்தாபத்தி யின்பிரயோசனமாம்-அறிவேவடிவாயிருப்பதாத்மாவானால் அறிபொரு ளாகிய நீதேயறியென்றபேரிருக்கிறதாகையால்அறிபொருளாகிய ஜீவே யவராசகத்தும் அதன்காரணமானமாயையும் அனுதியாயிருக்கவேண்டும்அ ப்போதுஅதுகளுக்கு நித்தியத்துவம் வருமேயென்னும் புத்திவிருத்தி பரிகரிக்கும்பொருட்டு அபாவப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்,

வி௵. அபாவப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, பிராகபாவம்பிரத்தொம்சாபாவம்அன்னியோன்னியாபாவம்அத் தியந்தாபாவம்எனநான்குவிதம்

வி௵. இவற்றுள்பிராகபாவமாவதேதென்னில்

விடை, குலாலன்சக்கரத்திருக்குமிருத்திகாபிண்டத்தைப்பார்த்து இதிற் கடமில்லையென்றதுபிராகபாவம்,

வி௵, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, கடமில்லையென்றஅபாவத்திற்குஅனுதித்துவமனந்த கற்பங்களா யிருந்தும் நித்தியத்துவஞ்சித்திக்கவில்லை- எப்படியென்றால்கு லாலன்சக்கரத்தைச்சுற்றிமிருத்திகாபிண்டத்திற்கைவைத்தபோதுமுன்னி ல்லாதகடகம் உற்பத்தியாயிற்று ஆதலால்முன்னில்லையென்றவ பாவத்தி ற்கனுதித்துவமிருந்தும் அநித்தியத்துவஞ்சித்திச்சது அதுபோலமாயை யுமதன்காரியமானஜீவேசுரசகத்தும் அனுதித்துவயென்றசிறிதுசாஸ்திர ங்களிற்கூறப்பட்டிருந்தாலும்விசாரஞானமான விருத்திஞானத்திலுற்ற சிக்கப்பட்டுஅவித்தியமாய்விடுமென்பதேபிராகபாவப்பிரயோசனமாயி ற்று-விருத்தியிற்பிரதிபலிக்கும் விருத்திஞானத்திலுற்றசிக்கப்படமா

யையும்அதன்காரியமான ஜீவேசுரசகத்தும்விருத்திஞான மொழிந்தவி-த்துமுன்போலப்பிரத்தியட்சமாய்த்தோற்றுமேயென்றபுத்திவிருத்திப-ரிகரிக்கும்பொருட்டுப்பிரத்தொம்சாபாவமும்விசாரிக்கவேண்டியது,

வினா, பிரத்தொம்சாபாவமாவதேதென்னில்,

விடை, ஓர்தரித்திரனையாசகன் ஓர்கடமேஆசத்தியாய்க்கொண்டு பாலவசத்தினால் மனைகடோறுமிரந்துவுண்ணுங்காலத்தில்அம்மனைகளி-லுள்ளசிறுவர்கள்அஞ்ஞானசிரேஷ்டவுச்சாகத்தினால் கற்கொண்டெறிய அவ்விரப்பன்கடவாஞ்ஞையினால் அக்கல்லெறிகளைத்தடுத்து தன்சரீரத்தி-ருக்குமதித்துஞ்சகிக்கமாட்டாமல் அவனுக்கேவிரத்தந்தோன்றி அக்கட-த்தைஓர்கற்பாறையின்மோதஅக்கடமுடைந்து சில்லுகளாய்ச்சிதறிவிட்ட-துபிறகுகடவாஞ்ஞையினால்அவன் புரண்டுபுரண்டழுதாலும்உடைந்தகட-ம்வரமாட்டாதென்பதேபிரத்தொம்சாபாவம்,

வினா; இச்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை: முன்விசாரஞானத்தால்நசிக்கப்பட்டமாயையும் அதன்காரியமா-ன ஜீவேசுரசகத்தும்மீண்டுகற்பகாலத்தினும் உண்டாகமாட்டா-தென்றறிவதேயபிப்பிராயம்கடமுடைந்தும் அதன்காரியமறந்து கார-ணமாகாமல்கடமேவாதென்றகாரியவுபாதிகாண்பதும்பால விருத்திஞான-த்தாலழிந்த மாயையும்அதன்காரியமான ஜீவேசுரசகத்தும் காரணமான பிரமமாத்திரமாய்ப்போகாமல்மாயாகாரியமான ஜீவேசுரசகத்தொன்று அறிவிற்றோற்றக்கண்டிருப்பதால்அந்தமாயையும் வஸ்துத்துவயமாயிரு-க்கும்ஆகையால்பிரமத்தில் மாயையுண்டுமாயையிற் பிரமமிருக்குமென்ற-புத்திவிருத்திபரிகரிக்கும்பொருட்டுஅன்னியோன்னியாபாவமும்விசாரி-க்கவேண்டியது,

வினா, அன்னியோன்னியாபாவமாவதேதென்னில்.

விடை, படத்திற்கடமும்கடத்திற்படமுக்காலத்திரயத்திலுமில்லையென்-றறிவதேஅன்னியோன்னியாபாவம்,

வினா, இதிச்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, அத்துவிதம் அவிநாசம் உவமானரகிதம் அவாங்மனோகோசரம் மவுனாதீதம் அத்தியாதிப்பிரியலட்சணம் ஆகிய குணங்களையுடையதே பிரமசொரூபம்- துவிதம் திரிசபம் மனவாக்குகோசரம் அனிர்வசனம் ஆகிய குணங்களையுடையதே மாயாசொரூபம் அம்மாயாசொரூபத்தில் பிரமசொரூபமில்லை- பிரமசொரூபத்தில் மாயாசொரூபமில்லையென்றறிகிறதிடம்வந்ததேயபிப்பிராயம் - இதுநாமரூபமென்றும் மாயையென்றும் நினைவில்தோற்றுகிறது அந்தமாயையில்லாவிட்டால் நினைவில் தோற்றமாட்டாதாகையினால் மாயையுமிருக்குமென்று வருகிறபூர்வ விருத்தியபரிகரிக்கும்பொருட்டு அத்தியந்தாபாவமும் விசாரிக்கவேண்டியது.

வினா, அத்தியந்தாபாவமாவதேதென்னில்,

விடை, ஒருபுருஷன் தனதுசொப்பனத்தில் தான் சாகவும் தன்னைத்தகனஞ்செய்யவும் மறுநாள் காடாற்றி அஸ்தியெடுத்துக்கும்பத்திலடைக்கிக்கங்கையில்விடவுங்கண்டபிறகு விழித்து சாக்கிரத்தில்மனத்தால் நினைக்கவாக்கால் சொல்லவந்தும் மெய்யாகாமற்பொய்யென்றறிவதே அத்தியந்தாபாவம்

வினா. இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை, மாயையென்றும் சிலேசுராமென்றும் நாமரூபங்களாய்ச்சொன்னாலும் நினைத்தாலும் சுத்தமித்தையெப்படியென்றால் ஆகாசத்தில்தாமரைப்பூத்ததென்றுநினைவில்தோற்றினாலும் அது எப்படியில்லையோ அதுபோல மாயையென்று நினைவில்வந்தாலுங் காலத்திரயத்திலுமில்லையென்றதிடம்வந்ததேயபிப்பிராயம் மாயையென்பது காலத்திரயத்திலுமில்லாதிருக்கச் சகலதேவிகளுக்கும்நானாவாய் பிரசித்தமாய் உண்டுபோலத்தோற்றுகிறதற்குக்காரணமேதென்றுவருகிறபூர்வவிருத்தியபரிகரிக்கும்பொருட்டு ஐதிகப்பிரமாணமும்விசாரிக்கவேண்டியது,

வினா, ஐதிகப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, ஒருவன்ஒருஆலமரத்திலேறி இலையும்விறகும்தனக்குப்போதுமென

னமட்டும்பறித்துக்கொண்டு இறங்குஞ்சமயத்தில் ; வேறொருவ
ன்வந்து ஆரடாபயித்தியக்காரா இந்தமார்க்கத்தில் மகாயக்ஷனென்றும் பசாசி
ருக்கின்றதே இதினிடத்தில் ஒருவருஞ்சேருகிறதில்லையே நீ இதிற்கால்வை
த்தேறலாமாவென்றசத்தங்கேட்டமாத்திரத்தில் மனத்திற்பயமும் சரீரத்
தில்நடுக்கமுமுண்டாய்ப்பொடித்தவிறகும் பறித்தவிலைகளையுமெறிந்துவி
ட்டுமரத்திலிருந்திறங்கக்கால்தடுமாறிக் கீழேவிழுந்து மூர்ச்சையானதே
இதிகப்பிரமாணம்,

வினா. இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, மாயையும்மாயாகாரியங்களுங்காலத்திரயத்திலு மில்லாததனத்தயி
த்தையாலும்பிரத்தியட்சமாய்க்காணுகிறயக்ஷபிசாசுகளின்
சொற்கேட்டமாத்திரத்தில்இருக்கிறதென்று சத்தியபுத்திவந்ததுபோல
அந்தமாயாகாரியமானஇவ்வுலகசத்துக்களிப்பிரசித்தமாயுண்டுபோல ஏக
ம்பாவனையாகியபிராந்திமூலப்பிரமையால் தோற்றுமென்றறிகிறதேயபி
ப்பிராயம்-மாயையென்பதில்லையாகும் மாயாகாரியமானநாமரூபசத்
தென்னும்சத்த பரிசரூபரசகந்தகாரணமென்னும் அனேகவிடயங்கள்
தோற்றுகிறதற்குக்காரணமேதென்றுவருகிறபட்சத்திலிருத்தி பரிகரிக்கும்
பொருட்டுசம்பவப்பிரமாணமும்விசாரிக்கவேண்டியது,

வினா, சம்பவப்பிரமாணமாவதேதென்னில்,

விடை. ஆயிரமென்னுங்கணக்கில்ஒன்றுஇரண்டு அஞ்சுபத்துநூறென்
னுங்கணக்குமிருக்கிறதென்றறிவதேசம்பவப்பிரமாணம்.

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, சத்தமென்றறியும்போது அவ்வறிவேசத்தரூபமாயிருக்குமன்றி
ப்பரிசரூபரசகந்தகாரணதேகங்களுமில்லை - பரிசமென்றறியும்
போது அவ்வறிவேபரிசரூபமாயிருக்குமன்றிச் சத்தரூப ரசகந்தகாரண
தேகங்களுமில்லை - ரூபமென்றறியும்போது அவ்வறிவே ரூபமாயிருக்கு
மன்றிச் சத்தபரிசரசகந்ததேக காரணங்களுமில்லை-ரசமென்றறியும்போ
து அவ்வறிவேரசரூபமாயிருக்குமன்றிச் சத்தபரிசரூபகந்தகாரணதே

களுமில்லை - சத்தமென்றறியும்போது அவ்வறிவே சத்தரூபமா யிருக்
கின்றதல்லாமல் சத்தபரிசரூப ரசகந்தங்களுமில்லை - ஆகையால் இந்திரிய
ங்களிற் சத்தபரிசரூபரசகந்தங்களாய்த்தோற்றினவெல்லாம் அவ்வறி
வாகியபிரமமே யதுவதுவாகத்தோற்றியது ஆனபடியினால் அறிவாகியபி
ரமத்தில் அநேகம்போலஅறிவாகியதனக்கேதோற்றலாம் அன்றியுந்தா
ன்சர்வசத்திமானாகையின் அநேகருமிருக்கலாம் அப்படி யிருக்கையால்
சர்வாதாரபூதமான நிருபாதிகப்பிரமமேயிருக்கிறதென்றறிகிறதேயபிப்
பிராயம் இதுவேயபூர்வதை.

வினா, பலமாவதேதென்னில்,

விடை, இந்தச்சகல வஸ்துக்களில் ஒருவஸ்துவையறிந்தமாத்திரத்தில் சக
லருமறிப்படியே யிருக்குமென்றறிவதுபோல ஆத்மஞானமறிந்
தமாத்திரத்தில் சகலபிரமாண்டபிண்டங்களிலுந்தானாய் விளங்குமபாய
ம்பறதமென்றும் நாமே ஆத்மசொரூபமாய் விளங்குவதென்றும் இந்தத்
தேகேந்திரியாதி சகல சகத்தும் பிராரத்தமுள்ளமட்டும் மித்தையாய்த்
தோற்றப்படுகின்றதுபிராரத்தநாசத்தில் சர்வாத்மகமாய்த் தோற்றாமல்
அத்விதீயப்பிரத்யக்சொரூபமாத்திரமாய்ப் பிரகாசிக்குமென்றும்பிரதிபா
திக்கப்படுகிறதேபலம்.

வினா. அர்த்தவாதமாவதேதென்னில்,

விடை. எந்தவஸ்துவைக் கேட்டமாத்திரத்தில் கேட்கப்படாத வஸ்துகே
ட்கப்படுகின்றது எந்தவஸ்துவை மனனம்பண்ணின மாத்திரத்
தில் மனனம்பண்ணப்படாத வஸ்து மனனம்பண்ணப்படுகின்றது எந்த
வஸ்துவையறிந்தமாத்திரத்தில் அறியப்படாதவஸ்து அறியப்படுகின்றது
அதுவேபஞ்சகிர்த்தியங்கட்காதாரபூதமான கர்த்ருத்வமாய்விளங்குவதெ
ன்றும் பிரதிபாதிக்கின்றதே அர்த்தவாதம்,

வினா, உற்பத்தியாவதேதென்னில்.

விடை. கடத்திற்குமண்ணும் தந்துவுக்குலண்டும் ஆயுதங்களுக்கிரும்பும்
காரணமாவதுபோலத்தோற்றப்பட்ட நாமரூபசெகத்துக்கும்

ரமமேகாரணமென்றமெகத்துக்குஞ்பிரமத்துக்கும் அபின்னத்துவம்பி
தியாதிக்கின்றதே உற்பத்தி இந்த அஷ்டப்பிரமாண ஷிட்லிங்கதாற்ப
யங்களைச் சற்குருசாஸ்திர முகனிலையிற் கேள்விப்படுகிறதே சிரவணம்.

வினா. மனனமாவதேதென்னில்.

விடை, வேதாந்தசாஸ்திரங்களினாற்சிரவணம்பண்ணின அத்துவிதமான
பிரத்தியேகாத்மசொரூபத்தை அனுகூலமானயுத்திவிருத்தியாக
ளப்பிட்டு நிச்சயிப்பதுமனனம்.

வினா. நிதித்தியாசனமாவதேதென்னில்;

விடை. விசாதிகமானதேகேந்திரியாதிகளைச்சுசாதிகமான அகண்டாகார
விருத்தியோடு கூட்டிமலையிறுச்சியில்விட்ட தயில்தாரைபோல
இடைவிடாமல்அகண்டாகாரவிருத்தியினாற் சதாதியானிக்கிறதுதேநி
தித்தியாசனம், இப்படிஷிட்லிங்கதாற்பரியத்துடன் கேள்விப்பட்டசிர
வணத்தில் ஒருவனுக்கெதுவரையில் அஞ்ஞானபுத்தி நீங்கவில்லையோ அ
துவரையிலும்சிரவணம்பண்ணவேண்டும் - இப்படிசிரவணம் பண்ணிநி
ச்சயித்தபொருளில் எதுவரையில்சமுசயபுத்தி நீங்கவில்லையோ அதுவ
ரையிலும்யுத்திதர்க்கவனுமானவுதவிகளால் மனனம்பண்ணவேண்டும், இ
ப்படி மனனம் பண்ணித்திடங்கொண்டவறிவில் எதுவரையில் யானென
தென்னும் விபரீதபுத்தி நீங்கவில்லையோ அதுவரையிலும் மந்திரயோக
முதலியவைவகையோ காப்பியாசவுதவிகளால் நிதித்தியாசனம் பண்ண
வேண்டும்.

வினா, அதேதென்னில்;

விடை, அபரோட்சசாட்சாத்கார சிரவணத்தில் குதர்க்கங்களுடன்கூடிய
விபரீதமானது எவ்வளவுகாலநாசப்படவில்லையோ அவ்வளவுகா
லமுமஞ்ஞானம்போகாது ஆதலால்மோட்சதாகங்கொண்டவன்
தியானசமாதிகளையப்பியாசம்பண்ணவேண்டியது.

வினா. அத்தத்தியானசமாதிகளெத்தனைவிதமென்னில்.

விடை. சவ்விகற்பசமாதியென்றும் நிருவிகற்பசமாதியென்றுமிரண்டுவி
தமாயிருக்கும்.

வினா. சவ்விகற்பசமாதியாவதேதென்னில்.

விடை. ஞாதுருஞானஞேயம் என்னுந்திரிபுடிகளுண்டு அவற்றுள்தே
கமேதானென்பது அசுத்தஞாதுரு அறிவேதானென்பது சுத்த
ஞாதுரு இந்தஞாதுருவேஞானமென்னுமனத்தோடுகூடி ஞானேந்திரிய
வழிகளால் விருப்புவெறுப் பென்றறிவது அசுத்தஞானம்-இந்திரியவழி
களினறிவாகிய அசுத்தஞானத்தைப் பொய்யறிவென்றறிந்ததே மெய்ஞ்
ஞானதுரியமாகியசுத்தஞானம் - பூதங்களான துதடித்து பவுதிகங்களாய்
சத்தாதிவிடயங்களாய்த்தோற்றுவது அசுத்தஞேயம்இந்தச்சத்தா
திவிடயங்களனைத்தையுஞ்சொரூபமாத்திரமாய்க்காண்பதே சுத்தஞேயம்
ஆதலால் இவ்வசுத்தத்திரிபுடிகளை லயம்பண்ணிச் சுத்தத்திரிபுடிகளுக்கு
லயம்வராதபடிஞேயமாயிருக்கிறகேவலப்பரப்பிரம வஸ்துவினிடத்தில்
மனம்நிலைத்துத்தான்பிரமாகாரமாயிருப்பதேசவ்விகற்பசமாதி.

வினா, அதெப்படியென்னில்,

விடை. மண்ணாலாகியபாண்டம்மண்ணாயிருந்தும் பார்க்கிறவர்கண்களு
க்குப்பாண்டமென்றெப்படி காணப்படுகின்றதோ அதுபோல
ஞாதுருஞானஞேயங்களான சுத்தத்திரிபுடியானமனமும் சத்தாகிய சின்
மாத்திரமானபிரமத்தினிடத்தில் சின்மாத்திரமாகவே விளங்குகின்ற தாத
லால் சவ்விகற்பசமாதியென்றுபெரியோர்கள்சொல்லுவார்கள்,

வினா, நிருவிகற்பசமாதியாவதேதென்னில்,

விடை, ஞாதுருஞானஞேயங்களானசுத்தத்திரிபுடியென்கிறமனோவாச
னையுநீங்கிஞேயமாத்திரமான பரப்பிரமசொரூபந்தானுனதே நி
ருவிகற்பசமாதி,

வினா, அதெப்படியென்னில்;

விடை, அப்பிற்கரைந்த வுப்பானது உப்பென்றவேறுகாமல் அப்பு[illegible]

திரமாயிருந்ததுபோல - பிரமாகாரமானமனம் பிரமமாத்திர மாய்நிலைத்துத்திரிபுடிமுதலானசங்கற்பவிகற்பங்களின்றிச்சத்தாமாத்திர மானபிரமசொருபமாய்விளங்குகின்றதால்நிருவிகற்பசமாதியென்றும்பெ ரியோர்கள்சொல்லுவார்கள் - இவ்விருவகைச்சமாதிகளில் மனோபேதமி ருப்பதினாலும் சமாதிசுழுத்தியிரண்டினுள் மனோநாசஞ்சமமாய்க்காணு கையாலும் சுழுத்தியில் அஞ்ஞானங்காணப் படுகையினாலும் சமாதியில அஞ்ஞானங்காணப்படாமையினாலும் அஞ்ஞானமும் அஞ்ஞான காரிய மானசந்தேகவிபரீதமுமற்றுப்பிரமஞானத்தாற்கு ஒருவிக்கினமுமின்றி ச்சதா சொருபானந்தமுண்டாகும் பொருட்டு சாட்சதாகியானவன் அக பபுறமென்னும் பேதத்தால் அறுவகைப்பட்டிருக்கின்ற ஷிட்விதசமாதி களிலும் அவசியம்அப்பியாசம்பண்ணவேண்டும்.

வினா, ஷிட்விதசமாதிகளாவதேதென்னில்.

விடை, அந்தர்திரிசயானுவித்தம் அந்தர்சத்தானுவித்தம் அந்தர்நிருவி கற்பம்பாகிய திரிசயானுவித்தம் பாகியசத்தானுவித்தம் பாகிய நிருவிகற்பம் என அறுவகைகளாம்.

வினா. அந்தர்திரிசயானுவித்தமாவதேதென்னில்.

விடை, அறிவுதானே திரிசயங்களாகிய காமக்குரோதாதி விருத்தியிற் கூ டி அவ்விருத்திகட்குச் சாட்சியாகத்தானேயிருக்கிற சொருபானு சந்தானம் பண்ணுகிறதே அகத்திரிசயானுவித்தம் மேலும் நானெனக்கு நதென்கிற காமக்குரோதாதிவிருத்திகளை எந்த அறிவினாலறியப்படுகிற தோ அந்தத்திருக்குரூபமானவறிவுக்கு அகங்காரமுதலிய காமாதிகளே திரிசயங்கள் இந்தக்காமாதிவிருத்திகளையும் அவிகாரியாகப் பார்க்கிறசா ட்சியாகத்தன்னைப்பார்க்கிறவன் நிஷ்கிரியனாகவேயிருப்பன் இந்தகாமா திவிருத்திகட்கெல்லாம் தான்சாட்சி என்றுவிருந்தவிருத்திகள்காணப்படுகி றதென்றுதன்னைச்சாட்சியாயறிந்தவன்சாட்சியாகவேயிருப்பன் ஆதலா ற்றிரிசயமாயிருக்கிறதேகாதிசகத்தையும் ஆத்மாவாயிருக்கிற தன்னிடத்தி லேயும்பண்ணவேண்டும்.

வினா, லயம்பண்ணுமனுபவமெப்படியென்னில்.

விடை, நான்தேகமும்பிராணாதிவாயுக்களும் அகங்காரமும்மனமும் புத்தியும்சித்தமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களுமல்ல இவைகளுக்கெல்லாஞ்சாட்சியாயியும்நித்தியமாகியுமிருக்கிறபிரத்தியேகாத்மசொரூபமேநான், நான் ஸ்தூலமும்சூட்சுமமும்வளர்ந்தவனுங்குறைந்தவனும் பாலனும் எவ்வனனும் விருத்தனும் ஊமையும்நொண்டியும் மூக்கனையனும்வந்தவனும் போனவனும் கொன்றவனும் கொல்லப்படாதவனும் கர்த்தாவும் போக்தாவும் சொல்லுகிறவனுஞ் சொல்லப்படுகிறவனும் யகியும் ஆக்கியும் யோகியும் நியோகியும் ராகியும் விராகியும் காமியும் குரோதியும் லோபியும் பந்தனும் முத்தனுமல்ல இவைகளுக்கெல்லாஞ் சாட்சியாகியு நித்தியமாகியுமிருக்கிறபிரத்தியேகாத்மசொரூபமே நான்-நான் உட்பிரக்ஞனுமல்ல வெளிப்பிரக்ஞனுமல்ல அறியப்படுகிறவனுமல்ல அறியப்படாதவனுமல்ல இந்தத் தேகேந்திரியாதிகளுடைய கூட்டரவுமெனக்கில்லை புண்ணியபாவங்களுமில்லை பசிதாகமுதலானஷடூர்மிகளுக்குமப்பாற்பட்ட சதாவிமுத்தமான கேவலசித்துருபமே நான்வென்றுதன்சொரூபத்தைத் தானே கண்டுகொண்டுகாணப்பட்ட திரிசயங்களெல்லாம் தனக்குள் லயம்பண்ணிக் கொண்டிருக்க வேண்டும் பிராந்தியினாற்காணுகிறவிபரீதபாவனைகளை விவேகிநீங்கி நிற்பன்.

வினா, அதெப்படியென்னில்,

விடை, செகத்விபரீதபாவநீங்கிச்சுயம்பிரகாசமான ஆத்மசொரூபமானதே முத்தியென்றுசுருதிஸ்மிருதிகள் சொல்லுகின்றபடியால் சதாமனனை யொடுக்குகிறவனுக்கே இந்தச் சமாதிசித்திக்கும் இல்லாவிட்டாற்சித்தியாகாது ஆகையால்சதாமனனையொடுக்கவேண்டும் இது வன்றி ஒருவேஷத்தினாலும் பாஷையினாலும் இந்த அகண்ட சச்சிதானந்தவனுபவஞ்சித்திக்கமாட்டாது அதுசித்திக்கும்பொருட்டு அதிபாதிப்பிரியமானதன்னிடத்தில் அகங்காராதிகளையுமதன்விகாரங்களையும்லயம்பண்ணவேண்டும் எவனொருவன் ஆத்துமதத்துவத்தை யபேட்சித்து பிரிகு

தியை நாசம்பண்ணுகிறுரோ அவனேமுத்தன் அதுவல்லாமல் கோடி
ற்கருமங்கள் பண்ணிறுலுமுத்தனுக மாட்டானென்று எசுர்வேதத்திலு
சுவேதஸ்வதாவுபநிஷத்திலுஞ் சொல்லுகின்றது அன்றியுஞ்சுயம்பிரகா
மானவாத்மாவையறிந்தவன் சகலஅஞ்ஞானபாவங்களேயுமறுத்து ஜென
மரணசம்சாரமானகிலேசங்களைவிட்டொழிவானென்று சகல வேதாந்தசா
ஸ்திரங்களுஞ்சொல்லுகிறபடியால் சகல கிலேசங்களையும் விட்டொழிகி
றபோதே ஜென்மமொழிகிறது அதுவேதேடமீண்டும்பிறவாதமுத்தி.

வினு, கிலேசத்தைவொழிக்கும்விதமெப்படியென்னில்,

விடை, ஆத்மநிஷ்டையிலுலொழிக்கவேண்டுமாகையால்மோட்சதாகியா
னவன் சதாகாலமுநிஷ்டைபண்ணவேண்டும் ஜென்மவாசனையை
த்தவிரப்புருஷனுக்குவேறு விரோதிகளில்லை ஆதலாற்சகலவாச
னைகளுஞ் சமாதிநிஷ்டையாகிய ஞானக்கினியிலுல் தகிக்கப்பட்
டால்மீண்டுஞ்சென்மத்திற்கேதுவாகமாட்டாது.

வினு. அதெப்படியென்னில்,

விடை, அக்கினியிலுல் வறுபட்டவித்துமுளைக்கிற தற்கேதுவாகாதது
போலஞானக்கினியிலுல் தகிக்கப்பட்டவாசனுரூபமான கிலேச
ங்கள் மறுசென்மத்திற் கேதுவாகமாட்டாது ஆதலால் முமூட்சுவானவர்
கள் அசேஷவாசனுக்ஷயமும் விபரீதபாவநிவிர்த்தியும் உண்டாகும்பொ
ருட்டு பிரயத்தினம் பண்ணியாகிலும் சதாஞானசமாதியிற் பழகவேண்
டியது இப்படிப்பட்ட ஞானநிஷ்டையுடையவனுக்குக் கன்மம்வேண்டிய
தில்லைகன்மத்துக்குஞ்ஞானநிஷ்டைக்குமொன்றுன கூட்டரவுசித்தியாது

வினு, அதெப்படியென்னில்,

விடை, தேகாத்மபுத்தியோடு கூடின கர்த்ருத்வபாவனையைக் கெடுப்ப
தஞானம் ஆதலாலொன்றுக்கொன்று விரோதமானஞானகன்ம
ங்களுக்கெப்படி அபிக்கியங்கூடும் தேஜசு திமிரங்களுக்கெப்படிகூட்டர
வில்லையோ மேற்குமுகம் பார்க்கிறவனுக்கு கிழக்குமுகம் பார்க்கிறக
ண்ணிமைத்து விழிக்கிறதற் கெப்படி கூட்டரவில்லையோ அப்படியே

ந்தர்முகதிருஷ்டியானஞானநிஷ்டர்பாலுக்குப்பகிர்முகதிருஷ்டியுள்ள
கன்மங்களிற்கூட்டரவில்லை ஆதலால் நிஷ்டாபாரூயிருக்கிறவனுக்குக்க
ன்மதந்திரக்ஷெதாஷிவிலவகாசமில்லை.

வினா. மற்றெறிஞனுள்ளதென்னி.

விடை. கிரிகாணத்தாற்சாதிக்கப்படுகிற கன்மங்களெல்லாமசுத்தாகையா
ல்சுகதுபிடமதையேயயன்றுகூலதிரிசயங்களையுந்தள்ளியிருக்காமி
ருசிந்சொரூபத்தில நீலைத்திருப்பதால அந்தநிலையே சந்தியாவந்தனம்
ஆமெவாஷடானம் அதுவேயவிரதம் அதுவேசகலரக்ஷிப்புமாகையால்
சகலசாத்திர பரமார்த்தத்தையடைந்திருக்கிற சற்புருஷர்களுக்குச்ச
கலமுடம் ஞானநிஷ்டையைத் தவிர வேறில்லை சகலமும் விட்டுத்துறந்து
ஞானநிஷ்டாபர ராயிருக்கிற சந்நியாசிகளுக்குவேறே கிரியாசாதனங்க
ளொன்றுமில்லை ஆதலால்கிரியாந்தரங்களான அதாஷ்டில்லையெலாமெ
த்து நிஷ்டா ரையேயிருக்கவேண்டும் ஞானமேடையிலேறவேண்டி
யபேக்ஷிக்கிறவன் பூரணமானவன் ஆத்மநிஷ்டையாகிறவன் ஸ்ரீ வெ
ப்துவகாண்டு சஞ்சலரகிதமாய் சதாஆத்மபராயணனாய் ஆத்மசொரூபத்
திலநிலைத்திருக்கவேணும் ஞானமேடையிலேறவேண்டிய யோகியுள்
ளதாப்பியாசிகரு ஞானநிஷ்டா சாதனங்களேகன்மங்கள் யோகமானமே
டையிலேறவேண்டின முமூக்ஷுவுக்குயோகத்தைத் தவிரவேறுகிரியாந்த
ரங்களொள்ளவுமில்லை ஒருவன்யோகிடாயிருந்து வேறேகிரியாந்தரங்க
ளைநினைக்கால மாத்திரம்மேலேறித்துவறினவனெப்படிகீழேவிழுவானோ
அப்படியே யோகத்தியில் விழுந்துவிடுவான் - ஞானமேடையிலேறியி
ருக்கிற கிருதகிருத்யஞானவிவேகிக்குவெளியில் செய்காரியமொன்றுமி
ல்லை இதுவே அந்தர்திரிசயானுவித்தசவிகற்ப சமாதி,

வினா. அந்தர்சத்தானுவித்தமாவதேதென்னில்.

விடை, சத்தமின்மாத்திரமாய்ச்சேஷ்டிக்கப்பட்டசத்தத்துடன்கூடிய்நா
ன் அசங்கன் சுயம்பிரகாசன் அத்வைதாய்தனென்கிற சத்தங்களைப்
பொருந்தி அந்தச்சத்தங்களைத் தானுகப்பாவித்தபாவனையே
வோ அதுவே அந்தர்சத்தானுவித்தம்,

வினா இதற்கனுபவமெப்படியென்னில்,

விடை. நான் சுத்தன் சாந்தன் அனந்தன் முன்பின்னெதிரில்லாதவன் உள்ளும்புறமு நிறைந்த பரிபூரணன் ஆனந்தனாயிருக்கிறவன் ஜெனனமரணமில்லாதவன் நித்தியானந்தமானவத்வைதன் என்றும்பிரத்தியேகவபின்னமென்றும் அகண்டமென்றும் சச்சிதானந்தலட்சணமென்றும் சுத்தமென்றுஞ் சுருதிகளிற்சொல்லப்பட்டபரஞ்சோதியானபிரமமெதுவோ அதுவே நானென்னுஞ் சேத்தாமாத்திரமாயிருக்கிறவிருத்தியோடுகூடிச் சத்தாசாமானியமனைசத்தத்தைப் பொருந்திச் சஞ்சலமில்லாமல் சமாதிநிரிசயங்களைச் சொரூபத்திலேலயம்பண்ணி சுத்தோகமுதலான சத்தங்களுடன் நிருக்கேபிரதானமானபாவனையைச் சாதிக்கவேண்டும் இதுவே அந்தர் சத்தானுவித்தசவிகற்பசமாதி.

வினா. அந்தர்நிருவிகற்பமாவதேதென்னில்,

விடை, திரிசயானுவித்தம் சத்தானுவித்த மிரண்டும் விட்டொழிந்து மனோவியாபாரத்தையுங்கட்டோடே விட்டொழிகிறதே அந்தர் நிருவிகற்பம் ஒருவன் முன்சொன்னசவிகற்பசமாதியை யன்புடன் கூடி யிடைவிடாமல் நெடுநாள் பழகுகிறதோ அவனுக்கு மாசறுக்கய முத்தித்தலயமுற்றடையற்ற நிரதிசயவானந்தமுஞ்சித்திக்கும் இந்தலட்சணம் பொருந்தினயோகியானவன் உள்ளும்புறமுங்காணாமல் ஆனந்தாமிர்தக் கடலிலமுந்தினவனாய்த் தன்னைவிட வன்னியமில்லாதவனாயிருப்பன் ஆதலால்நிருவிகற்பமாகிய பரப்பிரமசொரூபநிஷ்டையைப்பொருந்தினவர்களே சீவன்முத்தர்கள் அவர்களே சீவத்தன்மை பொருந்தியும் பொருந்தாமலிருக்கிறவர்களென்றறிக, ஒருவன் இந்த மூவித சமாதியும் அகமுகத்திற்பழகினதுபோல பகிர்முகத்திலும் துவித நிவிர்த்தியாகும் பொருட்டு பாகியதிரிசயானுவித்த சத்தானுவித்த நிருவிகற்பமென்னு மூவிதசமாதிகளையும்பழகவேண்டும்,

வினா. பாகியதிரிசயானுவித்தமாவதேதென்னில்,

விடை, அதிஷ்டானமாய்ச்சச்சிதானந்தமான பரப்பிரமவஸ்துவில்கற்பி

நாமரூபாதிசேர்த்து விளங்குகிறது எப்படியென்றால் நீர்ச்சியென்னை நெகிழ்ச்சி நுரைதிவலை யென்கிறபேருமொன்றுக்கூடின ஜலத்தை அலையென்பதுபோல சச்சிதானந்த நாமரூபங்களைந்து மொன்றுக்கூடின சொரூபத்தைப் பிரபஞ்சமென்று சொல்லப்படுகிறதென்று ஆரோபிதமான நாமரூபமிரண்டையுந் தள்ளி அதிஷ்டானமான சச்சிதானந்த சொரூபமாத்திரமாய்க் காண்பதே பாகியநிரிசயானுவித்தமென்றும் சச்சிதானந்தபிரமத்தைத் தவிர நாமரூபங்களில்லை யென்று நாமரூபங்களைம்வறுபடுத்தி அதிஷ்டான சொரூபத்தி லாரோபிதங்களை யடக்கப்பண்ணி அதிதொய்த வஸ்துவே நானென்று சதாபஜனை பண்ணவேண்டியது.

பிர. இதற்கனுபவமெப்படியென்னில்.

விடை, இந்தப்பஞ்சபூதங்களும்பஞ்சபூதகாரியங்களும் நானல்ல இவைக்கெல்லாமதிஷ்டானமாகியும்விசுத்தமாகியும் சத்தாகியுமிருக்கிற பிரமமேநானே அதுமல்லாமல் காணப்பட்டபதார்த்தங்களும் குணங்களும் கிரியைகளுஞ்சப்தாதிபஞ்சவிடயங்களும் இந்திரியங்களும்பிராணனும்மனமும்புத்தியும் அகங்காராதிகளும் நானல்ல இவைக்கெல்லா அதிஷ்டானமாகியும் ஏகமாகியும் விசுத்தமாகியும் சத்தாகியும் பரமாத்மாவாகியுமிருக்கிற பிரமமேநான் நிரிசயமான நாமரூபங்களெல்லாம்பொய் அதற்கதிஷ்டானப்பிரமமேசதாசத்திய மென்றுபாவித்துநடக்கும்போதும் இருக்கும்போதும் சதாத்தியானித்திருக்கவேண்டும் இதுவே பாகியநிரிசயானுவித்தசவிகற்பசமாதி.

பிர, பாகியசத்தானுவித்தமாவதேதென்னில்,

விடை. அதிஷ்டானமானசச்சிதானந்தத்தில் கற்பிதமான நாமரூபங்களை லயம்பண்ணி நிருமலமாகியும் அத்தொய்தமாகியும் பரமானந்தமாகியுமிருக்கிறபிரமமே நானென்கிறபாவனையைப் பொருந்தியிருப்பது பாகியசத்தானுவித்தம்.

பிர. இதற்கனுபவமெப்படியென்னில்,

விடை, நிருவிகாரமாகியும் நிராகாரமாகியும் நிரஞ்சனமாகியும் அரூ
பமாகியும் ஆதியந்தரகிதமாகியும் சத்தியமாகியும் சுத்தமாகியும்
புத்தமாகியும் சூக்ஷுமமாகியும் பரமாகியும் பிரத்தியேகாத்மாவாகியும் அ
கண்டமாகியும் சொப்பிரகாசமாகியும் சிதாகாசமாகியும் அத்துவிதசொரூ
பமாகியும் நிருவிகற்பமாகியும் கேவலமாகியும் பரமாத்மாவாகியுமிருக்கிற
பிரமமே நான் இதிற்சந்தேகமில்லையென்று நிருவிகாராதி சத்தங்களு
டன்கூடிக்கேவலமான வஸ்து லட்சியத்தில் மனதை நிறுத்தித் தியானம்ப
ண்ணவேண்டும் இதுவே பாகியசத்தானுவித்தசவிகற்ப சமாதி.

வினா, பாகியநிருவிகற்பமாவதெவ்வெனில்.

விடை, பிரமானந்தபரவசத்தினுல் சப்தரூபத்தோற்றமடங்கிப்போய்க் கலந்துட
றத்திற்சகலகிரியைகளுமற்று நிச்சலமாயிருப்பதே பாகியநிரு
விகற்பம் இப்படிப்பட்ட யோகியானவன் எழுந்திருக்கும்போதும் இரு
க்கும்போது மனமாகலிந்திரியநிக்கிரகம்பண்ணிச்சாவதானமாய் இந்தச்
சமாதியாறையுஞ்செய்யவேண்டும்.

வினா. எவ்வளவுகாலஞ்செய்யவேண்டுமென்னில்.

விடை. எவ்வளவுகாலம் விபரீதபாவனை போகவில்லையோ அவ்வளவுகால
ஞ்செய்யவேண்டும் மேலும் மோட்சதாகியானவன் அந்தர்பாகி
யமானவிட்விதசமாதிகளையும் ஒருக்காலுமறந்திருக்கப்படாது மறப்பா
னுனல் சூரியனில்லாதவிடத் திருள்மூடிவதுபோல சொரூபமான நற்பி
ரகாசத்தை மாயையாகிய இருள்மூடிக் கொள்ளும் ஆதலால் தடையற்ற
சொரூபானுவப்பிரகாசமானது எவ்வளவுகாலஞ் சித்திக்கவில்லையோ அ
வ்வளவுகாலமும் இந்தவாறுவகைச்சமாதியில் நிரந்தரம்பொழுது போக்
கவேண்டும் பெரியோர்களானபேர் சுவானுபவத்தைவிட்டு க்ஷணப்பொ
ழுதும்பிரிந்திருப்பதில்லை சுவானுபவத்தைமறந்திருப்பதே மிருத்தியு இது
வல்லாமல் வேறேமிருத்தியுவில்லையென்று சுருதிஸ்மிருதிகளிற் சொல்
லுகின்றது ஆதலால் இந்த அறுவகைச்சமாதியிலும் எவன்பழகுகிறானோ
அவன்மனதிற்கொருவிகற்பமுந்தோற்றாது இந்தஅப்பியாசத்தினுல் ச
ர்வாத்மபாவஞ்சித்திக்கும் - இதுவே கைவல்யம், சர்வாத்மபாவம் பொருந்

[illegible]னதேபிரயவித்திராயலென்றுபெரியோர்கள்சொல்லுவார்கள் சிவன் மூர்த்தனுக்குச் [illegible]ருயிருக்கிற ஆனந்தானுபவமேபிரயோசனம் [illegible]க்கு [illegible] மூலமாகிய அசத்தைத்கிரகிக்கிறதே இருதய [illegible] இந்த இருதயக்கிரந்தியானது சமாதியில் வாசனையோடு நசித்து [illegible] பிரயமே [illegible]யிருக்கிற சுவானுபவந்தலையற்று விளங்கும் [illegible] நாணவழியென்று பெரியோர்கள் சொல்லு வார்கள் இ[illegible] [illegible]யிருக்கிறவர்களுக்குச் சதாகாலமும் [illegible] ஆகலால் [illegible] [illegible]யும் நமுப் அப்பியாசித்து இருதய [illegible] பிரமானந்தாமிர்தசமுத் [illegible] சந்தோஷிகரமாய்விருத்திசகுசல [illegible]யிருக்கிறதே நிருவிகற்பசமா[illegible] இந்த நிருவிகற்பசமா [illegible] [illegible] இடைவிடா[illegible] [illegible]ன்.

வி[illegible] [illegible] [illegible]டப்படுதப்படியென்னில்,

விடை, [illegible] [illegible]ருதயமான [illegible] [illegible]ரயவிலட்சணை[illegible] [illegible] இப்படி [illegible]யான [illegible] [illegible] [illegible] விடயங்களையும சந்தானம் பண்ணுகிற [illegible] [illegible] சந்தானம் பண்ணுகிற [illegible] [illegible]சொல்லுகின்றது ஆதலால் [illegible] [illegible]டாகிலும் சத பிரயத்தனமுடன் [illegible] நிருவிகற்ப சமாதிய [illegible] - இவையடைந்தவனே பவபந்தச்சுழலி னின்று விடுபட் டவன்,

வினா, பவபந்தமாவதேதென்னில்,

விடை, அவித்தை ஆகம்கன்மமாகியமூன்றும் சீவர்களுக்குப் பவபந்த மென்றுசொல்லப்படும் இது நிருவிகற்பசமாதியினாலன்றி வே றொன்றினாலும் நீங்காது இதற்குநான்குவிரோதமுண்டு.

வினா. நான்குவிரோதமாவதேதென்னில்,

விடை. லயம்விட்சேபம்காஷாயம்ரசாஸ்வாதம் என்பதுகளாம்,

வினா, லயமாவதேதென்னில்,

நிருவாணப்பிரகரணம்.

விடை, அகண்டாகாரவிருத்தி தமோகுணத்துடன் கூடி அகண்டவஸ்துவிற்கூடாமல்நித்திரைவருகிறதே லயம்.

விரு. இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்,

விடை. பூவைபுத்தியினால் லயத்தைப்போக்கிவிருத்தியை நிருமலப்பண்ணிப்பிரத்தியகாத்மஅபிமுகமாய் நாடவேண்டியது,

விரு. விட்சேபமாவதேதென்னில்,

விடை, அப்படிவஸ்துநிலையில் நாட்டுகிறபோது அகண்டாகாரவிருத்தி ராசதகுணகோபத்தினால் அந்தநாட்டத்தில் நில்லாமல் விடயநாட்டத்திலபிமுகப்படுவதேவிட்சேபம்.

விரு, இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்.

விடை, அகண்டாகாரவிருத்தியினால் தானே விடயங்களிலுள்ள தோஷங்களையாரோபித்து அதைப்பிரத்தியகாத்மவபிமுகப்படுத்தி நிற்கவேண்டும்,

விரு. காஷியமாவதேதென்னில்,

விடை, அகண்டாகாரவிருத்தியானது ராசததாமதகுணங்களால் கூடப்பட்டு லட்சியமானபரதத்துவத்திலு பொட்டாமல் பிரபஞ்சவிடயத்தையுநாடாமல் ஸ்தம்பம்போற்கத்தலுடையாயிருக்கப்படுகிறதே காஷியம்,

விரு. இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்,

விடை, அகண்டவஸ்துவின்சுகத்தையும்அதன்பகிமையையுஞ்சொல்லுதலவும் கிரிசயங்களெல்லாந் துச்சமென்று போதிப்பதாகவுமிருக்கிறவேதாந்த சாஸ்திரார்த்தங்களை யடிக்கடிவாக்கினுற்செலுத்தவேண்டியது.

விரு, ரசாஸ்வாதமாவதேதென்னில்,

விடை, அகண்டாகார விருத்தியானது தான்வைத்த நாட்டத்திலிராமல் பூர்வவாசனாவேகத்தினால் சவிகற்பமானவ்ஷேரசங்களைப்பொசிக்கப்போகிறதே ரசாஸ்வாதம்,

விரு, இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்.

விடை, வயிராக்கியபுத்தியினால்விஷயங்களிலபிமுகப்பட்டவிருத்தியைத்திருப்பிப்பிரத்தியகாத்மவபிமுகமாய் நிறுத்தவேண்டும்-இந்தவிரோதங்களன்றிப்பின்னும் பலவிரோதங்கள் வந்தாலும் தியானசமாதியினால் அந்தவிக்கினங்களைப்போக்கி நிருவிகற்பசமாதியையே அட்டி

ப்பறநினைத்தமூர்த்திப்பிரமாணுவாய்ப் பேரொளியாய்நின்றவிடமே முத்தி
யென்றும் முப்பாழுங்கடந்த விடமே முத்தியென்றும் சுதந்தரிய[illegible]
நீங்கினவிடமேமுத்தியென்றும் சகல [illegible]
விடமே முத்தியென்றும் மனோலயமானவிடமே முத்தியென்றும் இ[illegible]
பாதீதமே முத்தியென்றும் காமம்வெகுளிமயக்கமென்னு முக்குற்றங்க
ளுநீங்கினவிடமே முத்தியென்றும் பலஞானசாஸ்திரங்களிற் கூறப்பட்
டிருக்கின்றது இதுகளெல்லாம் அபரோக்ஷ சாக்ஷாத்காரவானந்தானு
பவத்திற் சமமாயிருக்கும்-இதுவுமல்லாமல் வேதியாகியமாயா பறமதங்க
ளில் ஸ்திரீசையோகமே முத்தியென்று [illegible] மதிமயங்கி
யென்றும் திரிகுணமடங்குவதே முத்தியென்றும் இருவினை[illegible]
தேமுத்தியென்றும் பாஷாணமாயிருப்பதே முத்தியென்றும் [illegible]
முண்டாவதே முத்தியென்றும் [illegible] முத்தியென்று
பலவிதங்களாகச்சொல்லுவதெல்லாம் [illegible] பெரியோ
ர்சொல்லுவார்கள். அபரோக்ஷ சொரூப சாக்ஷாத்காரமாகிய [illegible]
துபாவகத்தினால் சொரூபவியாபகத்திலே [illegible]
றிலும் மற்று நிச்சலானந்தமாயிருப்பதே மவுனசிவமாய்விளங்கும் [illegible]
றபமான விதேகமுத்தியென்றறியவேண்டியது-சித்தம். மோக்ஷ[illegible]
பங்களை அடைந்த தீவிரபக்குவனான ஒருவன் [illegible]
ங்களைச்செய்வதனால் இருவினையொப்புண்டா[illegible]
அதனாற்சத்திநிபாதப்பட்டு சற்குருதரிசனம் [illegible]
தில் அவனுக்குயிர்க்குயிராய் நின்ற [illegible] பிரமமே திருவுரு
யினாற் சகளீகரித்து ஆசிரியமூர்த்த[illegible] பிரம்மாபதே
சமான ஞானதீக்ஷைசெய்து ஞானசாஸ்திரார்த்தங்களைப்போதித்தருளு
ம் அதைக்கேட்டுச்சிந்தித்துத்தெளிந்து ஞானநிஷ்டைகூடி நிருவிகற்ப
சமாதிபொருந்துமோக்ஷசாந்தியடைந்துதான் பெற்றபேறு உலகம்பெ
றவேண்டுமென்னுங்கருத்தால் உலகத்தில் சதாநிஷ்டாபரனாகிய சீவன்மு
த்தனாய்வசித்திருப்பன் அந்தமகானுபவனால். பின்னுள்ளபக்குவர்களு
க்கும் உபதேசமுதலானதுகளுண்டாம் இதற்சந்தேகமில்லை யென்றறிய
வேண்டியது-சித்தம்.

ஆறாவது - உபசாந்திப்பிரகரண முற்றிற்று.

துவந்தசாரமுற்றும்.